Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 28 13-12-2002 வெள்ளிக்கிழமை ஓசை 298

C.B.I புகையிரத நிலையம் முன்பாக வவுனியா

முதற்தர முன்பள்ளி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த போதனையின் கீழ் 2003 கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

தரம் - 01 தொடக்கம் O/L வரை

ஆரம்பம் :- 15-12-2002

நிர்வாகி


திரு.எஸ்.தவபாலன்.

(2664)











# 2002 மாவீரர் நாள்



## நம்மவர்கள் வாழும் தேசங்களில்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 13.12.2002

## தீர்வு நகர்வின் திருப்பத்தில்...

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளரான 'கன்வால்சிபால்' இந்த வாரத்தில் கொழும்பு வந்து சென்றுள்ளார். இவர், இந்தியா அண்டை நாடுகளுடன் உயர் நிலைக் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளும் ஒரு வழமையான நடைமுறையின் அடிப்படையிலேயே அத்தகைய முயற்சியின் ஒரு பகுதியாகவே -கொழும்புக்கு வருகை தந்ததாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் அநுரா பண்டாரநாயக்கா தலைமையில் சிறிலங்கா எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களின் குழுவொன்று டெல்லி சென்று சோனியா உட்பட சிலரைக் கண்டு பேசி, பிரதமர் வாஜ்பாயிடம் சனாதிபதியின் செய்தியொன்றையும் கையளித்தமை தெரிந்ததே.

இந்த விஜயம் முடிந்த 'சூட்டோடு சூடாக' கன்வால் சிபாலின் கொழும்பு வருகை நிகழ்ந்துள்ளது. அவர் சனாதிபதியையும் பிரத மரையும் வேறும் சில பிரமுகர்களையும் சந்தித்து பேசியுள்ளார்.

அதுவல்ல முக்கியம், தமிழர் தேசிய கூட்டணியினரைத்தவிர்த்து ஏனைய மாற்றுக்குழுவினரையும் சந்தித்து பேசியுள்ளார் என்பது தான் முக்கியம். அவர்களின் பேச்சுவார்த்தைகள் மூலம் குறித்து எதுவும் வெளியிடப்படவில்லை. அப்படியே வந்தாலும் கூட அதில் எந்தளவு உண்மையிருக்கும் என்று கூறிவிடமுடியாது.

பேச்சுக்களின் போது தமிழர் தேசியக் கூட்டணி ஏன் தவிர்க் கப்பட்டது. அல்லது அது ஏன் இணைந்து கொள்ளவில்லை என்பதற்கும் காரணம் தெரியவில்லை.

சனாதிபதியுடனான அவரது உரையாடலின் போது அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை சரியான பாதையில் செல்ல வில்லை என்று அவர் கூறியதாகத் தெரிகிறது. இதே தொனிப்படவும், சமாதான நகர்வுகளில் இந்திய நலன்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் சந்திரிகா குற்றஞ்சாட்டியும் இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதத்தை அவர் கடந்தவாரம் அனுப்பியிருந்தார்.

இதேவேளை, இந்தியாவின் பிரபல்யமான ஹிந்து ஆங்கில நாளேடு இலங்கைப் பிரச்சினையில் வெளியார் தலையீட்டை இந்தியா விரும்பவில்லை என வெளியிடப்பட்ட கருத்தை வெறுமனே ஒரு பத்திரிகையின் தனிப்பட்ட கருத்தாக உதாசீனம் செய்து விடமுடியாது. வெளியுறவு தொடர்பான விடயங்களில் ஒரு பத்திரிகை தேசத்தின் பேரில் சுயாதீனமாக ஒரு கருத்தை வெளியிட்டுவிட முடியாது.

இந்தியா - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் பின் தள்ளப்பட்டுள்ளது. என எவரும் கூறினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ ஒருபோதும் சமாதான முயற்சிகளின் எதிர்காலத்திலும் இந்தியாவின் நட்பை சேதப் படுத்தும் முறையில் நடந்து கொண்டது கிடையாது.

தற்போதும் கூட பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் சிறிலங்கா அரசும் சரி நோர்வேயும் சரி, பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் முன்னேற்றங்கள் குறித்து உடனுக்குடன் இந்திய அரசுக்கு விளக்கமளித்து வருவதுடன் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்த ஆலோசனைகளையும் பெற்றுவருகிறார்கள் என்பது வெளிப்படையான விடயமாகும்.

எனவே அநுராவின் விஜயத்தின் உள்நோக்கத்தையோ, சந்திரிகாவின் முறைப்பாட்டின் பின்புலத்தையோ, இந்தியாவுக்கு உணரும் திறன் இருக்காது என்று எவரும் நினைத்தால் அது தவறானதாகும்.

இதேவேளை 'அரசியல் நீரோட்டத்திற்கு விடுதலைப் புலிகள் வரநேர்ந்தால் இந்தியா அவர்களுடன் உறவுகளை மேற்கொள்ளவேண்டி வரலாம்' என இந்தியாவின் முன்னாள் சிறிலங்காவுக்கான தூதுவரும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆழமானதும் பன்முகப்பட்டதுமான அநுபவங்களை உடையவருமான ஜே.என்.டிக்ஸிற் கூறியுள்ளார்.

இந்தவிடயம் கவனத்தில் கொள்ளவேண்டியதொன்றாகும்.


மாறிவரும் சர்வதேச ஒழுங்கும், அரசியல் சூழலும், புவிசார் அரசியல் தேவைகளும், டிக்ஸிற் அவர்களின் கருத்துக்களுக்கு காரணமாக இருக்கலாம். "இப்படியானதோர் சூழல் உருவாகும் பட்சத்தில் இந்தியா அதனை எதிர்கொள்ளத்தயாராக வேண்டிய நிலை ஏற்படலாம்' எனவும் அவர் கூறியுள்ளமை யானது 'ஒஸ்லோ' பேச்சுவார்த்தைகளையடுத்து வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு இன்றும் ஒருபடி மேல் சென்று, இந்திய வெளியுறவுச் செயலர், 'அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் திருப்தி அளிப்பதாக உள்ளது. இதன் முடிவில் எவ்வாறான தீர்வு எட்டப்பட்டாலும் அதனை இந்தியா வரவேற்கும். மகிழ்ச்சியடையும். ஆனாலும் மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக தலையீடு செய்யாது' என்று கூறியுள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில், சனாதிபதியின் முறைப்பாடும், மாற்றுக்குழுக்களின் ஆலோசனைகளும், சமாதானம் குறித்த இந்தியாவின் அணுகு முறையில் ஏதாவதுமாற்றங்களை ஏற்படுத்துமா என்பது குறித்து எதுவும் உடனடியாக கூறிவிட முடியாது.

தென்னாசியப் பிராந்தியத்தில் சமாதானமும் அமைதியும் நிலவுவது இந்தியாவின் நலன்களுக்கு மிக மிக அவசியமானதாகும். குறிப் பாக சிறிலங்காவில் தமிழ் மக்களின் பிரச்சினை நியாயமான முறையில், கௌரமான வழி களில் தீர்க்கப்படுவதில் இந்தியா தனக்குள்ள பொறுப்பை தவறான வழிகாட்டல்களால் இழந்துவிடக் கூடாது.

## தூரனின் பார்வையில்





# தீர்வு முயற்சிகளை திசை திருப்ப முயலும் தீய சக்திகளும்

# அவர்களை இனங்காண வேண்டிய சர்வதேச சமூகமும்





இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வொன்று குறித்து ஆராய்வதற்கு சிறில ங்கா அரசாங்கமும், அதாவது ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலானஅரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணக்கப்பாடொன் றிற்கு வந்துள்ளமையானது அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிரான அனைத்து தரப்பினருக் கும் எதிர்பாராத அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதே சமயம் இந்த இணக்கப்பாடானது பெரும்பா லான- சர்வதேச நாடுகளின் பெருத்த வரவேற்பையும் பாராட் டையும்பெறவும் தவறவில்லை.

சமாதானத்திற்கு எதிரான அனைத்துத் தரப்பினர் என்று முதலில் குறிப்பிட்டமையானது உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள அனைத்துச் சக்திகளையும் உள்ளடக்கும். உள்ளூரிலும் சரி- வெளிநாடுகளிலும் சரி இந்த அமைதிக்கு எதிரான சக்திகள் யாவும் தமது சுயநல- அதிகார அரசியல்- மற்றும் பிராந்திய வல்லாதிக்கப் பாதுகாப்பு, ஆகியவற்றின் அடிப்படையில் தான், சிறிலங்காவின் இனப்பிரச்சினையை கையாளு கின்றார்கள் என்பது என்றும் இரகசியமான விடயமல்ல.

ஆதரவு வழங்கும் நாடுகளுக்கும், சமாதானத்தின் மீதான அக்கறை என்பதும் அமைதிக்கு வழங்கும் அங்கீகாரம் மென்பதும் கூட, வெறுமனே பிரச்சினைக்கான தீர்வொன்று எட்டப்படவேண்டும் என்பதை மட்டுமே இலக்காக உள்ளது என எவரும் நம்பிவிட மாட்டார்கள். இங்கேயும் கூட அரசியல் சார்ந்த அக, மற்றும் புறநோக்கங்கள் இருக்கவே செய்யும்.

இதனைப் புவிசார் அரசியல் ஆய்வாளர்களும், நோக்கர்களும் அறிவார்கள் இதுவும் கூட இரகசியமான விடயமல்ல பரவலாகப் பேசப்படும், ஆராயப்படும் விடயம்தான்.

ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் இறைமை மற்றும் தேசிய இனங்களின் அரசியல் உரிமை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஆழ்ந்த அக்கறையும் அளவு கடந்த பொறுப்புணர்வும் கொண்டு அவை தொடர்பான பிரச்சினைகளின் இணக்கத்தை ஏற்படுத்த முயலும் அனைத்து சக்திகளுக்கும் இந்த பரந்த மனப்பான்மையானது இயல்பாகவே உள்ள சனநாயக- மற்றும் மனிதநேயப்பண்பின் அடிப்படையில் தான் வந்தது என எவரும் கூறப்போவதுமில்லை.

ஏனெனில் இந்த சக்திகள் அனைத்திற்குமே எல்லை கடந்து எல்லாவற்றினுள்ளும் ஊடுருவி ஆதிக்கம் செய்யும் அளவற்ற அபிலாசைகள்- விகிதாசார அளவில் வேறுபட்டாலும்- இருக்கவே செய்கின்றன.

இது சர்வதேச அரசிய லுக்கே உரிய ஒரு பொதுப் பண்பா கவும் ஆகிவிட்டது. மாறிவரும் உலக அரசியல் சூழலில் இதன் வேகத்திற்கும், தாக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் ஆட்படாத நாடுகளோ- மக்களோ இல்லை. இதனை தொலைநோக்கு சிந்தனை யுடனும், தீர்க்கதரிசனப் பார்வையு டனும் அணுகி அல்லது எதிர் கொண்டு சமாளித்தல் என்பது மிகவும் சாதுரியமாக கையாள வேண்டிய சதுரங்க விளையாட்டா கவே உள்ளது.

சிலங்காவின் இனப்பிரச்சி னைக்கான தீர்வுக்கான முயற்சி களும்,முன்னெடுப்புக்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது கடந்த இரு தசாப்பத காலப்பகுதிக்குள் எத் தனை திருப்பங்களையும், இடர் களையும், நினைக்கவே பிரமிப்பை ஏற்படுத்தும் பாய்ச்சல் நிலைமை களையும் சந்திக்க நேர்ந்ததோ அதே போன்ற நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டத்தை எட்டியுள்ளதாகவே கூறவேண்டும்.

கடந்த ஓராண்டுகால நகர் வுகளை ஒரு மீள்பார்வை செய் தாலே இதனை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கரணம் தப்பினால் மரணம்- என்ற நிலையுடன் கூடிய கத்தி முனை யில் நடப்பது போன்ற துல்லி யமான நிதானத்துடன் கூடிய- ஒரு இராஜதந்திர யுத்தத்தினை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், தமிமீழ விடுதலைப் போராட்டமானது மிகவும் அதிக கேந்திர முக்கியத்துவமிக்கதான இலக்கில் தனது கவனம், ஆற்றல், என அனைத்தையும் குவிமையம் கொள்ள வைத்துள்ளது.

உலக சமூகம் எங்களை நோக்கிய பார்வையை கூர்மை யாக்கி விசாலப்படுத்தவும் செய்துள்ளது.

எமது பிரச்சினையை, அரசியல் அபிலாஷைகளை, அதனை எட்டுவதற்கான நியாய மான எமது போராட்டத்தினை விரிவாக அறிந்து கொள்ளவும், எமது போராட்டம் குறித்த தமது கடந்த கால - சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பிரசாரத் திணிப்பினால் ஏற்பட்ட கருத்து நிலைப்பாட்டினை மீள்பரிசீலனை செய்து கொள் ளவும், பயங்கரவாதம்- பயங்கர வாதிகள் என உருவாக்கப்பட்ட ஒரு ' மாயை' யைக் கடந்து வந்து எங்களுடன் கைகுலுக்கவும், பேசவும், கலந்துரையாடி எமது நிலைப் பாட்டை, அபிலாஷையை, ஆதங்கத்தை. சமாதானத்தின் பாற்பட்ட எமது விருப்பார்வத்தை புரிந்து கொள்ளவும் உலக நாடுகள் முன்வந் துள்ளமையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கிடைத்துள்ள மிகப் பெரியவெற்றி மட்டுமல்ல , தமிழினத்துக்கே கிடைத்த வெற்றியுமாகும்.

இந்த வெற்றிக்குத் தமிழினம் கொடுத்துள்ள விலை மிக மிகப் பெரியது. பதினேழாயிரத்துக்கும் அதிகமான மாவீரர்கள், பல்லாயிரக் கணக்கான போராளிகள், பொது மக்கள் அனைவரினதும் அளப் பரிய வீரம், தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் உறுதிமிக்க தளத்தில் நின்றே இந்த வெற்றி ஈட்டப்பட்டுள்ளது.

இன்னமும் ஒரு தீர்க்கமான அரசியல் தீர்வு எட்டப்படாத நிலையில் அதற்கான அடித்தள நிர்மாணம் உறுதியாகப் போடப் பட்டு வருவதையே தாங்க முடியாத, அதனை ஆரம்பத்தி லேயே தகர்த்தெறிய நினைக்கும் சக்திகளின் - நேரடி மற்றும் மறைமுகச் செயற்பாடுகளும் பன்முகப்பட்ட திட்டங்களுடன் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கனடா ஒன்ராறியோவில் நடந்த, பேரினவாதிகளின் ஏற்பாட்டிலான தமிழின எதிர்ப்பாளர்களின் இரகசிய ஒன்று கூடல்,

- சமாதானத்திற்கு எதிரான பேரணிகளையும் ஏனைய பிரசாரங் களையும் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்வதற்கான நோக்குடன் கூடிய ஜே.வி.பி. யினரின் லண்டன் விஜயம்.

- பேச்சு வார்த்தைகள் இந்திய நலனை பாதிக்கும் என இந்தியா மீதான ஆழ்ந்த அக்கறையுடன், (!!??), இந்தியாவை தலையீடு செய்யவைத்தாவது அதனைக் குழப்ப வேண்டும் என்ற திட்டத் துடன் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் அநுராவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியின் 'கும்பல்' ஒன்றின் இந்திய விஜயமும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், சோனியா ஆகியோ ருடனான திடீர் சந்திப்பு...

- அரசு - புலிகள் இணக்கப்பாடு குறித்து ஆராய இந்திய வெளியு றவுச் செயலர் 'கன்பால் சிபாலி'ன் கொழும்புக்கான திடீர்விஜயமும், அவரின் சனாதிபதி மற்றும் மாற்றுக் குழுக்களுடனான இரகசியப் பேச்சுவார்த்தைகளும்....

- 'தற்போதைய தீர்வுத்திட்டத்தை விடவும் இந்தியாவின் திட்டம் சிறந்தது' என முன்னாள் - இந்திய- இலங்கை உடன்பாட்டுக்கான - இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் கூறியுள்ளமையும்.....

'அரசு - புலிகள் சமாதான முயற்சிகள் சரியான பாதையில் செல்லவில்லை' என இந்திய வெளியுறவுச் செயலரிடம் சனாதிபதி சந்திரிகா புலம்பியு ள்ளமையும்....

- சமாதான முயற்சிகளின் வெற்றிகரமான நகர்வுகளை குழப்பி மீண்டும் போரை ஆரம்பிக்க நினைக்கும், பேரினவா திகளை திருப்தி செய்து அவர்க ளின் ஆதரவுடன் நாட்டில் குழப் பத்தை உண்டுபண்ணி, அதனைக் காரணம் காட்டி, ஆட்சியைக் கலைத்து அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கும் சந்திரிகாவின் சமாதான முறியடிப்பு நடவடிக் கைகளின், பகிரங்க வெளிப் பாடகவே உள்ளது.

- இதேவேளை ரணிலின் அரசு பதவியேற்று ஓராண்டை நிறைவு செய்துவிட்ட நிலையில், ஆட்சியை ஏதாவது ஒருகாரணத்தை முன் வைத்து கலைக்கும் அதீத அதிகா ரத்தை சந்திரிகா எந்தச் சமயத்திலும் பயன்படுத்தக் கூடியநிலை வலுப் பெற்றுள்ளது.

- பொதுசன ஐக்கிய முன்னணியினர் புதிய அர சொன்றை அமைப்பதற்கான

(15ம் பக்கம் பார்க்க...)

தவறுகள் எதுவுமே செய்யாதவன், வழக்கமாக , வேறெதுவும் செய்வதில்லை. -எட்வர்ட் ஃபெல்ப்ஸ்

# சமாதானம் கொண்டு வந்திருக்கும் சவால்கள்

நிலாந்தன்

**இன்று** முடிவடையும் ஓ.எல் பரீட்சையோடு இன்னுமொரு தொகுதி யாழ்ப்பாணத்தவர் வன்னியிலிருந்து ஊர் திரும்பக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புதுவருசத்தோடு மிஞ்சியிருக்கும் யாழ்ப்பாணத்தவரிலும் குறிப்பிடத்தக்களவு தொகையினர் ஊர் திரும்பும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து வன்னியின் சிறுபட்டினங்களை நிறைத்தவர்கள் சொல்லாமல் கொள்ளாமலேயே போகிறார்கள்.

உதாரணமாக - மல்லாவியில் பிரபலமாயிருந்த ஒரேயோரு தனியார் ஆங்கில மருத்துவமனையும் சில கிழமைகளுக்கு முன் போய்விட்டது.

பிரபலமாயிருந்த ரெயிலர்கள் படிப்படியாகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்..

பிரபலமாயிருந்த மெக்கானிக்குகள் போய்விட்டார்கள். அவர்கள் ஒன்றில் அநேகமாக யாழ்ப்பாணம் போகிறார்கள் அல்லது கிளிநொச்சிக்குப் போகிறார்கள்.

பாடசாலைகளில் மாணவர் தொகை வீழ்ச்சியுற்றுவரும் அதேசமயம் பிரபலமாயிருந்த ஆசிரியர் பலரும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இது திடீரென்று இச் சிறுபட்டினங்கள் பொலிவிழந்து விட்டன போல ஒரு தோற்றத்தைத் தருகிறது.

ஒரு வன்னியர் கூறினார்- ஊர்திரும்பும் சனங்கள் தாங்கள் வசித்த மண்வீடுகளை சம்பிரதாயங்கள் நம்பிக்கைகளின் பிரகாரம் இடித்துவிட்டுப் போகிறார்கள். இது வெளியிலிருந்து வந்து பார்க்கும் யாருக்குமே வன்னிக் கிராமங்கள் ஏதோ பாழடைந்து விட்டன போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுக்கிறது என்று.

இப்படி வன்னியிலிருந்து ஊர்திரும்பும் சனங்கள் ஒருபுறம். இன்னொருபுறம் வன்னியிலிருந்து வெளியே போய்வரும் வன்னியர்கள். இவைதவிர புலம்பெயர்ந்து போனவர்களும் நாடு பார்க்க வந்து போகிறார்கள்.

இவையெல்லாம்சேர்ந்து கடந்த சுமார் பத்து மாத காலமாக வன்னி நொதித்துக்கொண்டேயிருக்கிறது.

வந்துபோகும் சனங்களும் போய்வரும் சனங்களும் பரஸ்பரம்அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும்பகிர்வதோடு முக்கியமாகபரஸ்பரம் வாழ்க்கைத் தரங்களை மதிப்பிடுகிறார்கள். ஒப்பிடுகிறார்கள்.

இதில் பிரச்சினையாயிருப்பது என்னவென்றால் இந்த ஒப்பீடு தான். சமாதானம் வன்னிக்குக் கொண்டு வந்திருக்கும் சவால்களில் அதிகமானவை இந்த ஒப்பீட்டின் பாற்பட்டவைதான்.

பளபளக்கும் பணக்காரக் கண்டி வீதி வழியாக டொல்ஃபின் கலாசாரம் வன்னிச் சிறுபட்டினங்களை வந்தடைகிறது.

யுத்தத்தால் அதிகம்பாழடைந்து போயிருக்கும் வன்னிச் சிறு பட்டினங்களோ இப்புதிய டொல்ஃபின் கலாச்சாரத்தோடு போட்டி போட முடியாது திணறுகின்றன.

இங்கே டொல்ஃபின் கலாச்சரம் எனப்படுவது தென்னிலங்கைப் பெருநகரங்களில் அதிகம் பாவனையிலிருக்கும் டொல்ஃபின் வகை வான்களை ஒருகுறியீடாகப் பயன்படுத்திக் கூறப்படும் ஒருவித நகர்ப்புற மனோ நிலையே.

இந்தவகை வான்கள் அங்கெல்லாம் அந்தஸ்தின் சின்னங்களாகக் காணப்படுகின்றன. ஒருவித மத்தியதர வர்க்க இடைமத்தியதர வர்க்க அபிலாசைகளின் குறியீடாக அங்கே டொல்ஃபின் காணப்படுகின்றது.



கண்டிவீதி திறக்கப்பட்ட பின் டொல்ஃபின்களும் இன்ரகூலர்களும் அலையலையாக வன்னிக்குள் வந்தன. அவை கொண்டு வந்த கொஸ்மோபொலிற்றன் அபிலாசைகளோடு- பெருநகர்ப்புற அபிலாசைகளோடு - போட்டிபோட வேண்டிய ஒரு நிலைக்கு இங்கே வன்னி மத்தியதர வர்க்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது

வெளிநாட்டுக்காசில் தங்கியிருக்கும் குடும்பங்கள் இந்தப்போட்டியில் ஓரளவுக்கு ஈடுகொடுக்கின்றன.

ஆனால் கீழ் மத்தியதரவர்க்க அரச ஊழியர்கள் மற்றும் விவசாயிகளின் நிலையோ பரிதாபம்.

டொல்ஃபின் கலாசாரத்தின் தாக்கத்துக்கிலக்காகி பல குடும்பங்கள்பெருநகரங்களை நோக்கி நகர்ந்துவிட்டன. நகரத்துடிக்கின்றன.

பல குடும்பங்களில் இதனால் பிரச்சினைகள், குறிப்பாக கீழ்மத்தியதர வர்க்கக் குடும்பங்களில் டொல்ஃபின் வேகத்துக்கு ஈடுகொடுத்து ஓடமுடியாத போதுண்டாகும் அதிருப்தியும் நிராசையுமாக சண்டைகள் சச்சரவுகள்.

யுத்தகாலத்தில் யுத்தத்தை ஒரு யதார்த்தமாக ஏற்றுக் கொண்டிருந்த போது கஸ்ரங்களாகத் தெரியாதவை பல இப்பொழுது கஸ்ரங்களாகத் தோன்றுகின்றன.

வசதிகள் மற்றும் வாழ்க்கைத்தரம் பற்றிய ஒப்பீடுகளால் பல கீழ் மத்தியதர வர்க்கக் குடும்பங்கள் அமைதியிழந்து விட்டன.

வன்னியிலிருக்கும் அநேகமான சிறுபட்டினங்கள் மேற்படி கீழ் மத்தியதர வர்க்கத்தைத்தான் அதிகம் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

பெருமளவு விவசாயப் பொருளாதாரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட சிறிய மற்றும் பெரிய குளக்குடியிருப்புகளின் மையங்களாகக் காணப்படும் இச்சிறுபட்டினங்களின் கொஞ்சநெஞ்ச சேமிப்பையும் யுத்தம் உறிஞ்சிவிட்டது.

பெருமளவு பாழடைந்து விட்ட இச்சிறு பட்டினங்கள் ஒஸ்லோவில் கடந்த மாதம் வாக்களிக்கப்பட்ட கடன் வந்து சேர்ந்தால்தான் மீட்சி பெறும் எனுமொரு நிலை.

திடீரென்று சனத்தொகை குறைந்துவிட்டதால் வர்த்தகமும் ஒப் பீட்டளவில் வீழ்ச்சியுற்று வருகிறது. றிவிரச கொண்டு வந்த வீக்கம் இப்பொழுது வற்றிக்கொண்டு போகிறது.

இந்நிலையில்-டொல்ஃபின் கலாசாரத்துக்கு ஈடுகொடுத்துத் தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் சக்தி இச்சிறு பட்டினங்களிடம் மிகக் குறைவாகவே காணப் படுகிறது.

இன்று பளபளக்கும் கண்டி நெடுஞ்சாலையின் சொகுசோடும் கவர்ச்சியோடும் இச்சிறு பட்டினங்களின் நலிந்த நிலையை ஒப்பிடும் போது சினாவின் சாங்காய் மாநகரமே தவிர்க்கவியலாதபடி நினைவில் வருகிறது.

சினாவின் சாங்காய் மாநகரம்தான் முதலில் சந்தைப் பொருளாதாரத்துக்குத் திறந்து விடப்பட்டது. அங்கேயுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களின் பளபளப்போடும் மினுக்கத்தோடும் சினாவின் சிறிய, சைக்கிள்கள் நிறைந்த விவசாயப் பட்டினங்களை ஒப்பிட்டால் எப்படியிருக்குமோ அப்படி.

கண்டிவீதி வழியே ஓடும் பகட்டான டொல்ஃபின்களின் மத்தியில் மல்லாவிக்கு வரும் தட்டி வான்கள் தட்டுப்படும்போது மனதில் இடறும் உதாரணமும் இதுதான்.

ஒருபுறம் கிளிநொச்சி ஒரு அரசியல்தலைநகரமாக எழுச்சி பெறுகிறது. இன்னொருபுறம் இன்னமும் சமாதானம் வராத வன்னிக் குக்கிராமங்கள் பல ஒஸ்லோ மாநாட்டில் வாக்களிக்கப்பட்ட காசுக்காகக் காத்திருக்கின்றன என்பதே மெய்நிலை.

பெருமளவு குளக்குடியிருப்புக்களாய் குறைந்த சனச்செறி வோடு தமது வயல்களும் கால்நடைகளுமாக வாழும் இந்த மக்களிடம் டொல்ஃபின் கனவுகளேதுமில்லை.

அங்கே மின்சாரம் இல்லை. தனியார் மருத்துவமனையில்லை. பிரபலமானவர்கள் அங்கிருந்து பெருநகரங்களுக்குப் போய்விடுகிறார்கள்.

அங்கெல்லாம் தெருக்கள் என்றழைக்கப்படுபவை மழைகாலத்து அறுத்தோடிகளே.

குறைந்தபட்சம் கீழ்மத்தியதர வர்க்க வாழ்க்கைத்தரத்தை அடைந்தாலேயே போதும் எனுமளவுக்கு போரினால் சிதைந்து சிதிலமாகிப் போயுள்ளன இக்கிராமங்கள்.

ஜெயசிக்குறுச் சமர்களின் போது எல்லைகாத்த கிராமங்கள் இவை.

முன்பு பண்டாரவன்னியன் காலத்தில் அவருக்கு ரகசியமாகச் சப்ளை செய்த கிராமங்கள் என்று முக்கொம்பன் பத்தினிப்பாய் போன்ற சில கிராமங்களின் பெயர்களை வன்னியர் கூறுவதுண்டு.


இன்று இக்கிராமங்கள் அடர்ந்த காட்டின் ஆழத்தே யாருடைய கவனத்தையும் அதிகம் ஈர்க்காது பின்தங்கிவிட்டன.

இவற்றின் கதி இனியெந்த ஒரு வன்னிக்கிராமத்துக்கும் வந்துவிடக் கூடாது என்ற கவலை வன்னியில் பரவலாக உண்டு.

ஆனால் எல்லாவற்றிற்கும் முதலில் வாக்களிக்கபட்ட நிதி கைக்கு வந்து சேரவேண்டும்.

அதைவிட முக்கியமாக - யுத்தத்திற்குத் திரும்பிச் செல்லவியலாத ஒரு வளர்ச்சிக் கட்டத்தை சமாதானம் அடையவும் வேண்டும் ★

# நெல்லியடி வன்முறை



நெடுந்தீவில் நிலை கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி தேசவிரோத சக்திகளுக்கு எதிரான யாழ்.மக்களின் மனக்கொதிப்பு ஆச்சரியப்படத்தக்க வகையில் தொடர்ந்து வெகுஜனப்போராட்டமாக நடந்துகொண்டிருக்கிறது.

நெடுந்தீவு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக வடமராட்சி நெல்லியடிப்பகுதியில் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் வெகுசனப் போராட்டத்தை முறியடிப்பதற்கு பொலிசார் மற்றும் ஈ.பி.டி.பி குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒன்பது பொது மக்களைக் காயப்படுத்தியுள்ளனர். இன்று நடந்து வரும் சமாதான முயற்சிகள் துரிதகதியில் நடந்து வரும் இவ்வேளையில் பொதுமக்களின் நியாயமான போராட்டத்தை நசுக்கஆயுதப் பிரயோகம் என்பது கடந்த கறைபடிந்த வரலாற்றை மறந்துபோய் இன்னும் இருப்பதையே காட்டுகின்றது.

தமிழ் மக்களை மென்முறை சார்ந்த போராட்டங்களை ஆயுத வன்முறை மூலம் நசுக்க முற்பட்டதன் விளைவே சிறிலங்கா இன்று தாய்லாந்து, ஒஸ்லோ என நாடுகள் நோக்கி அலையவேண்டியுள்ளது.

இந்நிலையில் இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் இருந்த தீவக மக்கள்சனநாயக வழியில் தமக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சக்திகளை அப்புறப்படுத்த முயலும்போராட்டங்களை நசுக்க முயல்வதானது



சிறிலங்காவில் சமாதானம் ஏற்படுவதை பாது காப்புத் தரப்பும் அவர்களை பின்னணியில் இருந்து இயக்கும் அரசியல் சக்திகளும் விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது.

அதோடு விடுதலைப்புலிகள் தற்போது தீவிர அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தங்களை ஓரங்கட்டிவிடுவார்கள் என்ற மனப்பீதியின் விளைவேயாகும்.

1956 தொடக்கம் தமிழ் மக்கள் வன்முறைகளை கண்டும் தமது நியாயமான கோரிக்கைகளை காலத்துக்குக் காலம் உலகிற்கு வெளிப்படுத்தியே வந்துள்ளனர்.

அந்த வகையில் நெடுந்தீவு மக்களுக்கு ஆதரவாக நெல்லியடியில் நடத்தப்பட்ட போராட்டத்தை ஆயுத வன்முறை மூலம் நசுக்க முயன்றாலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் ஆயுதப்படையினரால் ஒருபோதும்தடுக்க முடியாது என்பதை நிச்சயம் இனிவரும் காலங்களில் புரிந்து கொள்வர்.

மக்கள் தமது சுதந்திரமான அபிலாசைகளைத் தெரிவு செய்வதற்கு எத்தகைய அழுத்தங்களையும் எவரும் பிரயோகிப்பது சமாதான நல்லெண்ண சூழ்நிலைக்கு உகந்தல்ல.

சமாதான காலப்படுகொலைகளாக காஞ்சிரங்குடா, திருகோணமலை படுகொலை என்பவற்றைக் கடந்து இப்போது நெல்லியடியில் இன்னொரு படுகொலை முயற்சி நடந்துள்ளது.

இவ்வ ணர்த்தங்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்பேற்கவேண்டியது மட்டுமன்றி இதற்கு தகுந்த பதிலும் அளிக்கப்படவேண்டும். தவறும் பட்சத்தில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பொதுமக்களே கிளர்ந்தெழக்கூடும்.

சிறி. இந்திர குமார்

# நறுக்கென...

## அநுராவின் இந்தியாமீதான அக்கறை!



**சிறிலங்காவின்** அரசியல் கோமளி யார் என்றால் கண்ணை மூடிக்கொண்டு பதில்சொல்லிவிடலாம் அநுரா பண்டாரநாயக்கா தான் என்று....

அந்த அளவுக்கு அவரது அண்மைக்கால அரசியல் கோமளித்தனங்கள் அவரை இனங்காட்டியுள்ளது.

மிக அண்மையில் இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயை சந்தித்துப் பேசிய அநுரா தலைமையிலான குழு இலங்கைப் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளது. இப்போதைய சமாதானப் பேச்சு வார்த்தையில் இந்திய நலன்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் இப்பேச்சு வார்த்தை நகர்வுகள் இந்தியாவின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்றும் இவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்களாம். என்ன இந்தியப்பற்று இவர்களுக்கு....?

இருவாரங்களின் முன்னர்தான் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா இலங்கை இந்திய உடன்படிக்கையின் ஆயுட்காலம் முடிவடைந்துவிட்டதாகவும் அந்த உடன்படிக்கையில் கூறப்பட்டிருந்த வடக்கு கிழக்கு இணைப்பு இனிமேல் செல்லுபடியாகாதென்றும் தெரிவித்திருந்தார் என்பதை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அந்த உடன்படிக்கை கூட இந்தியாவின் பிராந்திய நலன்களைக் கருத்தில் கொண்டுதான் மேற்கொள்ளப்பட்டது என்பது அநுராவுக்கு தெரியாத ஒன்றல்ல.

அந்த உடன்படிக்கை செல்லாது என்று அக்கா சந்திரிகா கூறுகிறார். இப்போதைய சமாதான நகர்வு இந்தியாவுக்கு ஆபத்தானதென தம்பி அநுரா புலம்புகிறார். இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த தீர்மானங்கள், முன்னேற்றங்கள் குறித்து சிறிலங்கா அரசும், நோர்வேயும் உடனுக்குடன் இந்தியாவுக்கு தெரிவித்து வருவதுடன் அதுகுறித்த ஆலோசனைகளையும் பெற்றுவருவதென்பது ஒன்றும் ரகசியமான விடயமேயல்ல.....

நிலைமை இப்படியிருக்கையில் இந்தியாவுக்கு எதுவுமே விளங்கவில்லை என்று நினைத்து அநுரா குழுவினர் டெல்லிக்குப் போய் வாஜ்பாயிக்கு அறிவுறுத்த நினைத்ததுதான 'கோமாளித்தனமானது.

இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசி காணப்படும் தீர்வு இந்தியாவின் நலனுக்குக் கேடாகும் என அநுரா வலியுறுத்தி இந்தியத் தலைவர்களிடம் கூறியதன் மூலம் இந்தியத்தலைவர்களை ஏமாளிகள் என நினைக்கத் தலைப்பட்டிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அதுசரி, இலங்கைப்பிரச்சினையில் இந்தியத் தலையீட்டை , அதாவது இலங்கை இந்திய உடன்பாட்டை முன்னர் எதிர்த்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜே.வி.பியினருடன் இணைந்து செயற்படும் அநுரா இந்திய நலனைக்காக்க முயல்வதை அவர்கள் விரும்புவார்களா?

சிவப்புச் சட்டைக்காரர்களைத்தான் கேட்கவேண்டும்!

## சந்திரிகா என்ன செய்யப் போகிறார்?



**கடந்த** ஐந்தாம் திகசியுடன் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

இந்த ஓராண்டு காலப் பகுதியானது ரணிலின் ஆட்சியை மதிப்பீடு செய்து கொள்வதற்கு சந்திரிகா எடுத்த கால அவகாசமாகவும், அதேசமயம் அதே ஆட்சியைக் கலைப்பதற்கு விதித்திருந்த காலக்கெடுவாகவும் ஆய்வாளர்களால் கருதப்பட்டது.

இந்தக் கால எல்லை, நிறைவேற்று அதிகார விதிகளின் பிரகாரம் சனாதிபதிக்கு ஆட்சியில் இருக்கும் அரசு, தனக்கு அனுசரணையற்று, தனது எண்ணப் போக்கிற்கு முரணாக நடக்குமே ஆனால், ஏதாவது காரணங்களை முன்வைத்து, அதனை கலைப்பதற்கான அதிகாரத்தை வழங்குவதாக உள்ளது.

எனவே ரணிலின் அரசு எந்த நேரத்திலும் 'மரணத்தை' தழுவலாம் என்ற நிலை இப்போது ஆரம்பமாகிவிட்டது.

ஆட்சியை பொறுப்பேற்ற நாள் முதல், சனாதிபதியின் பொறுப்பிலிருந்த நிதி, பாதுகாப்பு உட்பட பல அமைச்சுக்களை பிடுங்கி கொள்ளும் நடவடிக்கைகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஆரம்பமான சந்திரிகா-ரணில் முரண்பாடு சமாதானப் பேச்சு வார்த்தை நகர்வுகள் முன்னெடுக்கப்படத் தொடங்கியதும் உச்ச நிலையை நோக்கி நகரத்தொடங்கியது.

சமாதான முயற்சிகளுக்கான சர்வதேச ஆதரவுப் பின்னணி- அதற்கு விடுதலைப்புலிகள் வழங்கும் கணிப்பீட்டுக்கு அப்பாற்பட்ட ஆதரவு சகல மக்களும் வழங்கும் ஒத்துழைப்பு ஆகியன உரிய இலக்கினை எட்ட உதவுமேயானால் பொ.ஐ.முன்னணியின் விலாசமே இல்லாது போய்விடும் என அச்சம் எதிர்க்கட்சியினருக்கு ஏற்பட்டிருப்பது உண்மையே....

இதன் எதிரொலியே, அதிகாரத்தை பயன்படுத்தியோ, அழுத்தங்களைப் பிரயோகித்தோ, ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள கட்சிகளிடையே உட்பிரிவுகளை பிளவுகளாக்கி பெரும்பான்மை பலத்தை இழக்க வைத்தோ, ஆட்சியை கலைக்கும் தந்திரோபாய மூலோபாயங்களை சனாதிபதி கையாளத் தொடங்கியுள்ளமையாகும்.

இன்னொரு பொதுத்தேர்தல் பொ.ஐ.முன்னணியை இந்தக் கட்டத்தில் அதலபாதாளத்துள் தள்ளிவிடும். சந்திரிகாவுக்கும் தெரியும்.

ஆட்சியை இப்படி தொடரவிட்டாலும் ஆபத்து.

திடீரெனஇந்தத் தருணத்தில் சரியான காரணமின்றி கலைத்தால் சர்வதேசத்தினதும், சிங்கள பெரும்பாண்மையினத்தவரதும் கண்டனத்திற்கும் எதிர்ப்புக்கும் உள்ளாக வேண்டிநேரிடும்.

சந்திரிகா இந்த நிலையில் என்ன முடிவெடுக்கப் போகிறார்?

சமாதானமும், சர்வதேசமும் எதிர்பார்த்திருக்கும் விடை இந்தக் கேள்விக்கானதே தான்....'

சந்திரிகாவே கூறுவது போன்று அடுத்துவரும் சில மாதங்கள் மிக முக்கியமானவவையே 'தான்....

## ஹக்கீம் அதாவுல்லா மோதல்: ஆட்சியை கவிழ்க்கும் சதியின் அங்கமா?



**சிறிலங்கா** முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் கடந்த சில மாதங்களாகவே நிலவிவந்த உட்கட்சிப் பூசல்கள் கடந்தவாரத்தில் உச்சக்கட்டத்தையடைந்து கட்சி இரண்டாக பிளவுறும் நிலைக்கு வளர்ந்துள்ளது. முஸ்லிம் மக்களின் எதிர்கால அரசியல் நிலையின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பதவி மோகமும், அதிகார மோகமும் சிறுபாண்மையினரிடையே பிரிவுகளை உருவாக்கி பிரித்தாலும் தந்திரோபாயத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற பேரினவாதிகளுக்கு சுலபமான காரணிகளாகிவிடுகின்றன.

தீர்க்க தரிசனமற்ற அணுகுமுறைகளும் , சுயநல அபிலாசைகளும்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிளவுக்கு காரணமாகும் தவிசாளர் அதாவுல்லாவுக்கும் அமைச்சர் ரவூம் ஹக்கீமுக்கும் இடையேயான மோதல் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே பெரும்அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடரும்வேளையில், ஒன்றுபட்டு சமகால அரசியல் யதார்த்த நிலைமைகளை மதிப்பீடு செய்து முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயல வேண்டிய தருணத்தில், தலைமைத்துவ மோதல் ஏற்பட்டுள்ளமையானது கட்சியின் எதிர்காலத்தை மட்டுமல்ல கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்று கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர்.

இந்த மோதலின் பின்னிணியில் இயங்கி முரண்பாடுகளை தீவிரமாக்கியதில் ஒரு மறைமுக சக்தி இருப்பதாகவும், இச்சக்தி விரைவில் மக்கள் மத்தியில் இனங்காட்டப்படுமென்றும் -அரசைக்கலைப்பதற்கு அல்லது அதனைப் பெரும்பாண்மைப்பலத்தை இழக்கப்பண்ணி பதவி விலகச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் சதியின் ஒரு பகுதியே இதுவென்றும் ரவூப் ஹக்கீம் தரப்பில் கூறுப்படுகிறது.

யுத்தத்தை மீளத்தொடங்கவும் , சமாதான நடவடிக்கைகளைக் குழப்பவும் இச்சக்திகள் முயன்று வருவதாகவும் கூறும் மேற்படி தரப்பினர் தீய சக்தியைப் பகிரங்கப்படுத்த காலதாமதம் செய்வதுதான் புதிதாக இருக்கிறது.

பொதுசன ஐக்கிய முன்னணிதான் அந்த தீய சக்தி என்பது சொல்லாமலே தெரிகின்றபோது சுற்றி வளைப்புக்கள் ஏன்?

முஸ்லிம்களின் காங்கிரஸ் கட்சிதான் இதற்கும் விளக்கம் தரவேண்டும்.

## மதவடி மயிலர்



செய்தி: புலிகளும் அரசும்இணக்கம் கண்டுள்ள சமஷ்டி ஆட்சிமுறையில் சிக்கலுள்ளது என்றார் பொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகம.

மயிலர்: சிக்கலான ஆள் சிக்கலிலுள்ளது என்று கூறும்போது எந்தச்சிக்கலுக்குள் மாட்டிவிட நினைக்கிறார் என்பதுதான் பயமாயிருக்கு பாருங்கோ... பிரச்சினை தீர்ந்திட்டுதெண்டா அரசியல் யாவாரம்செய்ய முடியாததெல்லே... அதுதான் சமஷ்டி ஆட்சிமுறை எண்டு சொன்னவுடனேயே அமுனுகம ஐயா அந்தரப்படுகிறார்.... அதுசரி அரிசியே உலையிலை போடேல்லை அதுக்குள்ள சாப்பாடு சரியில்லை என்றால் எப்படி?

செய்தி: மட்டக்களப்பு கோமாரியில் படையினர் காணியில் புதிய முகாம் அமைத்து வருகின்றனர்.

மயிலர்: ஒரு முகாமை அகற்றினால் இரண்டு முகாம் அமைக்கிறதெண்டு தீர்மானம் எடுத்து செயல்படுகினம் போலை.... இப்படியே போனா கண்காணிப்புக்குழுவின்பாடு கஷ்டம்தான் பாருங்கோ....ரணில் ஐயா மூடு எண்டா சந்திரிகா அம்மா புதிசா இரண்டைத்திற எண்டா என்ன செய்யிறது உரலுக்கு ஒருபக்கம் இடி 'ஆமி'க்கு இரண்டு பக்கமும் இடி... பாவம் சமாதானப்புறா....

செய்தி: குழப்பநிலையை ஏற்படுத்த ஜே.வி.பி முயற்சி: சிறிலங்கா பொலிசார் அரசுக்கு எச்சரிக்கை....

மயிலர்: ஜே.வி.பிக்கு வேறை என்ன வேலை; குழம்பின குட்டையிலை மீன் பிடிக்கிறதுதானே அவையின்ரை பொழுதுபோக்கு. குழப்பத்தை ஏற்படுத்துவது, ஆர்ப்பாட்டம் செய்வது, பேரணி நடத்துவது, போஸ்ரர் ஒட்டுவது, சமாதானத்தை எதிர்ப்பது... விடுதலைப்புலிகளுக்கெதிராக பிரச்சாரம்செய்வது ..... ஜே.வி.பியின்ரை கொள்கைகளே கோமாளித்தனமானதாக இருக்கு... சிவப்பு சித்தாந்தவாதிகள் எப்படி சீரழிந்து போட்டினம் பாருங்கோ... தலை லண்டனிலை, தலைமறைவாக இருக்க... வால்மட்டும் வாலாட்டிக் கொண்டிருக்கு....

செய்தி: சமஷ்டித்தீர்வு தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவித்தபின்னரே சந்திரிகா கருத்துச் சொல்வாராம்.....!

மயிலர்: 'அம்மணி என்ன கருத்தைச் சொல்லுவா எண்டு எங்களுக்குத் தெரியாதே!பேச்சுவார்த்தைக்கே முட்டுக்கட்டை போடுற ஆள் தீர்வு எண்டு முன்வைத்தா சிவப்புக்கம்பளமே விரிக்கப்போறா....? அம்மாடை கருத்தைத்தானே கதிர்காமரண்ணாச்சியும், அநுரா தம்பியரும், ஆள்மாறி ஆள்மாறி புலம்பிக்கொண்டிருக்கினம்... இனிப்புதுசா வேறகருத்துச் சொல்லப்போறாவாம்...! கூறும்..கூறும்... கூறிப்பாரும்.... என்று திருவிளையாடல் பாணி வசனத்தைத்தான் சொல்லவேண்டும் போலை இருக்கு.....'

செய்தி: தனித்துவமான சுயாட்சித்திட்டமே இறுதித்தீர்வாக முன்வைக்கப்படும் அமைச்சர் பீரிஸ் ஒஸ்லோவில் பேச்சு.....

மயிலர்: கேட்க நல்லாத்தானிருக்கு... பீரிஸ் ஐயா முந்தியும் ஒருக்கா அம்மாவோடை இருக்கேக்கை ஒரு தீர்வை முன்வைத்து பரபரப்பை ஏற்படுத்தின ஆள்...தெரியும்தானே... பிறகு அந்தத்தீர்வு கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான கதையாப் போனது வரலாறு... தனித்துவமான சுயாட்சி எண்டா என்ன பாருங்கோ .... பூவே பூக்கேல்லை...ஆனால் பழத்தின்ரை ருசியை கற்பனை பண்ணி சப்புக்கொட்டக் கூடாது பாருங்கோ...!

# சமாதானம் : அமெரிக்காவின் புதிய மண்டலம்



**இலங்கையின்** இனப் பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா ஒரு மண்டலம் (Circle of states) அமைந்திருக்கின்றது. அதனைப் பகுப்பாய்வு செய்வதே இக்கட்டுரை.

ஈராயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இராஜாதிராஜர்களுக்கு ஒரு குரு பிறந்த நேரமும் அப்பாவி மக்களுக்கு ஒரு காட்டிக் கொடுப்பாளன் பிறந்த நேரமும் ஒன்று. கௌடல்யாின் அர்த்தசாஸ்திரம் பற்றிய எனது விமர்சனம் இதுதான்.

எழுத்தறிவும் கல்வி அறிவும் மன்னர்களதும் பிராமணர்களதும் சொத்துரிமையால் இருந்த நிலையில் அர்த்த சாஸ்திரம் மன்னர்களின் மந்திரக் கோலாய் இருந்தது. மன்னர்கள் பிராமணர்களுக்கு மந்திரக் கோலின் பலனில் பங்கு கொடுத்தனர். ஆனால் அப்பாவி மக்களோ அந்த மந்திரக் கோலின் வித்தைக்குள் நைய்ந்து போயினர்.

சக்கரவர்த்திகளின் கைகளிற் தவழும் மந்திரக் கோளை மக்களின் கரங்களிலும் தவழச் செய்தால் மக்கள் எச்சரிக்கை அடைவர்.

2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அரசியற் சூழலின் பின்னணியில் கௌடல்யர் அமைத்த மண்டலக் கோட்பாடானது புதிய வளர்ச்சி நிலைக்கேற்ப எப்படிப் பிரயோகம் பெறுகின்றது என்பதை விரித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் முயற்சி.

ஒரு பொருள் எப்படி இருக்கின்றதோ அதை அப்படியே காண்பதுதான் அறிவின் முதல் நிலை நெருப்பை நெருப்பாகவும், தண்ணீரைத் தண்ணீராகவும், இரும்பை இரும்பாகவும் காண்பதுதான் அறிவு. இலங்கையின் இனப்பிரச்சினை எனும் ஒரு கருவைத் தழுவி அமெரிக்கா ஒரு மண்டலம் அமைத்திருக்கின்றது. அதிற் பல அரசுகளும் அமைப்புக்களும் உறுப்புக்களாகும். மண்டல அரசுகளுக்கிடையேயான உறவை கௌடல்யர் விளக்குகையில் நண்பன், பகைவன், நடுவன், நொதுமலன், மித்திரன், நண்பரின் நண்பன் போன்ற பலவகை நிலைகளை வகுத்தார். புதிய வளர்ச்சி நிலைக்கேற்ப இவ்வுறவுநிலை பண்பு நிலைப்படுத்தி இங்கு விரிக்கப்படுகின்றது.

அமெரிக்கா தன்னை மண்டலாதிபதியாகக் கொண்டு அமைத்துள்ள இந்த மண்டலத்தில் பிரிட்டன், ஜப்பான், நோர்வே, கனடா, இந்தியா, ஐ.தே.க,சு.க, எல்.ரீ.ரீ.ஈ., முஸ்லிம் கொங்கிரஸ், சர்வதேச நிதி நிறுவனங்கள் என்பன முக்கிய உறுப்புக்கள்.

கௌடல்யரின் மண்டலத்தில் ஒரு பிரதம பகைவன் இருப்பான், ஆனால் அமெரிக்கா புதிய வளர்ச்சிகளை உள்வாங்கி தனது இம்மண்டலத்தை சற்று விசித்திரமாக அமைத்துள்ளது.

அதாவது பகைவன் என்றொரு பாத்திரமில்லாது அவரவர் நலன்களை இயன்ற வரை அனுசரித்து அதில் தான் மேலோங்கவல்ல ஒரு மண்டலத்தை கட்டியெழுப்புவதே அதன் முயற்சி. அமெரிக்காவின் நோக்கு நிலையில் இது ஒரு மெருகான இராஜதந்திர அணுகு முறை. பகைவனற்ற ஒரு மண்டலம்தான் அமெரிக்காவின் இப்போதைய நடைமுறைத் திட்டமாயினும் எதிர்கால வளர்ச்சிப் போக்கே அதன் பண்பைத் தீர்மாணிக்கமுடியும்.

மண்டல உறுப்புக்கள் அனைத்தினதும் அவரவர் நலன்களை அனுசரித்து மண்டலத்தைக் கட்டுவதே அமெரிக்காவின் மூலோபாயம்.

இப்போது மண்டல உறுப்புக்கள் அனைத்தினதும் உறவு நிலையை மண்டலாதிபதியின் நோக்கு நிலையிலிருந்து வரையறை செய்வோம். மண்டல பொருள்: இலங்கை இனப்பிரச்சினை மண்டலாதிபதி: அமெரிக்கா.

மண்டலாதிபதியின் தோழன்: பிரிட்டன்.

மண்டலாதிபதியின் அந்தரங்கச் செயலாளர்: நோர்வே.

மண்டலாதிபதியின் கூட்டாளி: ஜப்பான்.

மனஸ்தாபங்களுக்கு மத்தியிலும் மண்டலாதிபதிக்கு வேண்டியவர்: இந்தியா.

மண்டலாதிபதிக்கும் கனடாவுக்கும் இடையேயான உறவு: அதிபருக்கும் நடுத்தர ஆசிரியருக்கும் இடையேயான உறவு.

மண்டலாதிபதியின் நண்பன்: ஐ.தே.க.

மண்டலாதிபதிக்கும் சு.க.விற்கும் இடையேயான உறவு: மொத்த வியாபாரியின் கடையில் பொருட்களை கிளறி வாங்கும் சில்லறை வியாபாரி. மண்டலாதிபதிக்கும் எல்.ரீ.ரீ.ஈ.க்கும் இடையேயான உறவு: விளையாட்டுப் பயிற்சியாளனுக்கும் விளையாட்டு வீரனுக்கும் இடையேயான உறவு. இப்படியாக நீள்கின்றது. இங்கு சில பதங்களுக்கு பொருள் வரையறை செய்தல் நல்லது.

தோழன் என்றால் நன்மையிலும் தீமையிலும் தோளோடு தோள் கொடுப்பவரும் கிடைக்கும் நன்மைகளை பேதப்படாது பங்கிட்டுக் கொள்வோரும்.

கூட்டாளி என்றால் வகுத்து ஒதுக்கப்பட்ட நலனின் பொருட்டு கூட்டாகச் செயற்படுவோன்.

வேண்டியவன் என்றால் சரி பிழைகளுக்கு அப்பால் தவிர்க்க முடியாது தேவைப்படுபவன். இதில் மண்டலாதிபதியின் கூட்டாளியாகிய ஜப்பான் மண்டலாதிபதியின் ஒரு சிறந்த தெரிவு. முதலாவதாக கூட்டளார் மண்டலாதிபதிக்கு வேண்டியவனாகிய இந்தியாவின் நண்பன். இதனால் மண்டலாதிபதியின் கூட்டாளியை இந்தியா அனுசரிக்கும்.

பொதுவாக கூட்டாளியானவர் பூகோளப்பரப்பில் மண்டலாதிபதியின் சந்தைப் போட்டியாளன். மண்டலாதிபதிக்கு அரசியல் சிக்கல் வாய்ந்த தென்னாசிய சந்தையின் ஒரு பகுதியை கூட்டாளியிடம் தாரை வார்ப்பதன் மூலம் ஒருபுறம் தனக்கு பிரச்சினைக்குரிய சந்தையை கூட்டாளி தன்வசப் படுத்த உதவுவதுடன் மறுபுறம் தொடர்ந்தும் அவரை கூட்டாளியாக வைத்திருக்க முடியும். சந்தைப் போட்டியின் முரண்பாடுகள் பகைமையுள்ள முரண்பாடுகளாக வளர்ந்து யுத்தமாக

**மு-திருநாவுக்கரசு**

வெடிப்பதை தவிர்ப்பதற்கு சில குறிப்பிட்ட மட்ட உலகச் சந்தைப் போட்டியாளர்கள் தம் மத்தியில் ஒருபுதிய பரஸ்பர சந்தைப் பங்கு போடல் முறையொன்றை வளர்த்து வருகின்றனர். இதில் ஜப்பானுக்கு ஆசிய சந்தையில் வரையறுக்கப்பட்ட துறைகளை ஒதுக்கீடு செய்வது அமெரிக்காவின் ஒரு முக்கிய திட்டமாகும். அத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இலங்கைச் சந்தையில் குறிப்பிட்ட பகுதிகள் ஜப்பானுக்கு ஒதுக்கப்படுகின்றது. ஒரு பொருளின் முப்பரிமாணங்கள் என ஒரு புறம் நன்கொடையாகவும், மறுபுறம் சந்தையாகவும் மூன்றாவது பக்கம் சமாதானத் தூதராகவும் ஜப்பானை மண்டலாதிபதி இலங்கைக்குள் அனுப்புகிறார். தமிழருக்கு புனரமைப்பு அவசியம் அல்லது உயிர் வாழ முடியாதநிலை. நகரங்களும், பட்டினங்களும், கிராமங்களும் வாழ்வும் பாழடைந்த நிலையில் மக்கள் அல்லற்படுகின்றனர். இந்த அவலத்தை ஏற்படுத்துவதில் எதிரி வெற்றிபெற்றான் என்பது இப்போது வரலாற்றுப் பதிவாகிவிட்டது. இதனால் யதார்த்தத்தில் நிலவரங்களை எதிர்பார்ப்பதைத் தவிர மக்களுக்கு மாற்று வழியில்லை. சிங்கள அரசின் பிச்சாபாத்திரமும் சில்லறை காசுகளால் கிலுங்கும் நிலையில் மண்டலாதிபதி பை நிறைய நன்கொடைகளுடன் தனது கூட்டாளியான ஜப்பானை இலங்கைக்குள் அனுப்புகிறார். இங்கு கூட்டாளிக்கான தெரிவு மிகவும் சமயோசிதமான கூட்டாளி மண்டலாதிபதிக்கு விசுவாசி என்பதுடன் தென்னாசியாவிற்கு பொருத்தமான வரும் கூட.

இங்கு எழுதப்பட்ட நாடகத்தின் கையெழுத்துப் பிரதி மண்டலாதிபதியின் கையில். காட்சிகள் விரியும் போது மட்டும் தான் பார்வையாளர்களுக்கு கதை தெரிய வருகிறது. இந்த



மண்டலத்தில் மண்டலாதிபதி பகைவனற்ற மண்டலத்தை இதுவரை அரங்கேற்றியுள்ளார். ஆனால் மண்டல உறுப்பினர் களிடையே அவரவர்களுக்கு என்று முழு நீளப் பகைவர்கள் உண்டு.

இந்தியாவுக்கு புலிகள்

ஐ.தே.க.வுக்கு சு.க.

சு.கவுக்கு புலிகள்

இதில் இந்தியாவுக்கு புலிகள் மீதான பகைமை சமாதானப் பேச்சுகளை குழப்பிவிடும் என்று பெரிதும் அஞ்சப் படுகிறது. அது உண்மையாகுமா? பொய்யாகுமா என்பது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் இதிலுள்ள சுவாரசியமான விடயம் என்னவெனில் இந்திய-புலிகள் பகைமையைப் பயன்படுத்தித்தான் இப்படியொரு பேச்சுவார்த்தைக்கு மண்டலாதிபதியால் ரணிலைத் தள்ளி மண்டலத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட முடிந்தது. புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பெரும் பகை இருந்த சூழலில் தான் பிரேமதாசா காலத்தில் புலிகள் - அரசாங்கம் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட முடிந்தது. இவற்றின் நன்மை தீமைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. இந்தியா -புலிகள் இடையிலான பகைமை சிங்கள அரசாங்கங்களுக்கு இரு விதமான தெரிவுகளை கொடுக்கின்றது.

ஒன்று: அந்த பகைமையைப் பயன்படுத்தி முழுநீள இராணுவ அட்டூழியம் புரிதல்.

இரண்டு: பகைமையைப் பயன்படுத்தி புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள்.

சந்திரிகா அரசாங்கம் இதில் முதலாவதை தெரிவு செய்தது. ரணில் அரசாங்கம் இரண்டாவதை தெரிவு செய்கின்றது.

யுத்தமா? சமாதானமா? என்ற தேர்வில் ஈடுபடும் போது நடந்த யுத்தம் நட்டமாகவுள்ள ஐந்தொகை கணக்குவருமிடத்து அல்லது யுத்தமும் சமாதானமும் சம பயனையே அளிக்க வல்லவை என்பது தெரியவருமிடத்து சமாதானத்தையே தெரிவு செய்யுமாறு கௌடல்யர் கூறுகிறார். நடந்த யுத்தத்தின் ஐந்தொகைக் கணக்கையும் நடக்கவல்லவற்றின் மதிப்பீட்டுக் கணக்கையும்தமது தேவைகளையும் கொண்டு பார்க்கும் போது ரணிலை சமாதானத்தின்பால் ஊக்குவிப்பது தான் மண்டலாதிபதிக்கும் மண்டலத்தின் பிரதான உறுப்பினர்களுக்கும் நன்மை என மண்டலாதிபதி கருதுகிறார். மண்டலாதிபதி தனது நண்பரையும் (ரணில் அரசாங்கம்) அந்தரங்கச் செயலரையும் (நோர்வே) வேண்டியவரிடம் (இந்தியா) அடிக்கடி அனுப்பி பேச்சு வார்த்தைகள் பற்றிய அறிக்கையை அவரிடம் சமர்ப்பிக்கவும், அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கேற்ற வாக்குறுதியை அளிக்கவும் செய்வதன் மூலம் வேண்டியராகிய அவரை சாந்தப்படுத்த முயல்கிறார். இதில் மண்டலாதிபதிக்கு சிக்கலாயிருப்பது தன்கடையிற் பண்டங்களை கொள்முதல் செய்யும் சில்லறை வியாபாரி தான் (சு.க.). சில்லறை வியாபாரி சர்வதேச அரங்கில் இப்போது தார்மீக ரீதியிலும் அரசியற் பொருளாதார ரீதியிலும் பலயீனமானவர். ஆதலால் அவர் மண்டலாதிபதியின் வேண்டியவருடன் கூட்டுச் சேர்ந்து தன்னைப் பலப்படுத்தலாம் என்று முயல்கிறார். இங்கு கவனிக்கவேண்டிய பிரதான விடயம் என்னவெனில் சர்வதேச அரங்கில் சமாதானத் தீர்வு முற்றிலும் வரவேற்கப்படுகின்றது என்பது தான். கௌடல்யர் வரைவிலக்கணத்தின்படி இங்கு மண்டலாதிபதியின் வேண்டியவர் மண்டலத்தின் "வல்லவன்" ஆவார். வல்லவனை மண்டலாதிபதிக்கு எதிராக தூண்டுமாறு மண்டலத்திலுள்ள மற்றைய மன்னனுக்கு கௌடல்யர் புத்தி கூறுகிறார். அந்தப் புத்திமதியை சில்லறை வியாபாரி இங்கு பின்பற்ற முனைகிறார். இதுவரை அது வெற்றிபெறவில்லை. இந்தியத் தலைவர்களைச் சந்தித்த அனுரா குழுவின் விஜயமும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. சர்வதேச சமூகம் ஒரு வகைப் பிரதேச சுயாட்சியையும் ஆதரிப்பது இவர்களுக்கு நெருக்கடி.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**பெயர்வு** என்பது எங்களைக் கேட்டுக்கொண்டு நிகழ்ந்ததல்ல. எமது விருப்பங்கள், தேர்வுகள் என்பவற்றிற்குப் புறம்பாக நிகழ்ந்தது. எதையும் எடுத்துச் செல்வதற்கான அவகாசமும் இருந்ததில்லை. நன்றாகவே பெயர்ந்து போனார்கள். பின்னர் உதிரிகளாகிப் போனார்கள். யாழ்ப்பாணத்தில் நிலைமை பரவாயில்லை. அங்கிருந்து வன்னிக்குப் பெயர்ந்த போதோ வேறு வேறு இடங்களில், வெட்டைகளில், காடுகளில் எனப் பிளவுண்டு போயினர். ஆறடித்துச் செல்கையில் அகப்பட்ட மண்திட்டில் ஏறிக் குந்திக்கொண்டவர்கள் போலாயிற்று. ஒரு குடும்பம் இராமநாதபுரத்திலும், ஒரு குடும்பம் பாண்டியன் குளத்திலும்: இன்னொன்று துணுக்காயில், இன்னும் ஒன்று வன்னிக்கப்பால் திருகோணமலையில்.ஊரில் ஒரே குடும்பம் போல கொண்டும் கொடுத்தும் உற்ற இடத்தில் உறுபசிதீர்த்தும் ஒருங்கிணைந்திருந்த வாழ்வு சிதறிப் போனது. ஆனால் ஊருக்கு மீளவும் ஒரு காலம் வந்தது.ஊருக்குத் திரும்புதல் என்ற எண்ணத்திற்கு இடைக்கால ஏற்பாடாக ஊர்வழியில் மூச்சுவிட ஒரு காலம் ஊருக்குத் திரும்புதல் என்பதற்கு முதலில் உருக்கொடுப்பவராக அண்ணன்தான் முன்வந்தார். ஊரைநோக்கிய போராட்டத்திற்கான வடத்தை முன்கை கொடுத்து இழுத்தார். அதன் பிறகு எம்மில் பலரும் ஊருக்குத் திரும்புதல் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினோம். அண்ணன் முந்தி விட்டார். மாறிமாறிப்பல இடங்களுக்கும் உழன்று திரிந்த பெயர்வுத்தேர் ஊரின் இருப்பிடம் நோக்கிச் சென்றது. தேர் இருப்புக்குப் போய்விட்டது. ஊருக்குப் போனாலும் அண்ணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பிறந்த இடம், வளர்ந்த இடம், ஓடித்திரிந்து விளையாடிய இடம், தொழுத இடம் என ஒவ்வொன்றும் வாவா என்று அண்ணனின் பெயர்சொல்லி அழைத்தன. ஆற அமர்ந்து இருப்புக்கொள்ள நேரமில்லாத அவசரம் அண்ணனை உந்தியது. ஊருக்குத் திரும்புவதற்கு உந்திய அவசரம் போல ஓர் அவசரம் உந்தி அழைத்தது.

புங்குடுதீவு நோக்கி பஸ் போய்க்கொண்டிருக்கும்போது எல்லா ஊர்களினதும் அழகு பாழாகியிருப்பதைப் பார்த்தார். எல்லா ஊர்களையும் தன்னிரு கைகளாலும் செப்பனிட வேண்டும் போலொரு எண்ணம் உந்தியது. ஆளில்லா ஊருக்கு அழகுபார் என்பதாகி விட்டதைக் கண்டு அண்ணனின் மனசு மிகவும் வருந்தியது. ஊர் முழுவதையும் திருத்தியமைத்து மீண்டும், குடிபோன அழகைக் கொலுவிருத்த வேண்டும் என்கின்ற பேராவல் மனசில் கிளைவிட்டுப் படர்ந்தது. ஆனால் தொடங்குவது எங்கிருந்து.! தனது இல்லிடத்திலிருந்து தானே தொடங்க வேண்டும். தொடங்கினார். இன்னும் ஓரிடம் இருக்கிறது. அதுதான் அண்ணன் குறிகட்டுவானுக்கு முன்னர் போகும்போதும் வரும்போதும் கையெடுத்துக் கும்பிட்ட கோயில். கோயில் என்பது அண்ணனுக்கு ஒரு குறியீடு மாத்திரம்தான். பெருகக் கட்டி அழகு பார்க்கின்ற பெருங்கட்டுமானம் அல்ல. பெரும் பணக்காரத் தனங்களின் சின்னமும் அல்ல. தனக்குள் இருக்கின்ற தவிப்பை, ஏக்கங்களை, துயரத்தை, நாடிருக்கும் சீர்கேட்டைச் சொல்லிச் சொல்லிக் கொட்டித் தீர்ப்பதற்கான, எங்கும் நிறைந்த பொருளுக்கு விளக்கேத்திப் பார்ப்பதற்கான , ஓர்இல்லிடம். ஏழைகளின் பசிதாகம் தீர்க்கின்ற தண்ணீர்ப்பந்தல், அன்னதான மடம்,அந்தக்கோயில் குறிகட்டுவானில் இருந்தது. பேய்ச்சி அம்மன் கோயில். எல்லாவற்றையும் எளிமையாகவே புரிந்துகொள்ள முயல்கின்ற அண்ணனின் கைகூப்புதலுக்கேற்ற 'பேய்ச்சி' அங்கு குடிகொண்டிருந்தாள். அந்தக் கோயிலுக்கு எதிரில்தான் அண்ணன் கலியாணம் முடித்த காலத்தில் அண்ணியுடன்



# ஊருக்குத் திரும்புதல்

குடியிருந்த எளிமையான சிறிய வீடு இருந்தது. இப்பொழுது அது சில சுவர்களுடன் எஞ்சியிருந்தது. இதற்கும் அப்பால் குறிகட்டுவான் துறைமுகத்தில் அண்ணன் முன்னர் நடத்திய தேனீர்க்கடை. சிறிது தள்ளிக் கடலோரமாகஒரு புளியமரத்தருகே மாவீரனான மைந்தனின் புதைகுழியிருந்தது. இருந்தது என்றால் காத்துக் கொண்டிருந்தது. தந்தையின் வரவிற்காக, அஞ்சலிக்காக.

அண்ணனின் சைக்கிள் பேய்ச்சி அம்மாளின் கோயிலின் முன்னால் நின்றது. பேரனிடம் சைக்கிளைக் கொடுத்துவிட்டு அம்பாளுக்கு

❑ "குறிகட்டுவான் துறை. எதிரே கடல். ஏழாத்துப் பிரிவுக்கடல். ஏழு தீவு களுக்கும் இடைநுழைந்து திரிகின்ற நீரோட்டங்களின் சேர்மதி யான கடல். கடல்தாண்டி பாம்பு குடைவிரிக்க பரிவுடன் தீவுகளைப் பாராமரிக்கும் நாகேஸ்வரி, நாகம்மாள் வீற்றிருக்கிறாள். நயினாதீவுக்கோபுரம் அவளின் வீற்றி ருப்பை கம்பீரமாய் சொல்கிறது. அண்ணன் கையெடுத்தார். 'ஆச்சி தாயே அம்மாளே' என்று குரலெடுத்துக் கூவினார். அலைகளின் மேலெழுந்து தத்தளித்துத் தத்தளித்து அலைந்தது அண்ணனின் குரல். கரையேற முடியாத அலைகள் அண்ணனின் நெஞ்சினுள் இடம்பெயர்ந்தன" ❑

முன்னால் நெடுங்கிடையாக வீழ்ந்து வணங்கியபடியே கிடந்தார். பேய்ச்சி அம்பாள் கோயிலின் சூழலில் நின்ற பீடுடைய மரங்களின் இலைகள் காற்றில் ஒலியெழுப்பின. ஆயிரமாயிரம் பேச்சுக்குரல்கள், கிராமத்து மக்களின் வாழ்வு சார்ந்த பிரார்த்தனைக் குரல்கள் போலக் கேட்டுக் கொண்டிருந்தன. அத்தனை பிரார்த்தனைகளுக்கும் ஓட்டுமொத்தமாய் சேர்ந்து, வீழ்ந்து கிடக்கும் உருவமாக , இன்னும் வணங்கிய படியே கிடந்தார் அண்ணன். எத்தனை காலத்திற்குப் பிறகு இந்த மண்களில் மார்பு கொஞ்ச, பேய்ச்சியின் திரு முன்னிலையில் கிடக்கின்றோம் என்பதே. அண்ணனுடைய கண்களில் கண்ணீர் கங்கை உடைப்பெடுக்க போதுமாய் இருந்தது. ஓமோம் பேச்சியின் முன்னாள் எழுந்து நின்ற அண்ணனின் கண்களில் கங்கை வழிந்தாள். பேரனைப் பார்த்து வரச்சொல்லி அழைத்து, பையில் கொண்டுவந்த மலர்களில் கொஞ்சம் எடுத்து தூவி கற்பூரமும் ஏத்தித் தொழுதார். நிமிர்ந்து சற்றுத்திரும்பிய போதில் எதிர்ப்பட்ட பெண்ணைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்.'மணி' என்று சொல்ல வாயெடுத்தவர் அந்தச் சொல்லை விழுங்கிவிட்டு அவளைப்பார்த்துக் கண்ணீர் விட்டார். குறிகட்டுவான் கிராமத்தில் படித்த, பண்புள்ள, அழகிய பெண்ணாயிருந்தவள். எல்லா மக்களும் கோயில் பூசகர்களும் கோயில்களையும் பூட்டிவிட்டு கிராமத்து வாயிலையும் வெறுமையாகச் செய்துவிட்டு வெளியேறிப் போனபோது இந்தப் பெண் கிராமத்தின் விசித்திரமாயிருந்தாள். பேய்ச்சியின் மீது கொண்ட பக்தியும் விசுவாசமும் அந்தப் பெருங்காட்டிலிருந்து பூக்கள் கொய்து குடலை நிரப்பிக்கொண்டு குறிகட்டுவானுக்கு நடையாய் நடந்துபோவாள். ஒவ்வொரு நாளும்காலை,மாலை விளக்கேத்தி மலர்தூவி வழிபடுவாள். எல்லாம் உதுக்காகத்தான். பூக்கொய்ததும் அதற்காக, விளக்கேத்தியதும் அதற்காக. காலை மாலை இரு வேளையும் நடந்ததும் அதற்காக. கடற்படையினரின் ஆதிக்கத்தின் பிடியில் முழுவதுமாகப் புங்குடுதீவு வந்ததன் பின்னாலோ இந்தப் பெண்ணின் கோலமும் ஒரு பேய்க்கோலம் பூண்டதாயிற்று. சாமியார்கள் போல முறுகித்திரண்ட சடையும் திரிந்து திரிடையாகிட காரைக்கால் அம்மையார்போல பெயர்ந்தும் பேய்ச்சிக்கே பிச்சையானாள். இளமைக் கோலத்தை இறைவனுக்கு கையளித்து விட்டு முதுமைக்கோலம் பூண்டவளாய் பேச்சிக்கோர் பணியாளாய் தொண்டு செய்யும் .இந்தப் பெண்ணை வணங்கினார். மனசார வணங்கினார். நாங்களெல்லாம் இடம் பெயர்ந்து வெளியேற, பெயராமல் உயிரைத் துச்சமென்று கருதியவள் செய்யும் பணி பெரிய பணிதான். இவளுக்காகவேனும் பேய்ச்சியம்மன் பெயர்ந்து போகாமல் இருந்து அருள் பாலிக்கிறாள் போலும் என்று தனது மனசில் எண்ணியவாறே சைக்கிளை உருட்டினார். பேரன் பின்தொடர்ந்தான்.

குறிகட்டுவான் துறை. எதிரே கடல். ஏழாத்துப் பிரிவுக்கடல். ஏழு தீவுகளுக்கும் இடைநுழைந்து திரிகின்ற நீரோட்டங்களின் சேர்மதியான கடல். கடல்தாண்டி பாம்பு குடைவிரிக்க பரிவுடன் தீவுகளைப் பாராமரிக்கும் நாகேஸ்வரி, நாகம்மாள் வீற்றிருக்கிறாள். நயினாதீவுக்கோபுரம் அவளின் வீற்றிருப்பை கம்பீரமாய் சொல்கிறது. அண்ணன் கையெடுத்தார். 'ஆய்ச்சி தாயே அம்மாளே' என்று குரலெடுத்துக் கூவினார். அலைகளின் மேலெழுந்து தத்தளித்துத் தத்தளித்து அலைந்தது அண்ணனின் குரல். கரையேற முடியாத அலைகள் அண்ணனின் நெஞ்சினுள் இடம் பெயர்ந்தன. அண்ணனின் நெஞ்சினுள் ஏழாத்துப் பிரிவு வீங்கிச் சுழித்து அலையெறிந்தது. அலைகளின் உச்சியிலே அந்தப் படகு. கரையேற முடியாமல் தத்தளிக்கும் படகு. படகிலே யாரவன்? யாரும் அல்ல. அண்ணனின் அருமந்த புத்திரன்தான்.தருனேஸ்வரன் எனப் பெயரிடப்பட்டவன். அவனது குணவியல்புக்கேற்ப 'அன்பன்' என அழைக்கப் பட்டவன் தேசத்துக்கே தன்அன்பைத் தியாகமாக்கிடப் போராளியாக மாறி விழுப்புண்கள் பல பெற்றவன். ஏழாத்துப் பிரிவுக் கடற்கரையில் தோழர்களை தப்பிச் செல்லுமாறு கூறி தான் நீந்தி செல்லவியலாத நிலையிலும்போராடி வீரப் புலியானவன். றெஜி என்பது அவனின் போராளிப் பெயர். எந்தப் பெயரில் அழைத்தாலென்ன? அவன் அண்ணனுக்கு அருமந்த புத்திரன். அவன்தான் இப்போது இடம்மாறிப் பெயர்ந்த அண்ணனின் நெஞ்சுக்குள் அலையெறியும் கடலின் அந்தரப் படகில்.....

'அம்மாளாச்சி' என்று கூவியழுத அண்ணனின் குரல் இப்போது 'மகனே மகனே' என்று இரங்கியழுதது.

வீங்கிச்சுழித்த கடல் இப்போது விக்கிவிக்கியழுதது.

தத்தளித்தது அலை கடலே அண்ணனைத்தேற்று.

ஏழாத்துப் பிரிவே!

அண்ணனின் மைந்தனை நீ விழுங்கினாய்.

ஆனாலும் இரக்கமிக்க அலைகள் சின்னஞ்சிறுவனாய் அவன் கரையில் சிந்தில கட்டி விளையாடியதை அறியும்.

குத்திக்குதறப்பட்ட குமுதினிப் படகில் செத்துக்கிடந்தவரை குற்றுயிராய்க்கிடந்து முனகிய வரை


அண்ணன் தோளிலடித்துத் தாங்கிச்சுமந்து கரையேறியதை அலைகள் அறியும்.

இனந்தெரியாப் பிணங்களைத் தான் கரையொதுக்கிய போதில் இவரே இழுத்துவந்து கல்லிலே கட்டிவைத்துவிட்டு உரிய இடங்களிற்குச்சேதியனுப்பியதை அறியும்.

எல்லாத்தீவின் மக்களும் அந்தரிக்கும் போதுகளில் தாகசாந்தியும் பசிக்குணவும் தங்குமிடமும்தந்து ஆதரித்ததை அறியும்.

அதனால்தான் அண்ணனுடைய பிள்ளையை நோகாமல் கரைக்கு உன் கரங்களால் உருட்டிவந்து அண்ணனின் கடையருகில் கையளித்தாய் போலும்.

கடலோரம் புதைகுழியில் கண்ணயரும் அவரின் இனிய மைந்தனுக்கு சாமரம் வீசித் தாலாட்டுகிறாய் போலும்.



**சு.வில்வரெத்தினம்**

தலையாட்டும் கடலலைகளிடம் விடைபெற்றுக்கொண்டு அண்ணன் மைந்தனின் புதைகுழிநோக்கிச் சென்றார்.புளிய மரத்தருகே மைந்தனின் புதைகுழியை ஒருவர் அடையாளம் காட்டினார். முருகைக் கல்லொன்று நடுகல்லாய் இருந்தது. நடுகல்லின் மேல் பூக்களை வாங்கித்தூவினார். செவ்விரத்தம் பூக்கள் கற்பூரத்தையும் பேரனிடமிருந்து வாங்கிக் கொழுத்தினார். செங்கொழுந்துச் சுடர். கை கூப்பி அஞ்சலித்தார். மௌனம் கண்ணீராய் உருகி வழிந்தது. வீழ்ந்து பணிந்தார். வெம்பினார்.விசும்பினார். வெடித் தழுதார். முருகைக்கல் நடுகல்லாயிற்று. நடுகல் இவருக்கு பெற்றெடுத்த பிள்ளையாயிற்று. பிள்ளையென்றால் கொஞ்ச வேண்டுமல்லவா? அண்ணனின் எச்சிலும் கண்ணீரும் பட்டு கல்லுப்பிள்ளை கனிந்தது.கனிந்துருகிஎழுந்த அண்ணனின் தோள்கள் குலுங்கின. தூக்கிச் சுமந்த தோள்கள் தொட்டிலிட்டு ஆடிய கைகள் நடுங்கின. நடுங்குகின்ற கைக ளால் கற்பூரதீபத்தை தியாகச் சுடராக எண்ணி ஒற்றிக் கண்ணில் இட்டார். காலடியில் கடலின் ஈரம். மேற்கேதிரும்பிக் கடலிற்கு அப்பால் தெரிகின்ற கோபுரத்து உச்சியை நோக்கியும் கை குவித்துவிட்டு மெல்ல நடந்தார். கடையடிக்குப் போனார். கடைக்குப் பின்பக்கமாக மணலுக்குள் புதையுண்டு கிடந்த ஏதோ இரும்பு காலடியில் பட்டது. மகன் உருட்டி விளையாடிய வளையம். மீண்டும் ஒரு விம்மி வெடித்தல். இப்படியே கண் காணக்கிடக்கும் சிறு சிறு அடையாளங்களும் புதையுண்டு கிடக்கும் ஞாபகங்களைக் கிளறக்கிளற இடைக்கிடை .......

கையை விசுக்கிக்கொண்டு மீண்டும் வீட்டிற்குப் புறப்பட்ட அண்ணனின் கையில் அந்த கம்பி வளையம், பின் தொடர்ந்தான் பேரன் எல்லாவற்றிற்குமே ஒரு மௌனகாட்சியைப் போல.

முற்றும்.

கடலில் துணிந்து'கப்பல் செல்லலாம்; கரையருகே செல்வதே, தோணிகளுக்கு நல்லதாம். -பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

**நேரம் 10.40 என் பெயர் சொல்லி அழைத்தாள் அந்தப்பெண் பொலிஸ். வன்னிக்கான அனுமதியைத் தந்து சொன்னாள். நாளைக்கிடையிலை போவேணும். அல்லது திரும்பிப்பாஸ் எடுக்க வேணும். சொல்லிவிட்டு எனது பாஸைக் கையில் தந்தாள். கண்டம் தாண்டியாச்சு, இனிக்கடந்தால் வன்னிமண். கால்கள் வேகம் புட்டக் கனம் கழன்றது. வன்னிக்குப் போகும் நினைவில் வலியெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது.**



# தாய்மடி வாசம் 3

**மதியம்** 11.30

பிரமனாலங்குளம் போவதற்கான பஸ்ஸில் நான். வேர்த்து ஊற்றிக் கொண்டிருந்தது.

*"பின்னுக்குப் போங்கோ......" உள்ளுக்கை பெரியபையள் வைச்சிருக்கேலாது. வெளியிலை தாங்கோ எல்லாத்தையும்".* உள்ளிருந்த எல்லாப்பாரங்களும் வெளியில் வந்து வானுக்கு மேலேறின

*"ஆரேன் கிளிநொச்சிக்குப் போறவையள் இருக்கிறியளே?"* கையில் ஒரு கடிதத்தோடு வினாவினாள் ஒரு அம்மா.

*"இந்தக்கடிதத்தை ஒருக்கால் கிளிநொச்சியிலை குடுக்க வேணும். ஆரும் கொடுப்பியளே...? "*

*"தாங்கோ நான் கொடுத்து விடுறன்."*

பின்வரிசையில் இருந்த அந்த இளைஞன் வாங்கித் தன் சேட் பொக்கற்றினுள் பத்திரப்படுத்தினான்.

*"கவனம் தம்பி முக்கியமான கடிதம். மறக்காதை ராசா....."*

*"ஓமம்மா நீங்க யோசிக்காதையுங்கோ"*

என்றான் பதிலுக்கு அந்த இளைஞன். ஏதோ ஒரு பாரத்தை இறக்கிவைத்த மகிழ்வும் ஆறுதலும் அந்த முகத்தில் தெரிந்தது. தன்பாட்டில் வாகனங்களைப் பார்த்து விட்டு அந்த அம்மா போய்க் கொண்டிருந்தாள்.

*"10 அப்பிள் 100 ரூபா, 10 அப்பிள் 100 ரூபா"....*

.40 - 45இற்குள்தான் வயதிருக்கும் அந்த மனிதனுக்கு வியர்த்துக் களைக்க கத்துகிறான் அந்த மனிதன். யாருக்கும் அப்பிளில் கவனமில்லை. எல்லோரும் போகும் அவசரத்தில் இருக்க ....

*"யாராவது எடுங்கோவன் இதுதான் கடைசிப்பை"* என்கிறான் அந்த மனிதன். தன் கவுரவத்தை விட்டுக் கீழிறங்கி தனது அப்பிளை விற்றுவிடத் துடித்தான் அந்த மனிதன். அந்தப் பத்து அப்பிளையும் நானே வாங்கிக் கொள்கிறேன். வெக்கை தாங்காமல் வியர்த்து ஊற்றிக் கொண்டிருக்க எனக்கு முன்னிருக்கையில் இருந்ததாயின் மடிக்குள்ளிருந்த ஆண்குழந்தை வீரிட்டுஅழுகிறது.

*"இல்லை இல்லை ஓ...ஓ...ஓ... அப்பனுக்கு என்னடி வேணும்.... ஓ...ஓ... அழாதையனை.."*

தாயின் கெஞ்சலும், கொஞ்சலும் அந்தப் பிஞ்சுக்கு எங்கே புரியும்? அது தொடர்ந்து அழுது கொண்டிருந்தது.

*"என்ன பிள்ளை குழந்தையின்ர உடுப்பைக் கழட்டிவிட்டுப் பாரன் பிள்ளை வெக்கை தாங்கேலாம அழுகுது போல....நீ உடம்பு முட்ட உடுப்புக்களைச் சுத்திக் கொண்டு அழாதையெண்டா அதுகேக்குமே....?"*

ஒரு மூதாட்டியின் ஆலோசனைப்படி அவள் குழந்தையின் ஆடைகளைக் குறைத்து விட்டாள். சற்றைக்கெல்லாம் குழந்தை தாயின் மடிக்குள் அமைதியாய் துயின்றது.

குறுக்கும் நெடுக்குமாய் இராணுவ வாகனங்கள், இராணுவம், பொலிஸ் நடமாடித்திரிந்தது.

*"எப்ப தம்பியவை வெளிக்கிடுவியள்?"*

கேட்ட அப்புவிற்கு இப்ப வெளிக்கிடுவம் என்றான் சாரதி

"துள்ளாத மனமும் துள்ளும்" படப்பாடலொன்று மெல்ல வானுக்குள்

**சுதந்திரா**

ஒலித்துக் கொண்டிருந்தது. எப்ப வன்னிக்கு போய்ச்சேர்வேன் என்பதே என் ஆவலாயிருந்தது.

வாகனம் இயங்கமறுத்து அடம்பிடிக்க உள்ளிருந்த ஆண்களை வெளியில் வந்து தள்ளுமாறு அழைத்தார்கள்.

*"இவங்கடை வாகனமும் இவங்களும்"*

புறுபுறுத்துக் கொண்டு சிலர் இறங்கினார்கள். வாகனம் உருளத் தொடங்க எல்லோரும் வானில் ஏறி வான் வேகமெடுக்கிறது. யன்னல்க் கரையில் இருந்ததனால் வான் ஓட காற்று இதமாயிருந்தது. எத்தனை இடர்களோடும் போராட்டத்தோடும் இந்த மக்கள் வாழ்கிறார்கள். இன்று ஏற்பட்டிருக்கும் அமைதி எமது தமிழீழ தேசத்தை உருவாக்கித் தராதா என ஏங்கியது மனசு. போர் முடிந்து இங்கு வாழும் உரிமை தமிழர்க்குக் கிடைத்தால் இந்த கஸ்ரமெல்லாம் தீர்ந்து விடுமல்லவா! நாங்களும் ஊரில் வந்து நிம்மதியா யிருக்கலாமல்லவா......! நினைப்பு நிறைவேறினால் எவ்வளவு நிம்மதி என் நெஞ்சோடு நினைவுகள் அலை மோதிக் கொண்டிருந்தன.

1.12 இராணுவச் சோதனைச் சாவடி. வரிசையாய் அந்தக் கொட்டகைகள் நோக்கி பாரங்களைச் சுமந்து கொண்டு போய் அவர்களின் சோதனைக்காய் காத்திருக்கும் மக்களுடன் நானும் சுதான்ரியும் காத்திருக்கிறோம்.

ஒரு பெண் பொலிஸ் அங்கிருந்த சிறிய மறைப்புக்குள் வரச்சொல்லி சிங்களத்தில் சொன்னாள். அவள் சொன்னதைப் புரியாமல் விழித்த என்னை சுதான்ரி சொன்னா

*"அதுக்குள்ள வரட்டாம் உடம்பு செக் பண்ணப் போகினமாம். "*

*"அப்பஎன்ரை சாமான்கள்?"*

கேட்ட எனக்கு அது உதிலையிருக்கும் என்றாள் அந்தப் பொலிஸ் பெண். முதலில் ஏன் சிங்களத்தில் என்னை அழைக்க வேணும். தமிழில் கதைத்திருக்கலாம் எனக்கும் புரிந்திருக்கும். ஆனால் அந்த இன வாதத்திமிர் இவளிடமும் புகுந்திருப்பதை அவளது செய்கைகள் புரிய வைத்தன.

உடற் சோதனைக்காகப் போனேன்.

*"எங்கையிருந்து வாறது?""*

*"ஜேர்மனி"*

*"ஏன் வன்னிக்குப் போறது?"*

*"உறவினரிட்ட. எத்தினை நாள் நிக்கிறது?"*

*"ஒரு கிழமை."*

*''வன்னியில எங்கை?''*

*"முல்லைத்தீவு."*

கேள்விகளோடு என்னைச் சோதித்து முடித்தவள் சொன்னாள்.

*"அதிலைபோய் பாஸ் பதிஞ்சிட்டு சாமான்களை செக் பண்ணிட்டு போங்க"*

பாஸ் பதியும் இடத்திற்குப் போனேன். உடற் சோதனை செய்தவள் கேட்ட அத்தனை கேள்விகளும் அங்கேயும் கேட்கப்பட்டது. என்ன இது எத்தனைதரம் கேள்வி விசாரணை. இதனால் தானே எங்களது தேசம் போராடுகிறது. இதெல்லாம் இவர்களது ஊரில் நாங்கள் போய்க் கேட்கலாமா? இவர்கள் எங்களை அப்படியெல்லாம் விடுவார்களா? கேள்விகள் என் எண்ணம் முழுவதுமாய்க் குவிகிறது. அடுத்தே நின்றவன் வன்னிக்குக் கொண்டு போகும் பொருட்கள் பற்றி விசாரித்தான். என்னிடமிருந்த *'பென்டோர்ச்"'* பற்றிகள் முழு வதையும் ஒன்றும் விடாமல் என்னிடமிருந்த இலத்திரனியல் சாதனங்களிலிருந்து எடுத்தார்கள். சில சாதனங்களில் பற்றியிருக்கும் இடம் அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால் என்னைக் கொண்டு கழற்றி எடுப்பித்தார்கள். என்னவோ பெரிசா செய்தியளிலை சொல்லுறாங்களங்கை. தடைநீக்கம் அது இதுவெண்டு ஆனா இஞ்சை பாத்தா எல்லாம் இவங்க பறிக்கிறாங்கள். என்னவோ துலையட்டும் நான் வன்னிக்குப் போகவேணும் என்ற நிலையில் நின்றேன்.

ஒழுங்காக நான் அடுக்கி வைத்திருந்த பொதிகளெல்லாம் குப்பையாய் கிடந்தது. இதுதான் இவேன்ரை தடையெடுப்பு, மோதல் தவிர்ப்பு. இது எங்கள் பிரதேசம். தமிழன் தமிழன் ஆண்ட மண். பரம்பரைபரம்பரையாக எமது தமிழர் வாழ்ந்த நிலம். இங்கு நின்று கொண்டு அவர்கள் கேள்வி கேட்கவும், குதறும் பார்வை பார்க்கவும் நாங்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை. ஓயாத அலைகள் பொங்கியடித்துக் கொண்டு வன்னியை மீட்டு, ஆனையிறவையும் மீட்டு யாழில் பாதங்கள் பதித்து புலிகள் சேனை புறப்பட்ட வேகத்திற்கு அப்போதே இவர்களின் ஆட்டமும் அடங்கியிருக்கும். காலச்சனியன் குறுக்கை வந்து குந்தியதால் வந்தவினை இவ்வளவும்.

18,19 வயதிருக்கும் இந்தச் சிப்பாய்களுக்கு. இவர்கள் தான் இத்தனை விசாரணையும் கேள்வியும், மீசை கூட அரும்பாத முகங்களும் இந்த அணியில். எங்களைக் கொல்ல வந்த இனவாதம், தமிழரின் பாரம்பரியம், பண்பாடு, வரலாறு இதில் எதுபற்றியும் இவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால், எம்மினத்தை அழித்தே முடிப்போம் எனும் வெறியோடு எம்முன்னிற்கும் எமதூதர்கள். எத்தனை நாள் இந்தச் சிரிப்பும் பார்வையும்....?

*"என்னக்கா பற்றியளை வாங்கிப் போட்டாங்களே!"*

கேட்ட அந்தத் தம்பிக்கு "ம்..." என்று விட்டு நிமிர்கிறேன். அக்கம் பக்கம் பார்த்து விட்டு அவனிடம் கேட்கிறேன். *"ஏன் பற்றியளை வாங்குகினம். அதுகும் சின்ன பற்றியள் கொண்டு போகேலாதாம்"*

*"பென்டேச் பற்றியளை இயக்கம் வோக்கிக்குப் பாவிக்குதாமெண்டு விடுகிறேல்லையக்கா ஆனா இயக்கம் உவைக்குக் குடுக்கிற ளவுக்கு வைச்சிருக்கு. உவை தடுக்கத் தடுக்கத்தான் இயக்கம் உந்தளவுக்கு வளந்திருக்குது"*

அந்தத் தம்பி பெருமையுடன் சொன்னான். *"சேவல் தான் கூவித்தான் பொழுது விடியுமெண்டு நினைக் கிறதாம். உப்பிடித்தான் உவையளும் நினைக்கினை போலை"* என்னுள் நினைத் துன் கொண்டு நடக்கிறேன்.

*"பிள்ளை நான் தூக்கி வாறன் அதை என்னட்டைத் தாங்கோ...."*என் தோள்கள் சுமந்து வந்த பாரத்தை 55 வயது மதிக்கத்தக்க அந்த ஐயா வாங்கிக் கொள்கிறார். அங்கு வந்த அனைவரது பாரங்களையும் ஒவ்வொருவர் வாங்கிக் கொண்டு நடக்கிறார்கள்.

ஒரு புது 'லுமாலா' சயிக்கிளில் பாரமூட்டை ஒன்றை வைத்து உருட்டிக் கொண்டு வந்தான் ஒரு பையன். கறுத்து மெலிந்த அவனது



> **என்ன இது எத்தனைதரம் கேள்வி விசாரணை. இதனால் தானே எங்களது தேசம் போராடுகிறது. இதெல்லாம் இவர்களது ஊரில் நாங்கள் போய்க் கேட்கலாமா?**

தோற்றம் எதையோ சொல்லிக் கொண்டிருந்தது. "தம்பி எங்கை போறியள்....? "

*"நான் சாமான் தூக்கிக் கொடுக்கிற ஆளக்கா...."*

உண்மையில் அவனை நான் ஒரு பாடசாலை மாணவன் என்றே நினைத்திருந்தேன். ஓ.....இவனது குடும்பத்தின் பொறுப்பு இவன் தலையிலா......? படிக்க வேண்டிய வயது. எந்தக் கவலையுமின்றி கனவுலகில் சஞ்சரிக்கும் வயது. ஏன் இவன் பாரம் தூக்க வந்தான்....?

*''தம்பியின்ர அப்பா எங்கேயிருக்கிறார்....?"*

*" அவர் செத்துப் போயிட்டாரக்கா..... அம்மா பாவம் தம்பியும் ரண்டு தங்கச்சியும் படிக்கினம். எங்களுக்கு சரியான கஸ்ரமக்கா....அதுதான் நான் இஞ்சை சாமான் தூக்க வந்திருக்கிறன். நான்தான் வீட்டில மூத்த பிள்ளை. அப்ப நான் தானே வீட்டைப்பாக்க வேணும்"*

*''உங்களுக்கு எத்தினை வயசப்பன்...?"*

*"எனக்குப் பதினாலு வயசு"*

*''அப்ப நீங்க படிக்கிறேல்லையே....?"*

*"படிக்க விருப்பம் தான் ஆனால் நானும் படிச்சா தம்பி தங்கச்சியவை பாவமெல்லே....."'*

இந்தப் பதினாலு வயசுக்குள் இத்தனை முதிர்ச்சியா....? என்ன கொடுமையிது ! படிக்க வேண்டிய வயசில பாரம் சுமக்கும் கொடுமை.. ஏன் இவனுக்கு இந்த நிலை....? சுதந்திரமாய் திரிய வேண்டிய வயசல்லவா இது.... தன் குடும்பத்துக்காக தன் எதிர்காலத்தை சூனியமாக்கிக் கருக்குகிறானே இந்தக் குருத்து....! இவனின் வயசில் நானும் மூட்டை சுமந்தேன், புல்லுக்கடகம் சுமந்தேன், பால் விற்றேன், கீரை விற்றேன். ஆனால் பள்ளிக் கூடம் போனேன். படித்துக் கொண்டிருந்தேனல்லவா....!

*"எந்த ஊர் தம்பி....?"*

*"நான் சிங்களப் பெடியனக்கா. அனுராதபுரம் என்ரை இடம். இஞ்சை உளைச்சு அங்கைபோய் அம்மாக்குக் காசு கொடுத்திட்டு இஞ்சை வாறனான்".* ஓ...சிங்களப் பையனா....! என்ன அருமையாக தமிழ் கதைக்கிறானே...? அம்மாவின் ஆட்சியில் அனாதரவற்றுப் போனது தமிழக் குழந்தைகள் மட்டுமல்ல. சிங்களக் குழந்தைகளும் தான். யுத்தத்துக்கே நாட்டின் வருமானத்தை அம்மா அள்ளிக் கொட்டிவிட குழுந்தைத் தொழிலாளர்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வருகின்றனரோ.....? அவன் எங்களை முந்திக் கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

*"ஐயாவுக்கு எந்த ஊர்? "*

*''மன்னார் பிள்ளை. இடம்பெயர்ந்து வந்து உங்காலையிருக்கிறம். என்னம்மா செய்யிறது. இது தான் எங்கடை வயித்துப்பாட்டுக்கு உதவி. எங்கடை தலையெழுத்து எப்ப மாறுமோ...?"*

*"இதைவிட வேறவருமானமே அப்ப இல்லையா....?"*

அதிசயமாயக் கேட்ட எனக்கு அவர் அடுத்துச் சொன்ன வார்த்தைகள் பேசாமல் வந்திருக்கலாம் என்றிருந்தது.

தொடரும்.....

துணிவு வளர்வது, எண்ணிக்கையில் இருந்து அல்ல, இதயங்களில் இருந்து தான். -ஜான் ட்ரைடன்



# சிறுகதை

**வியர்த்து** விறுவிறுக்க, அந்த அடர்ந்த காட்டுப் பகுதியினூடாக நடந்து கொண்டிருந்த ரமணனும், சுதனும் செல்லம்மா ஆச்சியின் நினைவாகவே போய்க் கொண்டிருந்தனர்.

காலையில் இருந்து உணவோ தண்ணீரோ இல்லாமல், நீண்ட நேரமாக நடந்து கொண்டிருந்ததால் அவர்களுடைய நடையில் ஒரு தளர்ச்சி இருந்தது.

அவர்களுடைய தோள் பட்டைகளில் தொங்கிக்கொண்டிருந்த ஏகே-47இன் சுமை வேறு நகர விடாமல் அழுத்திக் கொண்டிருந்தது.

''அம்மான்!.. சுதன்!.. இருட்டுப்பட்டுக் கன நேரமாச்சுது, விடியிறதுக்கிடையிலை செல்லம்மா ஆச்சியின்ரை வீட்டை போய்ச் சேர்ந்திட வேணும்.''

அந்த அதிகாலையில் பரந்தன் சுற்றிவளைப்பில் இருந்து தப்பி எப்படியோ காட்டுப்பகுதிக்குள் வந்து சேர்ந்த சுதனும், ரமணனும் சோர்வு தெரியாமல் இருப்பதற்காக இடையிடையே கதைத்துக் கொண்டே சென்றனர்.

தமிழ் மக்களைக் காப்பதற்காகப் போர் புரிகின்றோம் என்று கூறிக்கொண்டே தமிழீழ மண்ணை ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்து கொண்டிருக்கின்ற இந்தியச் சிப்பாய்க ளிடம் இருந்து போராளிகளுக்குத் தங்க இடமும் கொடுத்து, உணவும் வழங்கி அடைக்கலம் கொடுத்து வருகின்ற ஆயிரக் கணக்கான உறவுகளில் செல்லம்மா ஆச்சியும் ஒருத்தி.

கிளிநொச்சியில் இருந்த போது, அவளுடைய கணவன் வேலுச்சாமி, இந்திய இராணுவத்துடன் கூட வந்த, 'திறிஸ்ரார்' கும்பலினால் சுட்டுக் கொல்லப்பட்ட பின், தனிமரமா தவம் கிடக்கும் செல்லம்மாஆச்சிக்கு உறவுகள் என்று சொல்லிக்கொள்ள அங்கே யாருமே இல்லை.

பரம்பரையாகச் சேர்த்து வைத்த சொத்துக்களோ, நிரந்தர வருமானமோ எதுவும் இல்லாமல் அரசாங்கத்தினால் மாதாமாதம் வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணத்தைக் கொண்டே காலத்தை ஓட்டிவந்தாள்.

அந்த நிலையிலும் கூட, எவராவது போராளிகள், அவளுடைய வீட்டிற்குள் நுழைந்து விட்டால் அவர்களை யாருக்கும் தெரியாமல் தங்கவைத்து, உணவும் கொடுத்துப் பத்திரமாகப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்து விடுவாள்!

''என்ரை பிள்ளையள் அண்டைக்கு அங்கனேக்கை நிண்டிருந்தால், கோதாரி விழுவாங்கள் என்ரை அப்புவைச் சுட்டிருப்பாங்களோ?''

அவள் அடிக்கடி சொல்லிச் சொல்லி அழும்போதெல்லாம், ''என்ரை பிள்ளையள்'' என்று போராளிகளைத் தான் செல்லமாக அழைத்து அதனூடாகத் தனது துயரங்களையெல்லாம் மறந்து விடுவாள்.

அன்று ஏனோ தெரியவில்லை, கணவன் வேலுச்சாமியின் நினைவு வந்து விட்டது! தரையில் இருந்தபடியே கண்ணீர் விட்டு அழத்தொடங்கி விட்டாள்.

''பாயிலே படுக்கவில்லை
ஒரு நோய் வந்து சாகவில்லை
ஊருக்கு உழைத்த ராசா
உருத் தெரியாமல் போனாரே
ஊரை அழிக்க வந்த
கொடும்பாவி வடக்கன்
என் உத்தமனை
அழிச்சானோ...
என்ரை ராசா... என்ரை
அப்பு...''

துயரத்தை அடக்க முடியாத நிலையில் வாய்விட்டே, அழுது ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

அந்த மெல்லிய இருட்டு மறையும் நேரத்தில் செல்லம்மா ஆச்சியின் மனம் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது.

இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும். அதற்குப் பிறகு, மீண்டும் சப்பாத்து ஒலிகள், அந்தக் கிராமத்து மண்களைப் பதம் பார்க்கத் தொடங்கி விடும்.

''ஆச்சி!.. ஆச்சி!..''

செல்லம்மா ஆச்சியின் வீட்டுப்படலையின் முன் நின்றபடியே மெதுவாகச் சுதன், குரல் கொடுத்தான். அவனுடைய குரலைக் கேட்டதும், பதறித் துடித்து எழுந்த செல்லம்மா, ஓடிச்சென்று படலைக்கட்டை அவிழ்த்துவிட்டு, 'விறுவிறு'வென்று உள்ளே கூட்டி வந்தாள்.

''ஆச்சி!.. இண்டைக்கு, அருந்தப்பிலை ஆமியின்ரை றவுண்டப்பிலையிருந்து தப்பிவந்து விட்டம்... நேற்றுக் காலையிலை இருந்து ஒண்டுமே சாப்பிடேல்லையணை... ஏதாவது சாப்பிட இருந்தால் தாவனணை..''

அந்த இருவரும், செல்லம்மாவின் முகத்தைப் பார்த்தபடியே கேட்டதும், அவளுக்குச் 'சுரீர்' என்று இருந்தது.

அந்த நேரம் என்ன கூறுவது என்று தெரியாத நிலையில் அவள் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

இப்போது சில நாட்களாக, அந்தப் பிரதேசம் தொடர்ந்து சுற்றி வளைக்கபட்டுப் போராளிகள் தேடி அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரம் பார்த்து, அவர்கள் இருவரும் வீட்டு வாசலில் வந்து நின்றதும், செல்லம்மாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.


''என்னட்டை இப்ப ஒரு சாப்பாடும் இல்லை. என்னாலை இப்ப ஒண்டும் தரேலாது... போயிற்று வாங்கோ பிள்ளையள்...''

அவளால் எப்படி இந்தப் பதிலைக் கூற முடிந்ததோ தெரியவில்லை!

முகத்தில் அறைந்தாற்போல் இப்படி அவள் கூறியதும் சுதனுக்கும், ரமணனுக்கும் தூக்கிவாரிப் போட்டது!

''செல்லம்மா ஆச்சியா இப்பிடிச் சொல்லுறா.?''

அவர்களுக்குள்ளாகவே மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு கணம் அந்த வானமே இடிந்து அவர்களுடைய தலையில் விழுந்து விட்டது போல் திகைத்துப் போய் நின்றனர்!




''ஆச்சி!.. என்னணை இண்டைக்கு...''

அதற்குமேல் அவர்களால் எதுவுமே கேட்க முடியவில்லை! நெஞ்சில் எழுந்த துயரத்தை அடக்கியபடி, மீண்டும் வந்த வழியே திரும்பிக் காட்டுப்பகுதியை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டனர்.

அதுவரை அவர்களை வாட்டிக் கொண்டிருந்த பசியின் துயரமும், சோர்வும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

ஒருவர் மீது அதீத நம்பிக்கையும், பாசமும் வைத்துப் பழகும் பொழுது, சற்றும் எதிர்பாராத நிலையில் அவராலேயே உதாசீனப்படுத்தும் பொழுது ஏற்படும் துயரம், மற்றைய எல்லாத் துயரங்களையும் விஞ்சி நின்று பெருஞ்சுமையாக அழுத்தத் தொடங்கிவிடும்.

''அம்மான்!.. சுதன்!.. ஆச்சிக்கு இண்டைக்கு என்ன நடந்தது... சேக்!.. யாரை நம்புவது என்று கூடத் தெரியேல்லை...''

ரமணன் சற்றுச் சலுப்புடன் கூறியபடியே தன் வலது தோளில் இருந்த ஏகே-47 ரகத் துப்பாக்கியை இடது தோளுக்கு மாற்றியபடி நடந்து கொண்டிருந்தான்.

''ரமணன்!.. அப்பிடிச் சொல்லாதை அம்மான்!.. ஆச்சிக்கு இண்டைக்கு ஏதும் மூட் சரியில்லையோ அல்லது ஆமிக்காரங்கள் வாற நேரமெண்டபடியால் இப்படிச் சொன்னாவோ.தெரியேல்லை... பாவம்...'' ரமணனைச் சாந்தப் படுத்தியபடியே, மௌனமாக நடந்து கொண்டிருந்தான்.

அவனுடைய மென்மையான இதயம், அந்தத் தாய்மைக்காக கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. அங்கிருந்து அடர்ந்த காட்டுப் பகுதியை அடைந்த சுதனும், ரமணனும் அருகே உள்ள ஓடையில் இருந்த தண்ணீரைக் கைக்குட்டையினால் வடித்து உறிஞ்சிக் குடித்து விட்டுப் பரந்த அந்த மரத்தின் கீழ் படுத்தனர்.

நடையின் சோர்வு ஒரு புறம், பசிக்களைப்பு மறுபுறம் அப்படியே அவர்களைத் தூங்கச் செய்துவிட்டது. சுட்டெரித்துக் கொண்டிருந்த சூரியன், மேற்கே சரிந்து கொண்டிருப்பது தெரியாது உறங்கிக் கொண்டிருந்த இருவரும் திடீரெனக் கண்விழித்ததும் அவர்கள் எதிரே செல்லம்மா ஆச்சி நின்றாள்.

பனையோலை மூடல் பெட்டியுடன் எதிரே நின்ற செல்லம்மா ஆச்சியின் தோற்றம், அவர்களுக்குக் கனவு போல் இருந்தது.

''ஆச்சி!.. ஆச்சி!..''

இரண்டு பேருமே, ஒரே நேரத்தில் வாயைப் பிளந்ததும், செல்லம்மா ஆச்சிக்கே சிரிப்பு வந்துவிட்டது.

''எடேய்!.. பிள்ளையள்!.. படுத்தது போதும், எழும்பி முகத்தைக் கழுவி விட்டு வாருங்கோ; சாப்பாடு கொண்டு வந்திருக்கிறன்''

செல்லம்மா ஆச்சி வாஞ்சையோடு கூறிக்கொண்டே மூடல் பெட்டியில் இருந்த சோறு, கறிகளை ஒன்றாகச் சேர்த்துக் குழைக்கத் தொடங்கி விட்டாள்!.

''ஆச்சி!.. விடியப்புறம் வர, சாப்பாடு இல்லை, போங்கோடா எண்டு கலைச்சியள்... இப்ப இப்பிடிச் சுடச்சுடக் கொண்டு வந்திருக்கிறியள்...''

அவர்கள் அப்படிக் கேட்டதும், செல்லம்மாவுக்கு 'ஓவென்று' கதறியழ வேண்டும் போல் இருந்தது. அவளுடைய காய்ந்து உலர்ந்து போன, இரண்டு கண்களில் இருந்தும், கண்ணீர் பொல பொலவென்று வழிந்து கொண்டிருந்தது.

''ஆச்சி!.. ஏனணை அழுறியள்?.. நாங்க குறையா ஒண்டும் சொல்லேல்லையணை...''

**-வல்வை. ந.அனந்தராஜ்**

'' எங்களோட தொடர்பு வைச்சா உங்களுக்குத்தான் ஆபத்துத் தானணை என்ன செய்யிறது உங்களைப்போல இருக்கிற கொஞ்சப் பேராலைதானே எங்கட போராட்டமே உயிர்ப்போட விளங்குது''

அவர்கள் அப்படிக் கூறியதும், செல்லம்மாவின் துயரம் இன்னும் பீறிட்டெழுந்தது.

''ஐயோ என்ரை ராசாக்கள்! என்னைப் பிழையா நினைக்க மாட்டியள்... இரண்டு நாளா வீட்டிலை சமைக்கிறதுக்கு ஒண்டும் இருக்கேல்லை... நான் கூட நேற்று முழுக்க ஒண்டும் சமைக்கேல்லையப்பு... என்ரை கஷ்டத்தை நினைத்து இரவிரவாக அழுது கொண்டிருந்தனான். நல்ல வேளை இண்டைக்குத் தான், என்ரை நிவாரண அரிசி கிடைக்கிற நாள். அதுதான் விடிஞ்சதும் ஓடிப்போயச் சங்கக்கடையில அரிசியை வாங்கி வந்து சமைச்சகையோடை கொண்டு வாறன்...! சாப்பிடுங்கோ அப்பு... நீங்கள் சந்தோசமாகச் சாப்பிட்டாத்தான் என்ர வயிறு நிறையும்.


பொங்கி எழுந்த துயரத்தின் மத்தியில் எழுந்த செல்லம்மாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அந்த இரு போராளிகளின் இதயங்களையும் ஒரு கணம் உலுப்பி எடுத்தது!

''அம்மா!..''

ரமணனும், சுதனும் தம்மையறியாமலேயே கூவியபடி செல்லம்மா ஆச்சியைக் கட்டிப்பிடித்து அழுதபொழுது, அங்கே எல்லாமே மௌனித்துப் போய் நின்றன! ☆

# மாத்திரைக்கதைகள்

## விதைகள்



**வெயிலில்** நெடுந்தூரம் பறந்து வந்த நாடோடிப் பறவைகள் முகில்களின் இடையே நுழைந்த பொது குளிரில் நனைந்து களித்தன.

கொஞ்ச நேரத்தில் மழைத் துளிகளாக முகில்கூட்டம் கீழே விழத் தொடங்கியது.

' ஐயோ! நல்ல முகில்கள் விழுகின்றனவே...' என்று இரங்கி அழுதது ஒரு பறவை.

வழிகாட்டிப் பறவையோ ' எல்லாம் நன்மைக்கே' என்றது.

' குளங்கள் நிரம்பும் - நாம் மீன்கள் பிடிக்கலாம். மரங்கள் தழைக்கும்- நாம் கூடுகள் கட்டலாம்.'


அது சொன்னது:-

'நல்லவர்கள்
எழுந்தாலும் நன்மைக்கே
விழுந்தாலும் நன்மைக்கே'

## இயக்கம்

**இரவு-**

கடலில் வந்து கொண்டிருந்த படகு களில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது:-



' அதோ.... கடற்கரையில் தன்னந் தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக் கிறாய்?'

'தெரியவில் லையே...' என்றது இரண்டாம் படகு. முதல் படகு சொன் னது:-

' கூட்டமாகத்தான் பணி ஆற்றலாம் என்பதில்லை தன்னந்தனியாகக் கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா?'


வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது:-

' தனி என்றிருப்பினும்
பணி என்றிரு.'

## உரிமை

**மழை-**

தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரலெழுப்பின.



குளத்தில் இருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது.

' இப்படிக் கத்துகிறீர்களே- உங்கள் குரலைக் கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்து விட்டால் உங்கள் நிலை என்ன ஆவது?

தவளைகள் சிரித்தன.

' நாங்கள் கொஞ்சமும் கவலைப்படமாட்டோம்' என்றது கூட்டத்தில் ஒரு தவளை.

இன்னொரு தவளை சொன்னது:-

' மூச்சை இழக்கலாம்
பேச்சை இழக்கலாமா?'

**உணர்ச்சிக் கவிஞர்**
**காசி ஆனந்தன்**

தேவதூதர்கள் அடி எடுக்கவும் அஞ்சுகிற இடத்தில், வேகமாகப் பாய்வார்கள், அறிவிலிகள். -அலெக்ஸாண்டர் போப்

# நூல்நோக்கு

நூல் : எழுதப்பட்ட அத்தியாயங்கள்
எழுதியவர் : சாந்தன்
வெளியீடு :




நூ மண்ணில் இனப் பிரச்சினை வேரோடி விருட்சமான தற்குப் பாரிய அரசியற் காரணங்களைக் கூறலாம்.

ஒரு கட்டுரையாளன் இவற்றைப் புள்ளி விபரங்கள் தரவுகள் உரைகள் எனப் 'பளிச்' சென்று போட்டுப் பரவி எழுதிவிட முடியும். அது செறிவானதாகவும் அமையலாம். அது யதார்த்தமானது. ஒரு சிறு கதை அல்லது கவிதை, அதில் ஒரு சிறுதுளியை உள்வாங்கி, உருவாக்கும் போது அது உள்ளத்தில் ஆழமான பள்ளத்தை உருவாக்கி, அதில் தேங்கி நின்று விடுகிறது.

இவ்வகையில் உருவாகும் பள்ளங்களில், அடிக்கடி அலைகள் எழுந்து விழுந்து வாசகரை குழப்ப மடைய அல்லது சிந்திக்கத் தூண்டுகிறது.

சொந்த மண்ணைவிட்டு வெளியே வந்த ஒவ்வொருவரும் அனுபவித்தும் மறந்துவிட்ட சம்பவங்கள் (சாந்தன் உட்பட) அல்லது மறந்து போனதாக காட்டிக் கொண்டிருப்பவை.

கதாபாத்திரம் தனியொரு மனிதனை சமூகத்தை வைத்து உருவாகிய போதும். அதன் யதார்த்த புறநிலை ஒவ்வொருவருக் குமானதாக அமைந்து விடுவதும், ஒரு உண்மையான இலக்கியத்தின் இயங்கியல் தன்மையாகும்.

அந்த வகையில் சாந்தனின் 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' என்ற தொகுதி ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரின் உணர்ச்சிகளின் வடிகாலாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணச் சமூகத்தினரின் முதலீடு கல்விதான் கல்வி கற்பதும் ஒரு உத்தியோகத்தை இலக்கு வைத்தேயாகும். இது உள் நாடோ வெளிநாடோ ஆங்கிலேய ஆட்சிக்காலம் முதல் தொடர்ந்து வரும் நிலை யாகும்.

யாழ்ப்பாணத்துப் பொருளாதாரமே மணியோடர் தான் என்றுகூறுவதுண்டு. கல்விகற்ற தமிழர்கள் கொழும்பு, கண்டி என தமது வேலைகளைப் பெற சிங்கள வர்கள் வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப் பாணம் போன்ற இடங்களில் வேலை பெற்று அதனூடாக வதிவிடம் பெற்று நிலம் பெற்று குடித்தொகையைப் பெருக்கி, இனப் பிரச்சினையை ஊதிப்பற்ற வைத்தார்கள். இது அரசாங்க அரசியல் சதி.

சாந்தனின் கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரச ஊழியர்களினதும் கதை, அவரவர் தொண்டைக் குழிக்குள்ளேயே அமுங்கிப் போன விடயங்கள், வேலை தேடி கொழும்புக்கு அல்லது

சாமானிய மக்களிடையே அவர்கள் உய்த்துணராத வண்ணம் திணிக்கப்பட்ட இனவாதம் கிருஷ்ணன் தூதில் மிக இலகுவாக விளக்கப்பட்டுள்ளது. கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக பணமும் பதவியுமே குறியாக தலையாட்டி வாழும், வாழ்கின்ற, வாழப்போகும் மக்களின் பிரதிநிதிகள் வெகு அழகாக இனங்காணப்பட்டு... அது அவர்கள் விதி என்று எண்ணச் செய்வதும் மிக அற்புதமான உத்திதான்.

எழுதப்பட்ட அத்தியாயங்கள், எழுதப்படாத அத்தியாயங்களை அவாவி நிற்கின்றன. கடந்து போன காலங்கள் அக்கதையின் காலத்தை இப்போது கொண்டு வரும் போது இதயத்துள் ஏக்கம், ஏமாற்றப்பட்டு விட்ட அவலம் அந்தரிப்பு அல்லது அங்கலாய்ப்பு- பெயர் கூற முடியாத பேதைமை கலந்த உணர்வு இப்போது ஏற்படுகிறது. சாந்தனின் கதை சொல்லும் பாங்கு அந்த 'ஹெலி'யை நோக்கி எம்மை அடிக்கடி இழந்து வருவது அன்றைய சூழலில் இருந்தளவுக்கு இன்று ஆவலைவிடச் சினத்தையே தருகிறது என்பது காலத்தின் பதிவாய் அமைந்த அக்கதையின் வெற்றிதான். ஒரே சம்பவம் காலத்துக்காலம் வேறுபட்ட உணர்ச்சிகளை தோற்றுவிப்பதும் கூட ஒரு வரலாற்றுப் போக்குத் தான்.

இதே தொகுதியில் வந்துவிட்ட 'வேலிகளின் கதை' இந்த ஹெலியின் கதையின் அதாவது எழுதப்பட்ட அத்தியாயங்களின் ஒரு துண்டாகத் தெரிகிறது. யாழ்ப்பாணக் கலாச்சாரங்களின் குறியீடான கிடுகுவேலிகள் மதில்கள் என்பவையின் வீழ்ச்சி அதனைத் தொடர்ந்து நடைபெற விருந்த நடைபெற்று முடிந்த பல கதைகளை ஒருங்கு சேரத் தரு கின்றன. அன்றும், இன்றும் ஆக்கிரமிப்புகள் கைதுகள் இப்படித்தான் என்பதை துல்லியமாகச் சொல்லிச் செல்லும் இக்கதையில் ஒரு மனிதமனத்தின் பிரலாபங்கள். மதிலருகே முளைத்து நிற்கும் சரக்கொன்றை கன்றுகள், இயற்கையாகவும், மலையாளத்துச் சிப்பாய் தரும் தண்ணீர் செயற்கையாகவும் தெரிகின்றன.


'ஆரைகள்' வட்டத்தின் உள்ளேயும் கொழும்பு வாழ்க்கையின் அந்தகாரம், ஒட்டாமை புலப்படுகிறது. 'நித்திய கண்டம் பூரண ஆயுள்' என்பது போல இவர்கள் வாழ்க்கையை விரும்பி ஏற்றுக் கொண்டதன் நெருக்கு வாரம் புலப்பட எஸ்போவின் சடங்குக்குக்கு மாற்றாக அமைத்துக் கொண்ட வாழ்க்கைத்தளம், யாழ்ப்பாணத்துப் படிதாண்டா 'சிரித்திரன்' காலப்பெண்கள் கொழும்பின் குறுகல் சந்துகளிலும் கூடுகளிலும் வாழத் தலைப் பட்டமையான ஒரு மாற்றமும் தற்காலச் சிறுகதைகளில் பதிவு செய்யப்படுகிறது. ஆரைகள் அப்படியான ஒன்று.


சாந்தன்

கொழும்பிலிருந்து கொண்டே அங்குள்ள மக்களிடம் எவ்வகையிலும் செலுத்த முடியாத சாதித்தனத்தை தமிழர்களையே துப்பறிந்து கண்டு பிடித்துத் தக்க வைக்க முயலும் சாதித்தடிப்பு, சிங்கள நண்பர்களுடன் சிரித்தபடியே பேசி அவர்கள் சிறுமைகளை நாசூக்காக சுரண்டிவிடும் உரையாடல்கள் உயிராபத்து வரும்போது கொள்கைகளைத் தீயிடும் தந்திரம், எனப் பல கோணங்கள். இவற்றின் மையப்புள்ளியாக இனப பிரச்சினை. சாந்தனின் இயல்பான எழுத்து நடை யாரையும் சுவீகரித்து தன்னில் ஈடுபட வைத்துவிடும் அது இதிலும் உண்டு.

கனதியான பல விடயங்கள், விட்டேற்றியாகப் பேசப்படுவது போல- 'ணங்'கென இதயத்தை அதிர்த்து மீள்கிறது. ஒரு நல்ல தொகுப்பினைப்படித்த நிறைவு ஏற்படுகிறது.

-தமிழ்க்கவி-



# யாழ்ப்பாணத் தரிசனம்

1

மீளவும் உயிர்த்திருக்கிறது பசுமை
தமிழரின் நிமிர்வின் குறியீடாய்
இயக்கச்சியைத் தின்றிருந்த
"அயன்சைற்" றின் நிழலில் அறித்தெறியப்பட்ட
தாலங்களின் 'அடிக்கட்டைத் தோப்பில்'
மீளவும் உயிர்கிறது பசுமை.
'உடையவன் கண்டால் தற்கொலைதான் செய்வான்'
என்றவிந்த நெஞ்சுகள் குளிர்ந்தன..
வயிறெரிந்து சாபமிடல், கழிவிரக்கம்
என்பதல்ல எங்கள் வாழ்வியல்
'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எங்கள் வழி!
வாழ்க தோப்புடையோனே,
நீ எங்கள் வாழ்வின் துளி.

2


பளைதாண்டிப் போகிறது வண்டி
வட்டற்ற தென்னைகள் பனைகள்.
எறிகணைச் சிதறல்களைத் தாங்கி
பலப்பல கோலங்களில் மரங்கள்.
குறுக்கறுத்த புலிகளைச் சூழ்ந்து
அறுபதாயிரம் படையினர் புரிந்த சாதனை!

பதைக்கிறது மனது,
இதனுள் நின்றவர் எப்பாடுபட்டிருப்பர்!

விரிகின்றன விழிகள்.
உயிரிழந்து பல்லிளித்து நிற்கிறது
துருப்புக்காவி ஒன்று அப்பாலே ஒரு ட்ரக்.
இதனுள்ளிருந்தா கேட்டாய் எம் தளபதியைச் சரணடைய
காப்போமவற்றை.
எம்பிள்ளைகளின் வீரத்தின் சின்னமாய்.

3

வாய்விட்டுச் சிரித்தேன்
மறுகணம் இறுகிக் கொண்டது மனம்
முட்கம்பியும் காவலரணும் சூழ்ந்த
நாவற்குழிப் பாலத்தின் சுவர்க்கரையொன்று
"Srilankan Army Is Best" என்கிறது.



திரும்பிப் பார்த்தேன்
யாழ் வளைவும் செம்மணி வெளியும்
தெளிவாய்த் தெரிந்தன.

4

எட்டாவது ஆண்டில் உன்னைத்
தரிசிக்க வந்தேன் உன் துயிலிடத்தில்
நள்ளிரவில் சுடரேற்றி நாமழுது உரமேற்ற
நாட்கள் எழுந்தன மனதில்
இப்போதும் மஞ்சள் மாலையில்
ஆயிரங்களாய்க் கூடினோம்
'சந்திகளில் நின்றோர்' முகமும் மனமும் அதிர
மீண்டும் உயிர்ந்த உன் துயிலிடத்தில்
ஏற்றுகிறேன் சுடர்கள்
சுடர்கிறது ஒளியென் மனதில்.

பு.சிந்துஜன்





## குட்டிக்கதை

# கழுதையின் குழப்பம்...

சுந்தரம் என்பவர் சிலைகள் வடிப்பதில் வல்லவர். ஊரிலுள்ள அனைத்துக் கோயில்களிலும் அவரின் சிலைகளே இருக்கும். அவரை சிற்பி சுந்தரம் என்று தான் எல்லோரும் அழைப்பார்கள்.

ஒரு நாள் சிற்பி சுந்தரம் ஒரு அழகான சிலையை வடித்து விற்கப் புறப்பட்டார். புறப்படும்



போது சிற்பி சுந்தரம் பக்கத்து ஊரில் இருக்கும் ஒரு கழுதையை வாடகைக்குப் பிடித்து, கழுதை மேல் சிலையை வைத்து அதனுடன் நடந்து சென்றார்.

சிற்பி சுந்தரத்துக்கும் கழுதைக்கும் முன்னே வந்தவர்கள் "ஆஹா! அற்புதம்!! ஆஹா! அற்புதம்!! அற்புதம்!!!" என்று சிலையைப் பார்த்து புகழ்ந்தார்கள்.

" என்ன நடந்தது இந்த மக்களுக்கு? ஏன் என்னைப் பார்த்து இப்படிப் புகழுகிறார்கள்?" என்று நினைத்தது கழுதை.

கொஞ்சத்தூரம் சென்றதும் ஒரு வழிப்போக்கன் சிலையின் அழகை வர்ணித்தான்.

அழகே அழகே அழகழகே
அருகில் வரலாமா
என் நெஞ்சைத் தொட்ட
உந்தன் மேலே
கைகள் படலாமா.

என்று பாடினான். பாட்டைக் கேட்டதும் கழுதை சந்தோசப்பட்டது இன்று தான் மிகவும் அழகாய் வந்து விட்டேன் என. நேரம் போகப் போக.

சந்தோசம் தாங்க முடியாமல் கழுதை கத்திக்கொண்டு ஆடியது. இதைப் பார்த்த சிற்பி சுந்தரம் கையில் வைத்திருந்த தடியால் கழுதைக்குத் தட்டினார்.

" எஜமான் கூடப்பாராட்டி முதுகில் தட்டுகிறரே...?" என நினைத்த கழுதை இன்னும் சத்தமாகக் கத்தியபடி வேகமாக ஆடியது.

கழுதையின் திடீர் நடவடிக்கையைக் கண்ட சிற்பி சுந்தரம் சிலையை எடுத்துக் கொண்டு நடந்தார். கழுதை மிகவும் சந்தோசத்துடன் குரல் எழுப்பியபடி ஊருக்குள் ஓடியது. ஒரு வயோதிபர் கழுதையைப் பார்த்து

"யாராவது இந்தக் கழுதையை விரட்டுங்கள். இப்படிக்



கொடூரமாகக் கத்துகிறதே" என்றார். வயோதிபரின் வார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் சேர்ந்து கழுதையை விரட்டினார்கள்.

" இப்பொழுதுதானே என்னை எல்லோரும் பாராட்டினார்கள். பின்பு ஏன் என்னை



விரட்டுகிறார்கள்?" என நினைத்தபடி கழுதை ஓடியது.

பிரஷகி.

# வாரம் ஒரு குறள் அறிவோம்...



நம்மில் பலர் அதிகம் படித்திருக்கின்றோம். அதிகம் தெரிந்திருக்கின்றோம். ஆனால் படித்ததையும் தெரிந்ததையும் அடுத்தவருக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு அதிகம் பேருக்குத் தெரிவதில்லை. அதனால் என்ன பிரயோசனம்? பேருக்கும் புகழுக்குமாகவா படித்தோம் இதை வள்ளுவர் அழகாகச் சொன்னார். எப்படித் தெரியுமா?

அழகான மலர்கள் கொத்தாக இருக்கிறதாம். அவற்றில் இனிமையான தேன் ஊறி வடிகிறதாம். ஆனால் வண்டுகள் அதனை நாடிச் செல்லவில்லையாம். ஏன்? அவற்றைக் கவரக்கூடிய நறுமணம் அந்த மலர்களில் இல்லை. அதனால் தான் வண்டுகள் மலர்களை நாடிச் செல்லவில்லை.

அதே போல கற்றவர்கள், தாம் கற்றவற்றை அடுத்தவர் விரும்பிக் கேட்கும் படியாகச் சொல்லப் பழக வேண்டும். இதனையே

"இணர் ஊழ்த்தும் நாற மலர் அனையர்
கற்றது உணர விரித்துரையாதார்"

என்ற குறளில் வள்ளுவப் பெருந்தகை அழகாகச் சொல்லியுள்ளார். ஆகவே நாமும் கற்றதைத், தெரிந்ததை அடுத்தவர் விரும்பிக் கேட்கும்படி சொல்லப் பழகுவோம் அதுவே கற்றதற்குப் பெருமையாகும். பலனுமாகும்.

# பொது அறிவு

1. ரஸ்யாவின் தலைநகர் எது,
   மொஸ்கோ
2. தமிழீழத் தானியக் களஞ்சியம் எங்குள்ளது?
   அம்பாறை
3. முதல் முதல் பைபில் அச்சிடப்பட்ட ஆண்டு எது?
   1454 ஆம் ஆண்டு
4. ஒளியின் திறனை அளக்கும் கருவி எது?
   ஓடியோமானி
5. குருதியை நன்நிலையில் வைத்திருக்கும் கனியுப்பு எது?
   இரும்பு

தணிகை

# தைரியத்தின் குழந்தைப்பருவம்

*இந்தியாவில் உள்ள காசி தசரா விழா வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கங்கையில் சிறுவர்கள் நீந்திக்கொண்டு நின்றார்கள். படகுகளில் நின்று பெரியோர்கள், சிறியோர்கள் அனைவரும் பார்த்து இரசித்தார்கள். முதலை ஒன்று கங்கையின் நடுவே தோன்றியது. சிறுவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று தலை தெறிக்க ஓடினார்கள். ஒரு சிறுவனுக்கு மட்டும் நீந்தத்தெரியாது கங்கையிலேயே நின்று அழுதான். படகுகளில் நின்ற நீச்சல் வீரர்களும், சிப்பாய்களும் வேடிக்கை பார்த்தனரே தவிர ஒருவரும் காப்பாற்ற முன்வரவில்லை. ரோமோ போத்தின் மகளான மனு தன் தோழிகளுடன் நின்று எல்லாவற்றையும் கவனித்தாள். முதலை சிறுவனை நெருங்கியது. ஒருவரும் சிறுவனைக்காப்பாற்ற முயலவில்லை என்பதால் மறுகணம் தயங்காமல் மனு கங்கையில் குதித்தாள். எல்லோரும் ஒருகணம் அதிர்ந்தனர். ஏழு வயதுடைய சிறுமி சிறுவனுடைய கையைப்பற்றி படகின் மறுகரைக்கு இழுத்துச்சென்றாள். படகிலிருந்த வீரர்கள் இருவரையும் மேலே தூக்கிக்காப்பாற்றினார்கள். ரோமோ போத் ஓடி வந்து தன்மகளை அள்ளி அணைத்து முத்தமிட்டாள். அந்த அதிசயத்தை மற்றோரும் வெகுவாக புகழ்ந்தனர். இந்தத் துணிகரமான செயலைப் புரிந்த மனுதான் பிற்காலத்தில் பிரிட்டிஸ் அரசையே எதிர்த்துப் போராடி புகழ்பெற்ற " ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய் ஆவாள்!*

நி.நிஷாந்தி
8A மு/உடையார்கட்டு ம.வி.

# கண்டு பிடிப்புக்கள்.

01. கணனியைக் கண்டு பிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு எங்கே கண்டுபிடித்தார்?
*வானடேசவ் 1976 அமெரிக்கா.*
02. கணிக்கும் பொறியைக் கண்டு பிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு எங்கே கண்டு பிடிக்கப்பட்டது?
*பிளையஸ்பாஸ்கல் 1642 பிரான்ஸ*
03. அணுகுண்டைக் கண்டு பிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு எங்கே கண்டு பிடிக்கப்பட்டது?
*ராபர்ட்ஒப்பன் 1945 அமெரிக்கா.*
04. உலங்கு வானூர்தியை கண்டுபிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு எங்கே கண்டுபிடிக்கப்பட்டது?
*ஏதியன் ஏவற்மிச் சென் 1924 பிரான்ஸ்*
05. குளிர் சாதனப்பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு எங்கே கண்டு பிடிக்கப்பட்டது?
*போகின்ஸ் 1834 பிரித்தானியா.*

க. சிந்துஜா, ஆண்டு 11
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
வவுனியா.

# ஒலி எவ்வாறு பதிவு செய்யப்படுகிறது?

இன்றைய யுகத்தில் ஒலியானது ஊடகத்தில் பதிவு செய்யப்படுகிறது.

1. இசைத்தட்டு
2. ஒலிநாடாக்கள் என்பனவாகும்.

இதில் இசைத்தட்டில் ஒலியை பதிவு செய்யும் முறையை பன்னல் வரையி முறை என அழைப்பர். இசைத்தட்டில் அதிர்வுகள் பள்ளங்களாக பதிவு செய்யப்பட்டு பின் அப்பள்ளங்கள் ஊடாக வேறு ஓர் ஊசியை அதிரவிடும் போது பதியப்பட்ட ஒலியை நாம்கேட்கக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் இரும்பு ஒக்சைட் மூலக்கூறுகளைக் கொண்ட பிளாஸ்டிக் நாடாக்களில் ஒலி பதிவு செய்யப்படுகின்றது.

நாடாவில் ஒலிப்பதிவிற்கு முன்பு அதிலுள்ள இரும்பு ஒக்சைட் மூலக்கூறுகள் ஒழுங்கற்று காணப்படும். இது நுணுக்குப்பன்னியால் ஒலிச்சக்தி மின்சக்தியாக மாற்றப்பட்டு பதிவு செய்யும் தலையூடாக செல்லவிடும் போது மாறும் காந்தப்புலம்ஒன்று உருவாக்கப்படும். இக் காந்தப்புலத்திற்கு அருகில் நாடாவை அசையவிடும் போது இரும்பு ஒக்சைட்டுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்படும். மீண்டும் பதியப்பட்ட இந்நாடாவை வலிமையான காந்தப்புலத்தின் அருகே வைக்கும் போது ஒழுங்கு செய்யப்பட்ட இரும்பு ஒக்சைட் மூலக்கூறுகள் குழப்பமடைவதால் பதிவு செய்யப்பட்ட ஒலியானது அழிந்து விடும் இதன் காரணமாகவே ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஊடகங்கள் காந்தத்திற்கு அருகில் வைக்கக்கூடாது என்பர்.

த.ஜெனிநெல்சன்
மல்லாவி மத்தியகல்லூரி

# விஞ்ஞான விளக்கங்கள்

01) எயிட்ஸ் நோயாளிகள் தடிமன் காரணமாகவும் இறக்கலாம்.
குருதியிலுள்ள நோய் எதிர்க்கும் பிறபொருள் எதிரிகளால் தொற்று நோய் வராது எதிர்க்கும் ஆற்றல் நீர்ப்பீடனம் எனப்படும்.
தொற்றுகளிலிருந்து எமது ஒவ்வொருவரின் உடலையும் பாதுகாக்க இந் நீர்ப்பீடனத் தொகுதி உதவுகிறது.
எயிட்ஸ் நோய்க் கிருமியான வைரசு உடலின் நீர்ப்பீடனத் தன்மையை குலைத்து விடுகிறது.
இதனால் தடிமன் போன்ற தொற்று ஏற்படும் போது கூட எயிட்ஸ் நோயாளிகள் இறக்கலாம்.

02) பீடைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் போது பீடைப் பூச்சிகளை முற்றாக அழித்தல் சுற்றாடலுக்கு நன்மை பயப்பதன்று.
பீடைகள் உணவுத் தொடரின் ஓர் அங்கமாகும் அத்தோடு இவை தாவரங்களின் மகரந்த சேர்க்கைக்கும் உதவுகின்றன.
இவற்றை முற்றாக அழிப்பதுடன் உணவுத் தொடர் பாதிப்படைவதுடன் மகரந்த சேர்க்கையும் குறைவடையும்.
இதனால் சூழற்சமனிலை குழப்பமடையும்.

கு.புவனேஸ்வரி,
வர்த்தகப்பிரிவு

## என் செல்லப் பிராணி

சின்னச் சின்ன நாயக்குட்டி
சிறிய நல்ல நாயக்குட்டி
நன்றி உள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி

வாலை அசைந்து ஆட்டியே
வந்து என்னை வரவேற்கும்
பாய்ந்து பாய்ந்து ஓடிடும்
பாலை நக்கிக் குடித்திடும்

தம்பிப்பாப்பா தன்னோடு
தாவித்தாவி பாய்திடும்
கண்ணிமையை போல என்னை
காவல் காக்கும் நாய்க்குட்டி

கறுப்பு நிற நாய்க்குட்டி
கண்டோர் மகிழும் நாய்க்குட்டி
நம்பி வீட்டைக் காத்திடும்
நன்றி மறவா நாய்க்குட்டி



அ.ரேணுகா
தரம் 6
கிளி/அ.ம.வி

சிறிது துணிவு இல்லாத காரணத்தால், உலகில் பல திறமைகள் சிதறிப் பறி போகின்றன. -ஸிட்னி ஸ்மித்

# ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத் தவறிய வாவெட்டிமலை இராசதானி




வன்னி மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டானுக்கு மூன்று மைல் தொலைவில் உள்ளது வாவெட டிமலை.அடர்த்தியான காட்டின் மத்தியில் உள்ள வாவெட்டிமலை இராசதானி யினதும், வணக்கத்தலத்தினதும், குடியிருப்புக்களினதும் அழிபாடுகளை இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. 'மாநகர் வாவெட்டி மலை' என வையாபாடலில் குறிப்பிடப்படுவதிலிருந்து பெரிய தொரு நகரமாக வாவெட்டிமலை திகழ்ந்திருக்கிறது என அறியக் கூடியதாக இருக்கிறது.

வாவெட்டிமலை இராசதானி பற்றி வையாபாடலில் இடம்பெறும் குறிப்பினையும் அது தொடர்பான சம்பவங்களையும் நோக்குவோம்.

இலங்கை வேந்தனாகிய இராவணன் சங்காரம் செய்யப்பட்ட பின் இலங்கை மன்னனாக இராமனால் முடிசூட்டப்பட்ட விபி ஷணன் முன்னிலையில் யாழ்பாடி யொருவன் (கவிவீரராகவன்) யாழ் வாசித்து வடபால் அமைந்த மணற்றிடல் காட்டைப் பரிசாகப் பெற்றான். அதனைத் திருத்தி நற்பயிர் விளைவித்துச் சோலையாக்கினான். அங்கு ஓர் அழகான மண்டபத்தை அமைத்தான். பின்னர் தசரதனின் மைத்துனனான குலக்கேதுவின் மைந்தன் கோளுறு கரத்துக் குரிசிலைக் (கூழங்கைச் சக்கரவாத்தி) கூட்டிவந்து அவனுக்குச் சக்கரவர்த்திப்பட்டம் சூட்டினான். இது நிகழ்ந்தது கி.மு. 101 ஆம் ஆண்டிற்குச் சமமான கலியுக ஆண்டு 3000 இல் ஆகும்.

**கலாபூஷணம்,** முல்லைமாமணி வே. சுப்ரமணியம் வட இலங்கை வரலாறு பற்றி சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம் முதல் பேராசியர்களான அரசரத்தினம், கா.இந்திரபாலா, சி.பத்மநாதன், கலாநிதி க.செ. நடராஜா, விரிவுரையாளர் ப. புஷ்பரட்ணம், க. தங்கேஸ்வரி வரை பல் ஆய்வு செய்து கட்டுரைக ளையும் நூல்களையும் எழுதியுள் ளனர்.


கயிலாயமாலை, வையாபாடல், பரராச சேகரன் உலா, இராசமுறை யாழ்ப்பாண வைபவமாலை, மகாவம்சம், சூளவம்சம் முதலான நூல்களையும், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், தொல்பொருள்கள் முதலானவற்றையும் ஆதாரமாகக் கொண்டு ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

இவற்றில் மிகப் பழைய நூலான வையாபாடல் சயவீரசிங்கை ஆரியன் என்னும் ஐந்தாம் செகராசசேகரன் காலத்தில் (1380 - 1414) சமஸ்தானப் புலவராக விளங்கிய வையா என்னும் புலவரால் செய்யுள் நடையில் இயற்றப்பட்டது. 'இலங்கை மண்டலக் காதை' என்பதே இந்நூலின் உண்மையான பெயராகும். காலப் போக்கில் நூற்பெயர் மறைந்துபோக ஆக்கியோன் பெயராலேயே இது அழைக்கப்படுகிறது. இது ஒரு வரலாற்று நூல். இலக்கிய நோக்குடன் இந்நூல் செய்யப்படவில்லை.இந்நூற் செய்யுள்களில் கற்பனை வளமோ, வர்ணனையோ, அணிச்சிறப்போ, காவியச் சுவையோ இல்லை. இந்நூலில் இடம்பெறும் செய்திகள் பெருமளவு வரலாற் றுண்மைகளும் மிகச்சிறிதளவு கற்பனையையும் கொண்டுள்ளன.

இந்நூலின் 17ஆம், 96ஆம், 99ஆம் செய்யுள்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாவெட்டி மலை இராசதானியில் இருந்து அரசோச்சிய மன்னர்கள் பற்றி குறிப்புகள் உண்டு.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் வசன நடையில் அமைந்த நூல் கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்னும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டதென நூலின் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. எனினும் வைபவமாலை வாவெட்டி மலை இராசதானி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. பின்வந்த ஆய்வாளர்களும் இதனைக் கவனத்துக்கு எடுக்கவில்லை.


யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வையா வன்னியிலுள்ள இராசதானி பற்றிக் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. வலுவான ஆதாரம் ஒன்றின் அடிப்படையிலேயே வாவெட்டிமலை இராசதானி பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அந்த ஆதாரம் தற்போது எமக்குக் கிடைக்க வில்லை. கல்வெட்டுச் சான்றுகளோ, வேறு ஆதாரங்களோ கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இதனை ஒதுக்கிவிட முடியாது.



கோளுறு கரத்துக் குரிசிலின் மாமனான உக்கிர சோழனது மக்கள் சிங்ககேது என்பவனும்_ மாருதப் பிரவை என்பவளும் இலங்கை சேர்ந்தனர். மாருதப்பிரபைக்கு இருந்த குதிரை முக நோய் கீரிமலைத் தீர்த்தமாடக் குணமாயிற்று. 'குதிரை முகம் என்பது முழந்தாலைக் குறிக்கும். குதிரை முகநோய் என்பது முழந்தாளில் ஏற்படும் ஒரு நோய் போலும்' என வையாபாடல் பதிப்பாசிரியர் கலாநிதி. க.செ. நடராசா கூறுகின்றார்.

பின்னர் அவள் கதிலையம் பதிக்குச் (கந்தரோடை) சென்று அரண்மகவினை வணங்கிவருங் கால் உக்கிர சிங்கசேனன் அவளை மணந்து வா வெட்டியில் மண்டபமியற்றி அங்கிருந்து அரசாட்சி செய்தான்.

உக்கிர சிங்க சேனனை உக்கிரசிங்கன் எனவும் மாருதப் பிரபையை மாருதப்பிரவல்லட என்றும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து அரசாண்டான் என்று கூறுகின்றது இந்நூல். இவன் வன்னிமார்க்கமாகச் செல்லும் போது வன்னியார் ஏழு பேரும் எதிர்கொண்டு வந்து, தாங்கள் வன்னி நாடுகளைத் திறை கொடுத்து ஆள உத்தரவு கேட்டனர். தனக்கும் சேரவேண்டிய திறையை கோணேசர் கோவிலுக்குக் கொடுக்குமாறு கூறிவிட்டுக் கதிரை சென்றான் என்கிறது வைபவமாலை. வாவெட்டி இராசதானியில் இருந்து ஆட்சிபுரியும் போது இச்சம்பவம் நிகழ்த்தியிருக்கலாம் என ஊகிக்கலாம்.




கோளுறு கரத்துக் குரிசிலின் மறைவுக்குப் பின் உக்கிரசிங்கன் கதிரைமலைக்கு சென்று யாழ்ப்பாண அரசனாகியிருக்கலாம்.

உக்கிர சிங்கன் விஜயனின் சகோதரன் மரபில் உதித்தவன் என்கிறது வைபவமாலை. உக்கிர சிங்கனே குளக்கோட்டன் எனவும் மாருதப்பிரபையே ஆடக சௌந்தரி எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் கருதுகிறார். சோழகங்கன், சோடகங்கன், ஜயபாகு என்னும் வேறு பெயர்களும் குளக்கோட்டனுக்குண்டு.

**வன்னிப் பிரதேசத்தில் நிலவும் செவிவழிச்செய்தி குளக்கோட்டன் ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் கோவிலுக்குத் திருப்பணி செய்தான் என்று கூறுகின்றது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்திக்கடல் வயல் வெளிக்கு பேராற்று நீரை செல்ல விடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தையன்கட்டுக் குளத்தை திருத்திக் கட்டுவித்தான். இக்குளம் சோழப்பெருமன்னர் காலத்தில் (993 - 1070) ஒட்டுசுட்டானில் வன்னிப்பிரதேச ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த இராஜப்பிரதிநிதி முத்தரையனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.**

"சாலிவாகன சகாத்தம் 358 ஆம் வருஷத்திலே (கி.பி. 436)மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுது பார்ப்பித்தான்." என யாழ்ப்பாண வைபவ மாலை கூறகின்றது.

ஜயபாகு (குளக்கோட்டன்) கலிங்கமாகனுடன் இணைந்து இராசரட்டையை ஆண்ட தமிழ் மன்னன் என சூழவம்சம், பூஜாவலி ஆகிய நூல்கள் கூறுகின்றன. இவர்களின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என தற்கால ஆய்வாளர் கூறுகின்றனர்.

கிழக்கிலங்கையுடனேயே குளக்கோட்டன் திருப்பணிகள் பற்றிப் பெரும்பாலும் பேசப்படுகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் நிலவும் செவிவழிச்செய்தி குளக்கோட்டன் ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் கோவிலுக்குத் திருப்பணி செய்தான் என்று கூறுகின்றது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்திக்கடல் வயல் வெளிக்கு பேராற்று நீரை செல்ல விடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தையன்கட்டுக் குளத்தை திருத்திக் கட்டுவித்தான். இக்குளம் சோழப்பெருமன்னர் காலத்தில் (993 - 1070) ஒட்டுசுட்டானில் வன்னிப்பிரதேச ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த இராஜப்பிரதிநிதி முத்தரையனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.

இவற்றிலிருந்து உக்கிரசிங்கனே குளக்கோட்டன் கருத்து வலுவடைகிறது. இவன் வாவெட்டி மலை யில் இராசதானி அமைத்து வன்னிப் பிரதேச நிர்வாகத் துக்குப் பொறுப்பாக இருந்தான் என்று கொள்வது தவறாகாது.

பொன்னகர் நிகழும் கதிரையாம் பதியில்
போய்அரண் மக
வினை வணங்கிப் பின்னர் உக்கிர
சிங்கசேனன்றன்
பெண்ணென
இருந்தனன் அதற் பின்
மன்னவன் அடங்காப் பற்றினிலேகி
மாநகர் வாவெட்டி மலையில்
தன்னிகரற்ற
மண்டபம் இயற்றித்
தன்னரசியற்றினன்
இருந்தான
(வையாபாடல் 17)

என்றும் வையாபாடல் மாருதப்பிரபை கதிரைமலையில் அரண்மகவினை (முருகப் பெருமானை) வணங்கியபின் உக்கிர சிங்கனின் மனைவியானாள். என்பதையும் சுட்டுகின்றது.

வாவெட்டிமலை இராசதானி பற்றிய இன்னொரு குறிப்பு வையாபாடல் 96ஆம் 99ஆம் செய்யுள்களில் இடம் பெறுகிறது.

யாழ்ப்பாணத்திலே செகராச சேகரனையும், வாவெட்டியிலே சங்கிலியையும் அரசு பாலிக்க வைத்து அவர்கள் தமையனை பரராசசேகரன் முள்ளியவளையிலிருந்து பேரரசோச்சினான் என்றும் தன் தம்பியர்கள் யாழ்ப்பாணத்திலும் வாவெட்டியிலும் எவ்வாறு பரிபாலனம் நடத்தினார்கள் என மாதந்தோறும் சென்று கண்காணித்து வந்தான் என்றும் வையாபாடல் குறிப்பிடுகின்றது.

அந்தவனை வோர்களையும் மன்னவர்கள்
மன்னவன் பார்த் தன்பினோடு
கந்தமலி தாரிளவல் செகராச
சேகரனைக் கருணை கூர
இந்த யாழ்ப் பாணமதில் இருக்க வென்றே
சித்திரவே வரையு மீந்து
வந்து முள்ளி மாநகரில் கோட்டையும்
சினகரமும் வகுப்பித் தானால்
(வையாபாடல் 96)
எந்நாளுமிம் முறையே யாவரையும்
வாழ்விரென விருத்தியங்கன்
மன்னான இளவெலெனும் சங்கிலியை
வாவெட்டி சாரச் செய்து
முன்னோர்க்குப் புரிபூசை நிதம் தெரிசித்
தே முள்ளி வளையா மூரில்
மன்னான இரவிகுலப் பரராச
சேகரனும் வாழ்ந்தா னன்றே
(வையாபாடல் 99)

பரராசசேகரன் முள்ளியவளையில் கட்டியதாகக் கூறப்படும் கோட்டையின் சிதைவுகள் இன்றும் காணக் கூடியதாக இருக்கிறது. முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயமே (சினகரம்) பரராசசேகரன் கட்டிய கோயிலாகும்.

யாழப்பாணத்தை இரண்டு சங்கிலி மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். முதலாவது சங்கிலி கி.பி.1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி செய்தான். இரண்டாவது சங்கிலி (சங்கிலி குமாரன்) 1615 தொடக்கம் 1619 வரை யாழ்ப்பாணத்தில் அரசோச்சினான். வையா என்னும் புலவர் எந்தச் சங்கிலியைக் குறிப்பிடுகின்றார் என்று தெரியவில்லை. முதலில் வாவெட்டியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆட்சி புரிந்தவன் முதலாவது சங்கிலி எனக் கொள்ளலாம்.

தற்கால ஆய்வின்படி சங்கிலி பரராச சேகரனின் சகோதரன் அல்லன். பரராசசேகரனின் மூன்றாவது மனைவி வயிற்றுப் பிறந்தவன். பட்டத்து இராணி வயிற்றில் பிறந்தவர்கள் சிங்கவாகு, பண்டாரம் என்போர். சிங்கவாகுவுக்கோ அல்லது பண்டாரத்துக்கோ இளவரசுப் பட்டம் கட்டியபோது சங்கிலியை வாவெட்டியில் உபராசனாக அமர்த்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. பட்டத்துக்குரிய இளவரசர்களை விட இவன் வீரமும் ஆற்றலும் கொண்டவனாகத் திகழ்ந்திருக்கிறான். முடிக்குரிய இளவரசர்கள் கொல்லப்பட்ட பின்னர் (சங்கிலியே இவர்களைக் கொலை செய்தவன் என வைபவமாலை ஆசிரியர் அவன் மீது பழி சுமத்துகிறர்.) சங்கிலி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியிருக்கலாம். கீர்த்தி வாய்ந்த நாட்டுப் பற்றுள்ள மன்னனாக 42 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த பெருமை இவனைச் சாரும்.

முல்லைமணி

யாழ்ப்பாண அரசனான பரராச சேகரன் ஏன் தன் இராச்சியத்தை விட்டு வன்னிப் பிரதேசத்துக்கு சென்றான்? இதற்கு வையாபாடலும் யாழ்ப்பாண வைபவமாலை வெவ்வேறு காரணங்களைக் கூறுகின்றன.

"தென்னிலங்கை அரசர் சிலர் கொடுங்கோலோச்சிய காரணத்தால் குடி சனங்கள் பரராசசேகரன் பால் முறையிட அவன் தம்பியோடு படை நடத்திச் சென்று பகையரசரை அடக்கினான்." என வையாபாடல் கூறுகின்றது. அதன்பின்னரே முள்ளியவளையில் இருந்து இராச்சிய பரிபாலனம் செய்திருக்கவேண்டும்.

"முடிக்குரிய இளவரசர்களை சங்கிலி கொலை செய்வித்ததை அறிந்த பரராசசேகரன் தன்னையும் அவன் கொன்று விடுவான் என்று அஞ்சித் தன்னிடமிருந்த சேமதிரவியத்தை இராக்காலத்திலே யானைகளில் ஏற்றிக் கொண்டு போய் வன்னி நாட்டைச் சேர்ந்த பெருங்காட்டுக்குள்ளே சேமித்து வைத்து செங்கோலையும் முடியையும் கூட வைத்து உன்மத்த வைரவனைக் காவல் வைத்தான்." என வைபவமாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண அரசர்களான உக்கிர சிங்கனும், சங்கிலியும் வாவெட்டியில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்ததையும் வையாபாடல் தெளிவாகக் கூறுகின்றது. வாவெட்டிமலையையும் முள்ளியவளையில் உள்ள பரராசசேகரன் கோட்டையின் சிதைவுகளையும் அகழ்வாராய்ச்சி செய்யின் பெறுமதிமிக்க வரலாற்றுச் சான்றுகள் கிடைக்ககூடும். இத்தகைய ஆய்வு பல்கலைக்கழக மட்டத்தில் செய்யப்பட வேண்டும்.

# சதுரங்கம்



## புதிய உரிமையாளர்களும் பழைய உறுதியாளர்களும்!

1.

**யுத்தத்தினால** பாதிப்புற்றோர் எல்லோருமே தான். இதில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்தவர்களும் இல்லாதவர்களும் என்று வேறுபாடு இல்லை. எனினும் சுமார் 7 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமரச் செல்லும் மக்கள் பலர் தமது சொந்தவீட்டுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் விடயம் “அதியுயர் பாதுகாப்பு வலயம்” எனக் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு வெளியில் உள்ள நிலைமை.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் குடியேறச் சென்ற ஒரு மாவீரர் குடும்பத்தவர் ஒருவர் தனது வீட்டில் இருந்தவரிடம் சென்று “எப்ப நீங்கள் வீடுமாறப் போறீங்கள்?” என்று கேட்டார். வீட்டில் குடியிருந்தவர் பதில் பேசாமல் இருந்தார். தான் சொன்னது விளங்கவில்லையோ என நினைத்து திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டார்.

“இவ்வளவு நாளும் வன்னியில இருந்திட்டு வந்து எழும்பு எழும்பு எண்டா எழும்பேலுமே?” என்று பதில் கேள்வி கேட்டார். அது போதாதென்று அவரது மனைவி நாங்கள் எழும்புறதெண்டா போகேக்கை ஆமியிட்டை நீங்கள் மாவீரர் குடும்பமெண்டு சொல்லிப்போட்டுத்தான் போவம்.” என எச்சரிக்கை விடுத்தார்.

இன்றைய அரசியற் சூழ் நிலையில் கூட இப்படி எச்சரிக்கை விடுக்க முடிகின்றதென்றால்...?

**சங்கர்**

2.

**இன்னொரு** விடயம் ஒருவரின் தோட்டக்காணியை ஒருவர் கடந்த மூன்று வருடமாகப் பயன்படுத்தியிருந்தார். காணி உரிமையாளர் வன்னியிலிருந்து சென்றதும் “நான் மூண்டு வருசம் காணிக்க தோட்டம் செய்திருக்கிறன் தான். ஆனா பெரிய பெரிய மரங்களா இருந்த இந்த காணிய, வெட்டித்துப்புரவாக்க எனக்கு நாற்பதினாயிரம் முடிஞ்சது. எனக்கு அத நீங்கள் தரவேணும். குறைஞ்சது இருபதினாயிரம் எண்டாலும் தரவேணும்” என்றார் அவர்.

என்னைக் கேட்டா காணியை துப்புரவாக்கினாய் என்று கேட்கவிழைந்த அவர் எதற்கும் அயலில் உள்ளவர்களிடம் விசாரிப்போம் என எண்ணி அயலவரிடம் சென்றார்.

அவர்கள் கூறினார்கள் “அவர் சொல்வது பெரும்பாலும் சரியாயிருக்கலாம், ஆனால் அவர் சொல்லுறமாதிரி இந்தக் காணியில் வெட்டின மரங்களை என்ன விலைக்கு வித்தார் எண்டு கேட்டனிங்களோ? யாழ்ப்பாண விறகு விலைக்கு கணக்குப் போட்டுப் பாருங்கோ” என்று பதிலிறுத்தனர்.

3.

A- 9 வீதி திறக்கப்பட்டதும் வீட்டுக்காரர் வரப்போகிறார்கள் என உணர்ந்து வீடுகளில் புகுந்து கொண்டவர்களும் ஒரு ரகம், இவர்கள் தாம் இங்கிருந்ததற்கான வருடக்கணக்கான வரலாறு கூறுகிறார்கள். அதுதான் போக கோண்டாவிலில் நடந்ததைக் கேட்டால் தலை சுற்றும், தனது வீட்டில் கடை இருப்பதையும், சுமாரான வியாபாரம் நடப்பதையும் கண்ட வீட்டு உரிமையாளர் அங்கு குடியிருப்பவரிடம் போய்க் கேட்டார்,

குறுகிய கால அவகாசம் கேட்டால் அதை வழங்கத்தானே வேண்டும் என்ற நினைப்புடன் அணுகியவருக்கு கிடைத்த பதில்.....

“எனக்கு வேற ஒரு வீடு நீங்கள் பாத்து ஒழுங்கு பண்ணித்தாங்கோ. அதுக்குப் பிறகுதான் எழும்பலாம்.”

4.

**தூமாக** எடுத்துக் கொண்டவர்களின் செயல் இவ்வாறென்றால் பாதுகாப்புக்காக வேறு ஒருவரிடம் ஒப்படைத்தவரின் அனுபவம் வேறு மாதிரியாக அமைந்திருந்தது.

அந்த வீட்டின் ஒரு பகுதி வேறொருவருக்கு வருடக்கணக்கில் வாடகைக்கு கொடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் வாடகையும் பெறப்பட்டிருந்ததை காணமுடிந்தது. வீட்டுக்காரருக்கு இந்தத் தகவலை இத்தனை வருடமாக தெரிவிக்காமலிருந்தார் அந்தப் பாதுகாவலர்.

5.

**எல்லாவற்றையும** விட உச்சமானது யாழ்ப்பாணத்துக்கு மீளக்குடியமர வந்துள்ள முஸ்லிம் மக்களின் நிலை

நூற்றுக்கணக்கான உறுதிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதை அங்குள்ள ஒரு பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான ஒருவர் கூறி வருத்தப்பட்டார். கடந்த ஆறாண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் நடந்த கோளாறுகளுக்குள் இதுவும் அடக்கம்.

குடாநாட்டுக்குள் காலடி வைக்கும் மீள் குடியேற்றக் காரர்கள் மகா பொறுமைசாலிகளாக இருக்க வேண்டும் என்பதுதான் செய்தியோ?.

## மொனோ ஸோடியம் க்ளூட்ரமேற் கண்பார்வை திறனிழப்பை தரக் கூடியது

**ஆசிய** சமையல்களிலும் நொறுக்குத் தீனிகளிலும் பயன்படுத்தப்படும் மொனோ ஸோடியம் க்ளூட்ரமேற் (Mono Sodium Glutamate) ( அதாவது தற்போது அஜினோ மோட்டோ என்பது போன்ற பெயரில் விற்பனை செய்யப்படும்) உருசி வளம்படுத்திகளை அதிக அளவில் பயன்படுத்துவதால் நீங்கள் பார்வையிழந்து போகக் கூடும் என நியு சயன்ரிஸ்ற் ( New scientists) என்ற சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆய்வுக்கட்டுரை தெரிவித்துள்ளது.

கூடிய மொனோ ஸோடியம் க்ளூட்ரமேற் (MSG) செறிவு கொண்ட உணவுகள் ஊட்டப்பட்ட எலிகளின் கண்பார்வை இழப்பு ஏற்பட்டதோடு கண்ணின் பின்புறத்திலுள்ள ஒளியைக் கிரகிக்கும் விழித்திரை (RETINA) மெல்லியதாகி விடுவதும் நிகழ்ந்ததாக ஹிரோ சாக்கி பல்கலைக்கழகத்தின் (Hirosaki University) ஹிரோஷி ஒற்கூரோ (Hiroshi Ohguro) தலைமையில் இடம்பெற்ற ஆய்வு ஒன்று தெரிவீக்கிறது.

இவரது அணியானது 6 மாதங்களுக்கு எலிகளுக்கு உயர் மட்ட அளவு, நடுத்தர அளவு, அல்லது பூச்சி அளவிலான MSG கொண்ட உணவுகளை கொடுத்திருந்தனர். உயர்மட்ட MSG கொண்ட உணவை உண்ட எலிகளின் விழித்திரைகள் 75% வீதத்தால் மெலிதாகி போய்விட்டதோடு அவற்றிற்கு கண்பார்வை இழப்பும் ஏற்பட்டது. நடுத்தர அளவு கொண்ட MSG கொண்ட உணவை உட் கொண்ட எலிகளிலும் இதே மாதிரி யான பாதிப்புக்கள் குறைந்த அளவில் ஏற்பட்டன என்று மேற்படி பிரித்தானிய சஞ்சிகை தெரிவித் துள்ளது.

மூளைக்கலங்களுக்கிடையே சமிக்கைகளை அனுப்ப உதவும் ஒரு வகை அமினோ அமிலமாக இந்த MSG இருக்கிறது. முன்பு இந்த இரசாயனம் நேரடியாக கண்களுக்குள் ஊசிமூலம் செலுத்தப்பட்டால் நரம்புச் சேதங்களை ஏற்படுத்தும் என எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. எனினும் MSG யைக் கொண்டிருக்கும் உணவுகளும் இதே விளைவை ஏற்படுத்தக் கூடியவை என்று ஒற்கூரோவின் ஆய்வே முதன் முதலில் எடுத்துக் காட்டியுள்ளது. என





நியூ சயன்ரிஸ்ற் தெரிவிக் கிறது.

விழித்திரையை நனைத்துக் கொண்டிருக்கும் திரவங்களில் உயர்மட்ட MSG செறிவு இருப்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டு கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. விழித்திரையின் சில கலங்களில் ஒட்டிக் கொள்ளும் MSG அவற்றை அழித்து விடுவதோடு தப்பிப்பிழைத்திருக்கும் கலங்களின், மூளைக்குமின் சமிக்கைகளை அஞ்சல் செய்யும் திறனையும் பாதிப்புக்குட்படுத்தி விடுகின்றன என்பதே இவ்வணியினர் முன்வைத்திருக்கும் கோட்பாடாகும்

மூலம்: Daily news (25-10-2002)
தமிழில்: அனபாயன்.

## பேராளரின் தமிழ்ப்பற்று




மானுடத்தின் தமிழ்க் கூடல், கடந்த ஒக்டோபர், யாழ் வீரசிங்க மண்டபத்தில் இலங்கை,இந்திய பேராளர்களின் முன்னிலையில் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. அதில் நானும் ஓர் ஆர்வலராகக் கலந்து கொண்டேன். அங்கே, பல சிங்கள, தமிழ் பேராளர்களைச் சந்தித்து உரையாடவும், உறவு கொள்ளவும் முடிந்தது. இது புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைத்துக் கொடுத்த தற்காலிக உறவுப் பாலமே. எமக்கெல்லாம் கதைத்து மகிழ, அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நான்கு நாள் அவகாசம் கொடுத்திருந்தது.

நானும் காலையெழுந்து, புத்துணர்வுடன் வீரசிங்க மண்டபவாயிலை அடைந்த போது, அங்கே ஒரு பேராளர் யாரையோ தேடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவருக்குக் கிட்டத்தட்ட 53 வயதிருக்கும். நரைகளிற்குள்ளே சில கறுப்பு மயிர்கள். வெள்ளிநிறக்கண்ணாடி மூக்கின் மேலே குந்தியிருந்தது. அவர் ஒரு சிங்களப் பேராளர் என இனங்கண்டு கொண்டேன்.

நான் சாதுவாக,
“அப்பா வணக்கம்”
“வணக்கம் தம்பி”
“எங்க இருந்து வந்தனீங்க”
“நான் மாத்தறையில இருந்து”
“எப்பிடி இருக்கு மாநாடு....?”
“ம்....நல்லா இருக்கு..”
“என்ன..? ஒரு மாதிரிச் சொல்லுறியள்”
“என்ன தம்பி...? எவ்வளவு பேராளர்மார் வந்திருக்காங்க. அவங்களில ஒருத்தராவது இந்த மண்டபத்துக்கு முன்னால இருக்கிற நினைவாலைய சுவரில, எழுதியிருக்கிறதை கவனிச்சாங்களா...? நினைச்சா எவ்வளவு கவலையாயிருக்கு.”

1974ஆம் ஆண்டு யாழ் மண்ணிலே நான்காவது தமிழாராட்சி மாநாடு இடம் பெற்றது. இம் மாநாட்டிலே பலர் கலந்து கொண்டனர். அம் மாநாடு நடந்து கொண்டிருந்த போது சில துரோகிகளின் காட்டிக்கொடுப்பால் ஒன்பது அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள். அவர்களை எப்படி எங்களால் மறக்க முடியும்?

“பாத்த உடன கவலை வாற மாதிரி என்ன எழுதியிருக்கு...?” “அதா தம்பி, ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ எண்டெல்லோ எழுதியிருக்காங்கள். அதுவும், யாழ்ப்பாணத்தில எத்தின படிச்ச தமிழர்கள் இருக்கிற இடத்தில இப்பிடி தமிழைக் கொண்டிட்டாங்கள். எனக்கு அதைப் பார்க்க மனம் பொறுக்கேல்ல. எனக்குத் தமிழ் மேல சரியான பற்றுத் தம்பி. அதோட கடுமையான கோமமும் வந்துட்டுது”

ஏன் திடீரெண்டு கோபப்பட்டனியள்,?” “இவ்வளவு பேர் வந்த இடத்தில, ஒருத்தர் கூடக் கவனிக்கேல்லையே...? அதுக்கு முன்னுக்கு நிண்டு, அம்பெத் தெட்டுப் ‘போசில’ படம் மட்டும் எடுத்தாங்கள்.”

“அது சரி, பொதுவான இடத்தில எழுதியிருக்கேக்க, ஆர் திருத்திற தெண்ட பிரச்சினையும் இருக்கெல்லோ....”

“என்ன தம்பி? தாய் மொழியைக் காப்பாத்துறது ஒவ்வொருத்தரின்ர பொறுப்புத்தானே. ”

“அது சரி தான்”

“நான் றோட்டுக்கரையில கிடந்த கல்லை எடுத்துக் கொண்டு போய் அந்தச் சுழியைத் தேக்கத்தான் கொஞ்சப் பேர் வந்து நிண்டு வாய் பிளந்தினம்.”

“அவையள் ஒண்டும் சொல்லேல்லையே...?”

“தெரியும் தானே....? எனக்கு கேக்காதெண்டு நினைச்சுச் சொல்லிச்சினம். “இந்தக் கிழடுக்கு வேலையில்லை.” எண்டு. எவன் என்ன கதைச் சாத்தான் எனக்கென்ன? 25 வருசத்துக்குப்பிறகு யாழ்ப்பாணம்வந்து, தமிழுக்குப் பணி செய்த திருப்தி. எல்லாரும் உணர்ந்தாத்தான் தமிழ் மொழியைப் பாதுகாக்கலாம்.”

மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002 இன் 2ஆம் நாள் நிகழ்வில் ஈகைச்சுடரேற்றல்....” எனும் போதே,

“நிகழ்ச்சி தொடங்கப் போகுது உள்ள போவம்” என்றவாறு, அவ்விடத்தைவிட்டு அடியெடுத்து வைத்தோம். அவர் உள்ளே செல்ல, மீண்டும் ஆர்வம் என்னை இழுக்க நினைவாலயத்தின் முன்வந்து பார்க்கிறேன். கல்லால் தேய்ந்து பூச்சுக்களை இழந்த அந்த இடம். சரியான தமிழ் வடிவம் பெற்று செம்மையாகக் காட்சியளித்தது.

- வி. தேவபாணு -

கெட்ட செய்தி வேகமாக பாய்ந்து செல்லும்; நல்ல செய்தி, தயங்கித் தணிந்து செல்லும். -ஜான் மில்ட்டன்

# ஊர்கோலம்

## புல்லாங்குழல்களின் நன்றி

**சில** வாரங்களின் முன்னர் ' எரிக்கப்பட்ட புல்லாங்குழல்கள்' என்ற தலைப்பின் கீழ்' ஊர்கோலம்' பகுதியில் மூங்கிலாற்று பகுதி மூங்கில் மரங்களுக்கு ஏற்பட்ட பரிதாப நிலை குறித்து எழுதியிருந்தோம்.

அது அக்கறை மிக்கவர்களின் பார்வையில் பட்டுதோ என்னவோ, இப்போது அப்பகுதியில் எஞ்சியுள்ள மூங்கில் மரங்களை பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்க கூடியதாக உள்ளது. அந்தப் பகுதியில் மூங்கில் மரங்களைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை நாட்களும் கடும் கோடை வெயிலாலும், எரியூட்டப்பட்டதன்அனல் வீச்சாலும் கருகிச் சோர்ந்து மரணவிளிம்பில் நின்ற அந்த இயற்கை எழில் கொஞ்சும் மூங்கில் மரங்களில் அண்மைக்கால மழையின் தழுவல் நம்பிக்கைத் துளிகளை விடச் செய்துள்ளது இது பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது.

ஒரு நண்பர் கூறினார். உலகிலுள்ள மூங்கில் மரவகைகளுள் இது மிகவும் அபூர்வமானவகையென்று. தாவரவியலாளர்கள் இவரின் கருத்தை ஆராய்வது நல்லது

நமது வளங்கள் பலவும், இயற்கை தந்த கொடைகள் பலவும் எதிரிகளால் கடந்த காலங்களில் எவ்வாறு திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டது என்பதை நாமறிவோம். இந்த நிலை எஞ்சியுள்ள இந்த வளங்களை கவனமாகப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையினரிடம் அவற்றை ஒப்படைப்பது எமது பொறுப்பேயாகும்.

இவையனைத்தும் எங்கள் தாயக பூமி எமக்காகத் தந்துள்ள பாரம்பரியச் சொத்து. இதனைப் புரிந்து கொண்டும் அந்த மூங்கில்மரங்களுக்கு பாதுகாப் பளிக்க முன்வந்தவர்களுக்கு நன்றி.

## ஆத்மாவின் குரல்

**கிளிநொச்சி** துயிலுமில்லத்தில் மாவீரர் நாளன்று நிகழ்வுகளின் உணர்வுபூர்வத்தன்மையைப் பார்வையிட்ட வெளிநாட்டில் இருந்துவந்த நண்பர் ஒருவர்- 'இது மாவீரர் துயிலும் இல்லமல்ல... துயிலும்ஆலயம்' என்றார்

' ஏன் அப்படிச் சொல்கிறீர்' எனக் கேட்டதற்கு

'உலகிலுள்ள எத்தனையோ மதவழிபாட்டுத் தலங்களுக்கும் கோயில்களுக்கும் நான் போயுள்ளேன்.... ஆனால் இந்த இடத்தில் நிற்கும் போது ஏற்படும் உணர்வு இருக்கிறதே அது போல் எங்குமே எனக்கு ஏற்படவில்லை. ஆலயங்கள் வணக்கஸ்தலங்களுள் ஒரு ' அமானுஷ்ய சக்தி' இருப்பதாக இருக்கலாம் ஆனால் இங்கு ' மானுட சக்தி' உள்ளது. அது சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது, வியப்பை ஏற்படுத்துகிறது, கண்ணீர் பெருக வைக்கிறது கையெடுத்துக் கும்பிட வைக்கிறது. அதை விட நாங்களும் இந்த மண்ணில் விதையுண்டிருப்போரின் இரத்த உறவுகள் என நினைத்துப் பெருமைப்பட வைக்கிறது....' என்று சொல்லிக் கொண்டே போனார் சொல்லும் போது அவரில் ஒரு உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஒரு நடுக்கம் தென்பட்டது. வார்த்தைகளை கோர்வையாக்குவதில் சிரமம் காணப்பட்டது.

கடைசியாக அவர் கூறிய வார்த்தைகள்-

' கோயில்களும் வணக்கஸ்தலங்களும் தெய்வங்களின் புராணங்கள் பற்றிய கதைகளைக் கூறலாம் ஆனால் இந்த இடம் மனித புனிதர்களின் கதைகள் பற்றிய புராணங்களை எதிர்காலத்தில் உருவாக்கப் போகின்றது....

அவரின் ஆன்மாவில் இருந்த வார்த்தைகள் தான்....

## யானைபார்த்த குருடரா?

" **எல்லோருமே** யானை பார்த்த குருடர்கள் தானா? "என்ற கேள்வியை தலைப்பாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு வாசகர் கடிதம் அனுப்பியிருந்தார்.

" 2002 மாவீரர் நாள் உணர்த்தும் செய்திகள்" என்ற தலைப்பில் சங்கர் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாக அக்கடிதம் அமைந்திருந்தது. இக் கட்டுரை முழுப்பரிமாணங்களையும் கொண்ட தல்ல என்பது அவரது வாதம்.

புல்டோசர்கள் போட்டு துயிலும் இல்லங்களை துவம்சம் செய்தாலும் கட்டிடங்கள் கல்லறைகளைத்தான் உங்களால் உடைக்க முடியும் மாவீரர் நினைவுகளை எமது மனங்களிலிருந்து அகற்ற முடியாது என்பதை யாழ்குடா நாட்டு மக்கள் சிதைக்கப்பெற்ற அத்தனை துயிலுமில்லங்களிலும் கண்ணீரோடு சத்தியம் செய்தது ஒரு முக்கியமான விடயமல்லவா?

யாழ், குடாநாட்டுக்குள்ளேயே இம் முறைதான் நயினாதீவில் மாவீரருக்கு சுடரேற்றப்பட்டது என்பதும் முக்கியவிடயம்.

இம் முறைதான் வெளிநாடுகளில் இருந்தும் பலர் தம் உறவுகளுக்கு தீபமேற்றவென முதன் முறையாக தமிழீழத்துக்கு வந்திருந்தனர். இதுவும் இன்னோர் அம்சம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அவர் குறிப்பிட்டவற்றை உங்களுக்குத் தந்துள்ளோம். சங்கரின் கட்டுரையிலும், இவ்வாசகரின் கடிதத்திலும் உள்ள விடயங்களுக்கு அப்பாலும் சில விடய ங்கள் இருக்கலாம்.

ஏனெனில் இந்த வாசகரின் கடிதத்தின் தலைப்பு அப்படி.

## நியாயமான கவலை

**அண்மையில்** கலையார்வம் கொண்ட சில நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தது. பேச்சு பல்வேறு விடயங் களைச் சுற்றி கடைசியில் சினிமாவில் வந்து நின்றது. ' எவ்வளவோ சர்வதேச தரம் வாய்ந்த பல்வேறு மொழிப்படங்கள் உலகெங்கும் பல்வேறு மொழிகளில் வெளியான வண்ணம் இருக்கின்றன. வர்த்தக ரீதியில் வெற்றி பெறா விட்டாலும் கூட கலாபூர்வமாக உச்சத்தரத்தில் இருக்கும் இப்படங்கள் ' மனிதம்' குறித்த பல்வேறு சிந்தனைகளையும் எழுப்பும் ஆற்றல் கொண்டவை. பொழுது போக்கிற்கு அப்பாலும் மனிதர்களுக்கு, அவர்களின் உணர்வுகளுக்கு, உரம் சேர்ப்பவை. இத்தகைய படங்கள் எங்கள் கலைஞர்களுக்கு திரைப்பட ஆர்வலர்களுக்கு, துறை சார் தேடல் கொண்டவர்களுக்கு பார்க்க கிடைக்காதது துர்ரதிர்ஷ்டமே. கொழும்பில் இவற்றை தனப்பட்ட அமைப்புக்கள் எடுத்து திரையிடுகின்றன.ஏன் யாழ்ப்பணத்திலும் பல்கலைக்கழக மட்டத்தில் இந்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வன்னிப் பெருநிலம் வாழ்மக்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பு எட்டாக் கனியாக உள்ளது' என்று அந்த நண்பர்கள் பலரும் வருத்தம் தெரிவித்தனர்.

நியாயமானது தான்.

வெறும் மூன்றாந்தர பொழுது போக்கு படங்களை அது வெளிவந்த சில நாட்களுக்குள்ளேயே வன்னியில் பார்க்கக்கூடிய நிலை இருக்கையில் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பதாக இல்லை.


திரைப்பட வெளியீட்டுப் பிரிவும் கலை பண்பாட்டுக்கழகமும் - நிதர்சனமும் ஏன் இந்த ஆர்வலர்களின் ஆதங்கத்தை தீர்க்க முயற்சி எடுக்கக் கூடாது. இது ஒரு வேண்டு கோளல்ல.... கடமைப் பொறுப்பை நினைவூட்டும் கருத்து மட்டுமே.....

இதற்கு இடையே கிளிநொச்சியில் ஒரு அமைப்பு இதே போன்றதொரு பணியில் செயலார்வத்துடன் ஈடுபடத்தொடங்கியுள்ளதாகவும் இந்த வகையில் 'குட்டி' என்ற படம் திரையிடப்பட்டு அதன் விமர்சனக் கலந்துரையாடலும் நடைபெற்றதாக செய்திகள் மூலம் அறிய நேர்ந்தது. சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக மேற்கொள்ளும் முயற்சி பாராட்டுதற்குரியது.

பாதசாரி

# பன்முகம் 1

## கவிச்செருக்கு







**என்னதான்** ஒருவர் தன்னிடம் செருக்கு இல்லை என்று கூறினாலும் 'விரலுக்குத்தக்க வீக்கம்' என்பது போல் அவரிடமும் செருக்கு இருக்கவே செய்யும்.

உண்மையான கலைஞனுக்குள் உள்ள செருக்கை சாதாரண வழக்கில் கூறுவது போன்று 'தலைக்கணம்' என்று கொச்சைப்படுத்திவிட முடியாது. ஏனெனில் கலைஞரில் பலருக்கு ஏற்படும் செருக்கானது சுயகௌரவம், தன்னம்பிக்கை என்பன காரணமாக ஏற்படுவதாகும். அந்தக் கலைஞனுக்கு உரிய பலமும் அதுதான், பலவீனமும் அதுதான்.

*''மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ*
*உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்''*

என்று கூறி தலைமைக் கவிஞன் என்ற பதவியை தூக்கி எறிந்துவிட்டு சோழ நாட்டில் இருந்து கம்பனை வெளியேற வைத்தது இந்தச் செருக்குத்தான்.

'ஔவையை' 'அடி' என்று விளிக்க விரும்பிய ஒரு புலவன் ஒற்றைக்காலடி நாலிலைப் பந்தலடி' என்று புதிர்போட அதைப் புரிந்துகொண்ட ஔவையும் கேள்விக்குப் பதிலாகக் கூறிய பாடலில்

*''எட்டேகால் இலட்சணமே எமனேறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே- முட்டமேல்*
*கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே*
*ஆரையடா சொன்னாயடா''*

என்று கூறியது கூட அவரிடமிருந்த செருக்கின் காரணம்தான்.

சின்னஞ்சிறு வயதுக்கு முதல் தன்னை அன்பு செய்து மதித்து தன் வளர்ச்சியையும் ஆற்றலையும் கண்டு பெருமிதமடைந்த எட்டயபுரத்து மன்னனின் முன் கைகட்டி நிற்க முடியாது வெளியேறிய முண்டாசுக் கவிஞன் பாரதியிடம் இருந்ததும் அதே செருக்குத்தான்.

தன்னை வரும்படியாக தெருவில் கண்டு அழைத்து விட்டு தேடிச் சென்றபோது உரிய வரவேற்புக்கொடுக்காதது மட்டுமல்ல தான் வரும் வரை காத்திருக்கும்படி சொல்லியனுப்பிய தொழில் அதிபருக்கு

*''தாயால் பிறந்தேன்*
*தமிழால் அறிவுபெற்றேன்*
*நாயேன் உன்னை*
*நடுத்தெருவில் சந்தித்தேன்*
*நீயார் என்னை*
*நில்லென்று சொல்ல.....''*

என, துண்டுக் காகிதத்தில் கவிதை எழுதி அதனை அந்தத் தொழில்அதிபரிடம் கொடுக்கும்படி கூறிவிட்டு தன்னை மதிக்காத அவரது முகத்திலேயே விழிக்க விருப்பமின்றி வெளியேறிய கவிஞர் பட்டுக்கோட்டையார் செயலும் அதே செருக்கின் பாற்பட்டதே.

அரச கரும மொழியாக சிங்களத்தை ஏற்றுப்படிக்க மாட்டேன் எனச்சபதமிட்டு தான் வகுத்துவந்த அருமந்த அரச பதவியையே துச்சமெனத் தூக்கியெறிந்து விட்டு வெளியேறியவரும் தமிழீழ விடுதலைப் போருக்காக தன்னையும் தன் உறவுகளையும் அர்ப்பணித்து வாழ்பவரும். தமிழீழத்தின் அற்புதமான கவிஞர் என்று அழைக்கத் தகுதி வாய்ந்தவரும் உணர்ச்சிக் கவிஞருமென அழைக்கப்படுபவருமான கவிஞர் காசிஆனந்தனின் பதவிதுறப்பில் இருந்ததும் செருக்குத்தான்.

தென்தமிழீழத்தின்இன்னுமொரு பெருங்கவிஞன் நீலவாணன்....

இலங்கை வானொலிக்கு தன கவிதை ஒன்றை ஒருமுறை எழுதியனுப்பினார். கவிதையோ தரமான கவிதை. அங்கு உள்ளவர்கள் கவிஞரைத் தெரிந்து செய்தார்களோ தெரியாமல் செய்தார்களோ ஆனால் கவிஞரின் அனுமதியின்றி தமது விருப்பம்போல் கவிதையைத் தணிக்கை செய்து விட்டனர். அவ்வளவுதான். கவிஞருக்கு வந்ததே கோபம். தொடர்ந்தும் அந்தக் கவிஞருக்கு உரிய கவிச்செருக்கே சும்மாயிருக்க விடுமா 'பக்' என்று கவிதை சுரந்தது. காகிதத்தையும், பேனாவையும் எடுத்தார்.

*''அங்கொடையில் இருந்தவனை*
*அட்டமியில் கூட்டி வந்து*
*என் கவிதை தணிக்கை செய்ய*
*ஏன் வைத்தாய் பராபரமே!''*

இதுதான் கவிஞர் நீலவாணன் எழுதிய நான்கு வரிப்பாடல். கவிதை என்னவோ வசைக் கவிதையாகத் தோன்றினாலும் அதன் பொருளும் சுவையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது.

உண்மையான கவிஞனிடம் செல்வம் இருக்காது. செல்வாக்கு இருக்காது இந்தச் சுயகௌரவம் எனும் செருக்கு இல்லாவிடில் அவன் கவிஞராக இருக்கவும் முடியாது என்பதுவே உண்மை.

நாவண்ணன்

## பெண் படைப்பாளிகளுக்கான மாபெரும் இலக்கியப்போட்டி -2002

2ம் லெப். மாலதி நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்திய கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் மற்றும் குறுநாவல் போட்டி முடிவுகள் 20-12-2002 வெள்ளிநாதத்தில் வெளியிடப்படும் என்பதை அனைத்துப் படைப்பாளிகளுக்கும் அறியத்தருகின்றோம்.

கப்டன் வானதி வெளியீட்டகம்
தமிழீழம்

## அந்தியேட்டி அழைப்பிதழ்



அமரர்.

**திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி**

(சிமோல்)

(தபால் ஊழியர்-அக்கராயன் குளம், வட்டக்கச்சி உபதபாலகங்கள்)

(சப்பச்சிமாவடி சாவகச்சேரி)

பிறப்பு 14-08-1945 | இறப்பு 14-11-2002

அன்புடையீர்! கடந்த 14-11-2002 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14-12-2002 சனிக்கிழமையும், வீட்டுச்சாந்திக்கிரியைகள் 15- 12-2002 ஞாயிற்றுக்கிழமையும், வட்டக்கச்சி அரசினர் பண்ணைக்குப் பின்புறமுள்ள இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தந்து மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றுவதுடன் தயவு கூர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தபால் திணைக்களத்தினர் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

முக்கிய குறிப்பு: தயவு கூர்ந்து இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிகவும் அன்புடன் வேண்டுகிறோம்.

அரசினர் பண்ணை பின்புறம்
இல,848,சிவிக்ஸ் சென்ரர்,
வட்டக்கச்சி.

(2662)

கந்தசாமி -செல்வராணி(மனைவி)
கந்தசாமி -திருச்செந்தூரன்(மகன்)
(இளவேனில் வாணிபம்-வட்டக்கச்சி)
கந்தசாமி -திருவருட்செல்வி(மகள்)

## இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர" வடபகுதி களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாய சேவை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம் விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள




**வேலும் மயிலும் களஞ்சியம்**

353, முதன்மைச்சாலை. (ஈழநாதம் பணிமனை முன்பாக) கிளிநொச்சி.

(சி-7531)

## விரைவில்!

ஈழநாதத்தின் வார இதழ் வெள்ளி நாதத்தில்....

**ஓயாத அலைகள் 02**

சித்திரத்தொடர் கதை

தொடர்கதை வெளிவரும் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் உங்கள் விளம்பரம் வெளிவரவேண்டுமா?... தொடர்புகளுக்கு...

ஈழநாதம்
முதன்மைச் சாலை,
கிளிநொச்சி.

## 1ம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில் 07 - 01 - 1984

தாயக மண்ணில் 15 - 12 - 2001

**லெப். கம்பன்**

(ஜெயபாலன் ஜெயபிரதாப்)

(100,கல்மடு II ,இ.இ குளம் வவுனியா)

ஓடோடி வந்ததடா ஓராண்டு
உனை இழந்து விம்மும்...
எங்கள் உள்ளங்கள் கரைகின்றதே...
கண்ணீரில் நித்தமும் ஏங்குகிறோம்.
நின் முகம் காண.
பாசப்படகில் எம்மை ஏற்றி...
துடுப்பெடுக்க நீ ... மறந்ததேனோ
மண் வாசம் உனைத் தடுத்ததனாலோ?
கனக்கின்ற எம் நெஞ்சம்
கண நேரம் பொறுக்கின்றது.
வீரத்தின் விழுதுகள் வீழ்வதில்லையென்பதால்

15-12-2002 அன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்

முகவரி-
934,ஆஸ்பத்திரி வீதி, வட்டக்கச்சி

உன் நினைவில்
குடும்பத்தினர்.

(2259)

## அன்பான வேண்டுகோள்

எங்கள் அன்பிற்குரியவர்களே!

திரைப்படங்கள் மகிழ்ச்சியாக பொழுதினைப் போக்குவதற்கு மட்டும் உரியனவையல்ல. அவை நல்ல கருத்துக்களை, எண்ணங்களை, நற்பண்புகளை, எங்கள் மத்தியில் வளர்க்கவும், உதவவேண்டும். எம் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக சமகாலத்தில் போராடி வருபவர்கள் நாங்கள். எனவே பெண்களை ஒடுக்கும், இழிவுபடுத்தும், மடமைக் கருத்துக்களை சொல்லும் பாலியல் உணர்வுகளை தூண்டிவிடும் கீழ்த்தரமான காட்சிகளையும் இந்நோக்கில் அமைந்த சில திரைப்படங்களையும் தணிக்கை செய்து வருகின்றோம். நல்ல திரைப்படங்கள் உங்கள் இரசனையையும் வளர்க்க வேண்டுமெனவும் நாம் விரும்புகிறோம்.

எனவே எம்மால் அனுமதிக்கப்பட்ட திரைப்படங்கள் தவிர்ந்த தென்னிந்திய மற்றும் வேற்றுமொழி திரைப்படங்களை பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம். திருட்டுத்தனமாக, இரகசியமாக, சமூகச் சீரகேட்டுச் சக்திகளால் திரையிடப் படும் மோசமான படங்களை உங்கள் உறவுகளும், இளையதலைமுறையும் பார்த்து சீரழிந்து போகாமல் தடுக்கும் எமது பணிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் வேண்டுகின்றோம். மற்றும் சமூக மேம்பாட்டினை இலக்காகக் கொண்ட திரைப்படங்கள் உங்களுக்கு கிடைத்தால் எமது தொடர்பகங்கள் ஊடாக எமக்கனுப்பி அனுமதியைப்பெற்று திரையிட்டு பார்க்குமாறு அன்புரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம். எமது தாயகத்தில் அமைதியும், ஒழுக்கமும் நிலவினாலே நாம் மகிழ்வுடன் வாழ முடியும் எனச் சொல்லி விடை பெறுகின்றோம்

அன்புடன்,
திரைப்பட வெளியீட்டுப்பிரிவினர்.

(2655)

நீ புரிந்து கொள்ளாவிடில், உலகில் மிக மேலான சொற்கள் கூட வீணான வெற்று ஒலிகள் தான். -அனட்டோல் ஃபிரான்ஸ்

## நேர்நோக்கு

# பரிதாபத்துக்குரியவர்கள்...

சிறிலங்காவின் 54 வருடகால சுதந்திர வரலாற்றின் அரைவாசிக்காலம் யுத்தம் நடத்துவதிலேயே கழிந்திருக்கிறது. முதல் அரைவாசிக் காலத்தின் ஆரம்ப காலப் பகுதியில் ஒற்றையாட்சிக்குள் சமஉரிமையுடன் வாழத்தயாராக இருந்த தமிழர்களுக்கு சிறு சலுகைகளை வழங்கக் கூட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இருக்கவில்லை. அத்துடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த கல்வியறிவு அவர்கள் வகித்த உயர் பதவிகளைக் கண்டு பெறாமையுற்று அவற்றை இல்லாது ஒழித்துவிட பல்வேறு நடவடிக்கைகளையும் அவர்கள் எடுத்தனர்.

பின்னர் கூட்டாட்சி முறையின் கீழ் ஒரேநாடாக வாழ தமிழ் மக்கள் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவுற்றது. அதற்கென மென்முறை வழியில் அவர்கள் நடத்திய போராட்டங்களை வன்முறை கொண்டு சிங்களத் தலைவர்கள் அடக்க முற்பட்டனர்.

ஆட்சிக்கட்டிலில் ஏறுவதற்காக மட்டும் தமிழ் மக்களுக்குச் சில சலுகைகளை வழங்கும் ஒப்பந்தங்களை எழுதினர்; பின்னர் அவற்றையும் கிழித்து வீசினர்.

தமிழ் மக்கள் தமது தாயக நிலம் என்று கூறிக்கொள்ள ஒரு நிலப்பரப்பு இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அவர்களது நிலங்களில் மிகத்தீவிரமாக ஏற்படுத்தினர். ஆரம்பத்தில் டி.எஸ் சேனாநாயக்காவினால் "தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள்'' என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் தொடரப்பட்டு காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் பெருமளவு நிலங்கள் பறிக்கப்பட்டன. பின்னர் தமிழர் நிலங்களில் அவர்களைப் படையினர் மூலம் விரட்டிவிட்டு இராணுவ வலயங்களை உருவாக்கி அங்கு சிங்களவர்களைக் குடியேற்றும் 'மணலாற்று' ஆக்கிரமிப்பு வரை தொடர்ந்தது.

1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவில் கொண்டு வரப்பட்ட அரசியல்யாப்பு கூட்டாட்சிமுறையில் சிங்கள தேசத்துடன் இணைந்துவாழ முடியும் என தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை முற்றாக இல்லாது ஒழித்தது; பிரிந்துபோதலே வாழ வழி என முடிவுக்கு வந்து அதற்கான போராட்டங்களை ஆரம்பிக்க வைத்தது இந்தப்போராட்டம் ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்து இடைவிடாத பெரும் யுத்தமாக வெடித்தது.

இக்காலப்பகுதியில் தமிழ்மக்கள் மீது ஏவிவிடப்பட்ட அரச பயங் கரவாதம் கொஞ்சநஞ்சமல்ல. இவ்வாறு ஏவப்பட்ட அரச பயங்கரவாதம் தான் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் விரிவடையக் காரணம் என்பது சிங்கள தேசத்தை ஆட்சிபுரிந்து யுத்தத்தின் இறுதிப்பகுதியை தீவிரமாக வழிநடத்திய சனாதிபதி சந்திரிகாவின் கருத்து. இதனை அவர் ஐ.தே.க வின் கடந்த கால ஆட்சிமீது குற்றம் சுமத்துவதற்காகக் கூறியிருப்பினும், தமிழ் மக்கள் சிங்கள தேசத்தின்மீது நம்பிக்கையிழக்கக் கூடிய சம்பவங்கள் நடந்தேறியகாலப்பகுதியும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த காலப் பகுதியும் பண்டாரநாயக்கா குடும்பத்தவரின் ஆட்சிக்காலப் பகுதிதான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

சிங்களம் மட்டும் ஆட்சிமொழி, தமிழ்த்தலைவர்கள் மீதான வன்முறை, தமிழ் மக்கள் மீதான வன்முறை, தமிழ் மாணவர்களின் உயர்கல்வி மீதான தரப்படுத்தல் தாக்குதல், தமிழ் மக்களுக்குச் சிறிதளவேனும் அரசியலமைப்பு ரீதியாக இருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்த 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு, ஏழுவருட காலம் நடத்தப்பட்ட கொடூர யுத்தத்தினால் தமிழ் மக்கள் சந்தித்த, இடப்பெயர்வுகள் அவலங்கள் என்பன 3 பண்டாரநாயக்காக்களின் ஆட்சிக் காலத்திலேயே நடந்தேறின.

இதில் முற்பகுதிகளில் பண்டாரநாயக்காவின் இன்றைய குடும்ப வாரிசாகிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு நேரடித்தொடர்பு இல்லாவிட்டாலும் இறுதி 7 வருடகால யுத்தத்தை நடத்தி தமிழ்மக்கள் என்றுமே சந்தித்திராத துன்பங்களுக்கு உள்ளாக்கியதில் அவருக்கு நேரடிப் பங்கு உண்டு. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தைக் கருவறுக்கவென தமிழ் மக்களின் போராட்ட சக்தியாகிய விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிக்கப்படாது பாடுபட்டார். அதில் அவருக்குக் கிடைத்தது படு தோல்வியே.

இந்த முயற்சியை இவர் மட்டுமல்ல இவருக்கு முன்பிருந்த மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிகளும் தீவிரமாக மேற்கொண்டனர். "நாட்டின் துரிதமான அபிவிருத்திக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்டதொரு தலைவர் தேவை. - சுயமாக, துரிதமாக முடிவெடுத்துச் செயற்படும் அதிகாரம் கொண்ட ஒரு தலைவர் மூலமே இன்றைய உலகத்தின் வளர்ச்சிப் போக்குடன் போட்டிபோடக் கூடிய வகையில் நாட்டை முன்னேற்ற முடியும்" எனக்கூறி உருவாககப்பட்ட சனாதிபதி பதவியை வைத்துக்கொண்டு, அப்பதவியை வகித்த நால்வருமே சிறிலங்காவை அபிவிருத்திப் பாதைக்கு அழைத்துச் செல்லவில்லை மாறாக அழிவுப்பாதைக்கே அழைத்துச் சென்றனர்.

இவர்கள் பொருளாதார அபவிருத்தி வீதத்தை மறைப் பெறுமானத்திற்கு கொண்டு செல்லும் வரை அனைத்து வழங்களையும் திருப்பி யுத்தத்தை நடத்தியும் அதில் கண்டதும் ஏமாற்றமே.

இவ்வாறான நிலையிலும் யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விடவேண்டும்-அதாவது தமிழர் உரிமைப்போராட்டத்தை முறியடித்துவிடவேண்டும் என்ற கோட்பாட்டை இன்றும் வெளிப்படையாகக் கூறிவரும் அரசியல் கட்சியாக ஜே.வி.பி இருக்கின்றது.

இவ்வளவு துன்பங்களையும், அழிவுளையும், சந்தித்த பின்பும் சிங்கள மக்களுடன்இணைந்து அதேவேளை தங்களின் உரிமைகளுடன் வாழத்தயாராக தமிழ் மக்கள் இருக்கையில், இதனை முதலில் வரவேற்றிருக்க வேண்டிய இடது சாரி முலாம்பூசிய ஜே.வி.பி.யினர் இடதுசாரிகளின் அடிப்படைக் கொள்கைக்கே மாறாக யுத்த கோசமெழுப்பி வருகின்றனர்.

ஆனால் இதெல்லாம் தமிழ் மக்களுக்கு புதிய விடயமோ, ஆச்சரியம்தரும் விடயமோ அல்ல. அவர்களின் கடந்த 54 ஆண்டுகால அனுபவம் சிங்கள இனவாதி ளையும் ஆட்சியாளர்களையும், ஆட்சியைப் பெறத் துடிப்பவர்களையும் துல்லியமாக எடைபோடக் கூடிய ஆற்றலை வழங்கியிருக்கிறது.

அவர்களின் அபிலாசைகள் நீதியான நேர்மையான, உலகத்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறநெறிக் கோட்பாடுகளுக்கு உட்பட்டவையாக இருப்பதால் தான் அவர்களால் தமது போராட்டத்தை இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும் உறுதியாக முன்னெடுத்துச் சென்று வெற்றி காணவும் முடிந்தது.

இதனைக் கருத்தில் எடுக்காது இடப்படும் கூச்சல்களும் கோஷங்களும் கூச்சலிடுபவர்களுக்கே பயன்தருவதாக அமையப்போவதில்லை. யுத்தம் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என அவர்கள் உண்மையிலேயே நம்புபவர்களாக இருந்தால் அவர்களையிட்டுப் பரிதாபப்படுவதைத்தவிர வேறு வழியில்லை.

**வேலவன்**

(2ம் பக்க தொடர்ச்சி)

கற்பனைத் திட்டமிடல்களுடன் பொதுமக்கள் மத்தியில் பேசத் தொடங்கியுள்ளனர்

- பிரதமராகி, பின் சனாதிபதியாகும் கனவுகளுடன் அநுராபண்டாரநாயக்கா விடும் அரசுக்கு எதிரான மிரட்டல்களும் - ஏன் அமெரிக்காவிற்கே விடுக்கும் அறிவுறுத்தல்களும் - அவரின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான தெளிவாக்கலுடன், சனாதிபதியின் ஆலோசகர் என்ற தகுதியில் அவரின் இக்கருத்துக்கள் சனாதிபதியின் உள்ளக்கிடைக்கைகளின் வெளிப்பாடுகள் தான் என்பதையும் உணர்த்துவதாக உள்ளது.

தங்களைப் பொதுசன ஐக்கிய முன்னணியின் 'புதிய எஜமானர்களாகக்' காட்டிக் கொண்டு 'அரசியல் கூத்தாடும் 'ஜே.வி.பி உண்மையில் ரணிலின் ஆட்சியைக் கலைப்பதற்கான சந்திரிகாவின் நோக்கத்தை நிறைவேற்றி தமக்கான அரசியல் ஆதாயங்களை 'மாற்று அரசாங்கத்தில்' பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அரசியல் ரீதியில் குழப்பங்களை உண்டுபண்ணி மற்றொருவகையில் - கிளர்ச்சியை ஏற்படுத்தும் 'அடியாட்க'ளாகவே இயங்கிவருகின்றனர். மாணவ சக்தியையும், தொழிலாளர் அமைப்புக்களையும் இதெற்கெனப் பயன்படுத்த இவர்கள் திட்டமிட்டும் வருகின்றர்.

இந்த அக-மற்றும் புறச்சூழலில் தான் அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்கள் தொடங்கியுள்ளன. இந்த முன்னெடுப்புக்களின் வெற்றியென்பது , இதனை குழப்ப முனைப்புடன் செயற்படும் சக்திகளின் சதிகளை முறியடிப்பதில் தான் பெருமளவில் தங்கியுள்ளது.

அரசும்- சர்வதேசமுமே, இந்த சமாதானவிரோத சக்திகளை கட்டுப்படுத்தி, அவர்களின் அமைதி எதிர்ப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் முறியடிக்க வேண்டிய பொறுப்பினையும் ஏற்க வேண்டியவர்களாவர்.

---

## படித்ததில் பிடித்தது

# வரவேற்பு...!

'சிறிலங்கா புத்தகசாலை' யிலிருந்து 'தாமோதரவிலாசி' ற்குள் நான் நுழைந்தபோது வெட்கப்பட்டுச் சிரித்துக் கொண்டு, அவன் என்னைவரவேற்றான். நானும் பதிலுக்குச் சிரித்தேன்.

கைகழுவிவிட்டு உள்ளுக்குள் சென்று அமர்ந்தபோது முன்னுக்கு வந்து, "என்ன சாப்பிடுறீங்க" என்று ஆதரவாகக்கேட்டான்.

நான் சொல்லியபடி அவன் கொண்டுவந்து வைத்த வடையைச் சாப்பிடத் தொடங்கியபோது,

"உங்கட ஊர் இங்கயா? லீவில வந்தனீங்க போல?"

அவன் கேட்டான்.

''ஓம்'' நான் தலையை ஆட்டினேன்.

"எங்க?"

"குருநகர். பழைய போஸ்ற் ஒவ்வீஸ்... அதுக்கங்கால கொஞ்சம் போகவேணும்."

" நான் அங்கால பொக இல்லை."

மேலே ஒன்றுமே தோன்றாதபடி நின்றான். பழையபடி அதே வெட்கம் நிறைந்த சிரிப்பு.

நான்தான் தொடர்ந்தேன்.

"அந்தக் கொழும்புக் கடைய ஏன் விட்டனீர்?"

" சம்பளங் காணாது."

''இஞ்சவந்து, இப்ப எத்தினமாதம்.?"

" அஞ்சு மாதம்"

"அங்கயும் இப்ப எல்லாம், புது ஆக்கள்"

"ரீ மேக்கர்...?"

"ஓ! அந்தாள், பழைய ஆள்."

அவன் உள்ளுக்குப் போனான்.

"இதார்?" யாரோ கேட்டார்கள்.

'' நான் நிண்ட கொழும்புக்கடைக்கு சாப்பிட வாற..."

அது அவனின் குரல்தான். வேறு ஒன்றும்கேட்கவில்லை வடைகளைச்சாப்பிட்டுவிட்டு தேத்தண்ணீருக்குச் சொல்ல ஆளைப்பார்த்தபோதும் அவன் வரவில்லை வேறொரு பெடியன் வந்தான்.

நான், 'ஸ்றோங்கப் ரீ' க்குச் சொல்லிவிட்டு இருந்தேன். அப்போது, அவன் என்னைக் கடந்து முன்னுக்கு கஷியர் மேசைக்குக் கிட்டப் போனான். உடனே திரும்பிவந்தவன் என்னைப்பார்த்து விட்டு, மெல்லிய ஓட்டத்தோடு உள்ளுக்குச் சென்று 'கப் ரீ' யைஎடுத்து வந்தான்.

'ரீயைக் குடித்து விட்டு பக்கத்துக் கதிரையிலிருந்த புத்தகப் பாசலையும் எடுத்துக் கொண்டு எழும்ப ஆயத்தமான போது அவன் சொன்னான்:

"பில்ல நான் குடுத்திற்றன்."

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"எங்க?" நான் கேட்டேன்.

''இல்ல... நான் அங்க குடுத்திற்றன். இப்பதான் காசு குடுத்தனான்'' என்றபடி அதே வெட்கச் சிரிப்புடன் கஷியரைக் காட்டினான்.

நான் எதிர்பார்க்கவேயில்லை! எழும்ப ஆயத்தமானனான் அப்படியே கதிரையில் இருந்தேன். எனக்கு ஒரே ஆச்சரியம். இப்பொழுதுதான், அவன் உள்ளுக்குப் போய்விட்டு வந்தது விளங்கியது.

உடனே எழுந்து சென்றுவிடாதபடி, அவனது செய்கை என்னைக் கட்டுப்படுத்தியது அவனோடு இன்னும் நெருங்க வேண்டுமென்று நினைத்து,

" உம்மட பேர்...? வேதம் எண்டு தெரியும்: பேர் ஞாபகத்திற்கு வருவதில்ல.."என்றபடி அவனைப் பார்த்தேன்.

அவன் சிரித்தபடி சொன்னான் "மரியசூசை"

"இப்பவும் அங்க ஒரு வேதக்காறப் பெடியன் நிக்கிது: பேர் அந்தோனியாயிருக்க வேணும்."

"ஆ...: எனக்குத் தெரியாது"

தொடர்ந்து ஓர் மௌனம்.

நேரம் போய்க் கொண்டிருந்தது: பப்ளிக் லைபிறறிக்கும் போக வேணும்.

அந்த இதமான மௌனத்தோடேயே நான் போவதற்காக எழும்பி,

"அப்ப... நான் வாறன்" என்று சொன்னபோது அவன் சரி என்பதைப்போல் தலையாட்டி, என்னைத் தொடர்ந்து வந்தான்.

கஷியருக்குக் கிட்ட வந்தபோது நான் திரும்பினேன். ''சரி..., வாருங்க" என்று என்னைப்பார்த்து சொன்னான்.

எதற்கோ அவன் பெருமிதப் படுவது தெரிந்தது. கஷியரும் பழகியவரைப்போல் சிரித்தார்.

"சரி: அப்ப நான் வாறன்..." அவனுக்குச் சொல்லியபடி வெளியே வந்தேன்.

சைக்கிளை எடுத்து ஏறி அமர்ந்து ஓடியபோதும், அவனின் ஞாபகம்......

"மரியசூசை..."

வெள்ளவத்தையில, 'மஹாலஷ்மிபவானில' நாங்க கதைச்சிருக்கிறம். தேத்தண்ணீக்கடைப் பெடியங்களில, எனக்கு எப்பவும் அனுதாபம். காலமையில இருந்து ராப் பத்து மணிவரை, ஓ...! இந்த நீண்ட நேரம் இவங்க வேலை செய்ய வேணும்...

கடைக்கு வந்தபோது நான் ஆதரவாக நடந்து கொண்டது அவனை என்மேல் ஈடுபாடு கொள்ளச் செய்திருக்கலாம். அவனின் தோற்றத்திலும், பழக்கத்திலும் எனக்கும் ஒருவித பிடிப்பு எப்பவோ ஒருக்கா அவனின் பேரைக் கேட்டு வேதக்காரனெனத் தெரிந்தபோது எனக்கு ஆச்சரியம். அவனது ஊர் நாவலப்பிட்டி: 'அப்ப தோட்டக் காட்டிலும் வேதக்காறர் இருக்கினம்...'

நானும் வேதக்காரனென்பதை அவனுக்குத் தெரியப்படுத்தினபோது அவனுக்கு ஆச்சரியம். மேலும் ஒருவித அக்கறையுடனும் மரியாதையுடனும் அவன் நடந்து கொண்டான். இதைவிட குறிப்பிடத்தக்க தொடர்பு ஏதும் எனக்கும் அவனுக்குமில்லை.

இப்ப, யாழ்ப்பாணத்தில் ஐஞ்சு மாதத்திற்குப் பிறகு அவனைச் சந்தித்தபோது, தனக்குத் தெரிஞ்ச ஒருவரை பழக்கமானவரை, தன்னுடைய வீட்டில் - கடையில் வரவேற்க விரும்பினானா...?

"மரிய சூசை..."

இதை என்னால் மறக்க முடியாது!

**அ.யேசுராசா**





என்றுமில்ல[illegible]று ஒரு பெரும் காட்டுத்தீ அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரை சூழ்[illegible]ளது. தன் வீட்டு வளவின் உள்ளேயே அத்துமீறி நுழைந்த காட்டுத்தீயை அணைக்கும் சிட்னி நகரப்பெண்மணியுடன் தீயணைப்பு வீரர் ஒருவர். இத் தீ சிட்னியில் தற்காலிக காலநிலையை பெரிதும் பாதித்துள்ள.

# படமும் தகவலும்






ஈராக்கில் [illegible]வு தரும் ஆயுதங்கள் உள்ளனவா என்று ஐ.நா சோதனையா[illegible] சோதனை மேற்கொள்ளும்வேளை போருக்கான தயார்படுத்தல் பயிற்சியில் ஈடுபடும் அமெரிக்க படையினரும் (குவைத்தில்) ஈராக்கினால் கையளிக்கப்பட்ட ஆயுத விபரங்களடங்கிய கோப்புக்களும்.



ஜப்பானிய டோக்கியோ நகர் ஒன்றில் இடம்பெற்ற சிறுவர் பாடசாலை கண்காட்சி ஒன்றில் அவர்களால் உருவாக்கப் பட்ட ரோபோ இயந்திர சாதனம் ஒன்றும், அவற்றை இயக்கி வேடிக்கை காட்டும் ஜப்பானிய சிறுவர்களும்.





செவ்வாய் கிரகத்தின் வட முனைப்பகுதியில் ஆச்சரியப் படத்தக்க வகையில் பெருமளவு நீரைக் கொண்ட மண் அமைப்புத் தென்படுவதாக நாசாவினுடைய செவ்வாய்க்கான ஆய்வு விண்கலம் ஓடிசி (Odyssey) சமிக்கைகள் வெளியிட்டுள்ளது. சன்பிரான் சிஸ்கோவில் உள்ள அமெரிக்க ஜியோபிசிக்கல் யூனியனின் வருடாந்த ஒன்று கூடலில் நாசா இதை வெளியிட்டுள்ளது.



கலிபோர்னிய கரை அல்லது பசிபிக் தீவுகள் ஊடாக ஜப்பானில் இருந்து அமெரிக்கா வந்ததாக கூறப்படும் ஒரு ஆதி இனக் குழுமத்தின் மண்டை ஓடு ஒன்றை பரிசோதிக்கும் லிவ பூலின் யோன்மூர்ஸ் பல் கலைக்கழக விஞ் ஞானி ஒருவர்.

இம்மண்டைஓடு 13000 வருடங்கள் பழமை வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.